# சைவத்தை அறியுங்கள்

## க. கணேசலிங்கம்



உலக சைவப் பேரவை

இந்தியக் கிளை

# சைவத்தை அறியுங்கள்

க. கணேசலிங்கம்

உலக சைவப் பேரவை
இந்தியக் கிளை

சைவத்தை அறியுங்கள்

'சித்தாந்தரத்தினம்' க.கணேசலிங்கம்
கவிஞர், பொறியியலாளர்
(குப்பிழான், யாழ்ப்பாணம்)

உரிமை : ஆசிரியருக்கு

முதற்பதிப்பு : 1500 படிகள், யூலை 1998

பக்கம் : 160

வெளியீடு : உலக சைவப் பேரவை, இந்தியக் கிளை சார்பில் க.கணேசலிங்கம், 9/2 பீச் ஹோம் அவென்யு, பெசன்நகர், சென்னை 600 090, இந்தியா.

அச்சிட்டோர் : மாசறு D.T.P.
75, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005, இந்தியா.

**Saivaththai Ariyunkal**

by
K.Ganesalingam, B.Sc.(Eng.),
C.Eng., M.I.E.E.(Lond), M.I.E(Cey.)
9/2 Beach Home Avenue, Besant Nagar,
Chennai 600 090, India.

**Published in conjunction with *The First Saiva Conference* of the Federation of Saiva (Hindu) Temples - U.K. on 11th and 12th July 1998 at London.**

Rs 40.00 (India)
£ 3.50 or equivalent

**SWAMI SIVA NANDHI ADIKALAAR**
CHAIRMAN AND CHIEF EXEQUTIVE
**WORLD SAIVA COUNCIL**
C/o London Meikandar Aadheenam
(U.K. Regd Charity Trust)
72, King Edward Rd, London E17 United Kindom

## வாழ்த்துரை

இன்றைய 20ம் நூற்றாண்டுச் சூழலில் எமது பழம்பெரும் பாரம்பரியமான சைவசமயத்தின் நிலை மிகவும் கவலைக் குரியதாக உள்ளது கண்கூடு. இதற்கான காரணங்களை ஆராய்ந்தும், அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய செயல் திட்டங்களை உருவாக்கியும் இயன்றளவு செயற்படுவது உலக சைவப் பேரவையின் தலையாய குறிக்கோளாகும்.

சைவசமய வீழ்ச்சிக்கு இரு முக்கிய காரணங்களைக் குறிப்பிடலாம். ஒன்று, சைவத் தமிழர்கள் மத்தியில் நிலவிவரும் கிறித்தவம், வேதாந்தம் போன்ற அன்னிய அயல் வழக்குகளின் ஊடுருவல்கள். மற்றையது, நமது சைவர்களிடையே பெரும்பாலும் சைவசமய அடிப்படை அறிவோ, சைவ சித்தாந்த கொள்கைத் தெளிவோ இல்லாமை. இந்த வீழ்ச்சியைத் தடுப்பதற்கு உலகளாவிய சைவசமயப் பிரச்சாரமும், சைவசமயம் பற்றி எளிதாக எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்த நூல்கள் வெளியிடுதலும் உடனடித் தேவைகளாகும்.

இந்தச் சீரிய பணியில் தன்னை அர்ப்பணித்துள்ளவர் எமது பேரன்புக்குரிய 'சித்தாந்தரத்தினம்', பொறியியலாளர் சிவத்திரு க. கணேசலிங்கம் அவர்கள். சைவசித்தாந்த சாத்திர நூல்களை துறைபோகக் கற்றுத் தெளிந்த இவர், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயர் குறிக்கோளோடு, சைவத்தை அறியுங்கள் என்னும் அரிய நூலில் மிக எளிய நடையில் சைவசமயத்தை அறிமுகப்படுத்துகிறார்.

160 பக்கங்கள் கொண்ட நூலில் 19 அத்தியாயங்களின் மூலம் சைவத்தின் சாராம்சமெல்லாம் இரத்தினச் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருப்பது நூலின் தனிச் சிறப்பு. AN OUTLINE OF SAIVAISM என்ற ஆங்கிலத் தொகுப்புரை வெளிநாட்டுச் சைவர்களுக்கு பயன்தரும் என்பது உறுதி. உலக சைவப் பேரவையின் சார்பில் நூலாசிரியர் சிவத்திரு கணேசலிங்கம் அவர்களுக்கு எமது பாராட்டுக்கள். உலக சைவர்கள் இந்த அரிய நூலை ஆதரித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

அருளாசி நல்வாழ்த்துக்களுடன், அன்பே சிவம், "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

01.06.1998 — சிவசிவ

உ
சிவமயம்

# மதிப்புரை

திரு. கு. வைத்தியநாதன் அவர்கள்
இயக்குனர், திருவாவடுதுறை அதீன சைவசித்தாந்த
நேர்முகப் பயிற்சி மையம், திருவிடைமருதூர்.

சைவத்தை அறியுங்கள் என்னும் தலைப்பில் வெளிவரும் இந்நூலில் அரிய பல செய்திகள் உள்ளன. இதன் ஆசிரியர் திரு.க.கணேசலிங்கம் அவர்கள் நமது பயிற்சி மையத்தில் மூன்றாண்டுகள் பயின்று 'சித்தாந்த ரத்தினம்' என்னும் பட்டம் பெற்றவர். எதையும் கூர்ந்து நோக்கி ஆய்வு செய்யும் சிறந்த அறிஞர் அவர்.

இந்நூலில் பத்தொன்பது கட்டுரைகள் உள்ளன. முதற்கட்டுரை ஆங்கிலத்தில் அமைந்துள்ளது. அக் கட்டுரையில் நூல் முழுவதும் இடம் பெறும் செய்திகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. ஆசிரியரின் ஆங்கில நடை அழகாக இருக்கிறது.

'சைவத்தின் தொன்மையும் சிறப்பும்' என்னும் இரண்டாவது கட்டுரையில் காணப்படும் 'வேள்வி செய்தல் போன்ற வடமொழி வேதக் கருத்துக்கள் சைவத்திற்கு உடன்பாடற்றவை' என்ற நூலாசிரியரின் கருத்து ஆகமச் சைவத்தில் அவருக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டையும், கலப்படம் மிகுந்துள்ள வைதீக சைவத்தை எதிர்க்கும் துணிவையும் காட்டுகிறது. பெரிதும் பாராட்டப்படுதற்குரிய செய்தி இது.

அடுத்து வரும் ஆறு கட்டுரைகள் சைவசித்தாந்த அடிப்படைச் செய்திகளைக் கூறுகின்றன. சைவ சமயத்தவர் தமது தத்துவத்தை அறியக்கூடிய வகையில் எளிமையாக விளக்கப்பட்டுள்ளன. பிற கட்டுரைகளில் சித்தாந்த சைவர் கடைப்பிடிக்க வேண்டிய பல செய்திகள் இடம்பெறுகின்றன.

'சைவக் கோயில்கள்' என்னும் கட்டுரையில், திருக்கோயிலின் அமைப்பை மனித உடலோடு ஒப்பிட்டுக் கூறியிருப்பது சிறப்பாக உள்ளது. கொடிமரம் குறித்த விளக்கம் அருமை. 'வழிபாட்டு முறைகள்' என்னும் கட்டுரையில் வழிபடு தெய்வத்தை வழிபடுவதின் இன்றியமையாமை குறித்து ஆசிரியர் அனுபவித்து எழுதியிருக்கிறார். 'தெய்வத்தின் திருவுருவங்கள்', 'திருநீறும் திருவைந்தெழுத்தும்' போன்ற கட்டுரைகள் சைவ மக்கள் அறிந்திருக்க வேண்டிய அரிய கருத்துக்களைக் கூறுகின்றன.

திருமுறைப் பகுதி மிகச் சிறப்பாக உள்ளது. 'பெருமைமிகு திருத்தொண்டர்' என்னும் கட்டுரையில் 'அப்பாலும் அடிசார்ந்தார்' என்னும் தொடர் தமிழகத்தில் மட்டுமன்றி, அதற்கு வெளியேயுள்ள அடியாரையும் குறிக்கும் என்ற விளக்கம் சைவம் உலகளாவிய சமயம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

இறுதியாக அமைந்த 'சைவசித்தாந்த நூல்கள்' என்ற கட்டுரைத் தொடர், சித்தாந்த நூல்கள் குறித்த அரிய அறிமுகமாக அமைந்துள்ளது. பதினான்கு மெய்கண்ட நூல்களையும் அறிமுகம் செய்யும் ஆசிரியர், ஒவ்வொரு நூலிலிருந்து ஒவ்வொரு பாடலை உதாரணமாகத் தருவது சிறப்பானது.

ஆசிரியர் இந்நூலை அமைத்திருக்கும் முறை நன்றாக உள்ளது. சைவ சமயத்தவர் தம் சமயத்தை அறிய உதவுவதோடு, அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளையும் உணர்த்துகிறது. ஆசிரியரின் சைவப்பற்றையும் இது விளக்குகிறது.

மிக அருமையான நூல். அனைத்துச் சைவர்களின் வீட்டு நூலகங்களிலும் கொலு வீற்றிருக்கத்தக்க பெருமைக்குரிய நூல்.

வாழ்த்துக்கள்,
அன்பன்

25.6.1998 கு.வைத்தியநாதன்

# முன்னுரை

*ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை*
*புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.*

எந்தச் சமயத்திலும் பொதுவாகத் தமது சமயத்தைப்பற்றி அறியாதவராகப் பலருள்ளனர். சைவத்தைப் பொறுத்தவரை இந்த நிலை மிகவும் கவலையளிப்பதாக உள்ளது.

தமது சமயக்கொள்கை என்ன, தத்துவம் என்ன என்று அறியாத நிலையில், எம்மதமும் சம்மதம் என்றும், எல்லாம் பிரமம் என்றும், சமயங்களிடைச் சமரசமென்றும் பேசிக் குழம்புகின்றனர். பிற மதத்தவரைப் பின்பற்றுவதும், பிற தெய்வங்களை வணங்குவதும், போலிச் சுவாமிகளைத் தேடி ஓடுவதும் சமய நெறிகளாகக் கருதப்படுகின்றன.

சில ஆண்டுகளின் முன் பேராசிரியர் வை.இரத்தின சபாபதியுடன் உரையாடும் பொழுது, சைவமக்களுக்குக் கொள்கைப் பிடிப்பு இல்லாமையே இதற்கு முக்கிய காரணமென வருத்தத்துடன் கூறிய அவர், இந்த நிலையை மாற்ற என்ன செய்யலாம் என்ற கேள்வியை எழுப்பினார். உடன் பதிலளிக்க இயலவில்லையாயினும், இதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தில் உதித்தது. ஒரு வகையில் இந்த எண்ணத்தின் வெளிப்பாடே இந்நூல் என்று கூறலாம்.

சைவ சித்தாந்தம் குறித்த ஒரு நூல் எழுத எண்ணியபொழுது, சைவத்தின் அடிப்படைக் கருத்துக்களை எல்லோரும் எளிதில் அறியும்படியாக எழுத வேண்டுமெனச் சில அன்பர்கள் கருத்துத் தெரிவித்தனர். அவர்களில் இலண்டனில் இருக்கும் எனது

உடன்பிறவாச் சகோதரன் சி.பிரேமச்சந்திராவும், உலக சைவப்பேரவை இந்தியக் கிளையின் செயலாளர் முருகு. இராமலிங்கமும் குறிப்பிடத்தக்கவர்கள்.

மேலை நாட்டிலுள்ளவருக்குப் பயன்தரும் வகையில், சைவத்தைப்பற்றிச் சுருக்கமாக ஆங்கிலத்தில் ஒரு கட்டுரையை உள்ளடக்கும்படி ஆலோசனை தந்து, இந்நூல் எழுத ஊக்குவித்தவர் இலண்டன் மெய்கண்டார் ஆதீனம் *சுவாமி சிவநந்தி அடிகளார்* அவர்கள். அவர் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ளார். திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மைய இயக்குனர் *கு. வைத்தியநாதன்* அவர்கள் இந்நூலை வரவேற்று வாழ்த்தியதுடன் முகவுரை தந்துள்ளார். பயிற்சி மைய வெளியீடுகளுக்கு இவர் எழுதிய உரைகள் சைவ சித்தாந்தத்தை எளிய முறையில் விளக்குபவை. இப்பெருமக்களுக்கு என்றும் நன்றியுடையேன்.

இந்நூலில் ஆழ்ந்த தத்துவக் கருத்துக்கள் தவிர்க்கப் பட்டுள்ளன. எளிமையாக எழுதுவதற்கு ஆலோசனை வழங்கி, கடினமானவற்றை விலக்கப் பெரிதும் துணை நின்றவர் எனது மனைவியின் சகோதரி பராசக்தி சுந்தரலிங்கம் அவர்கள். அவர் ஒரு அனுபவம் மிக்க சிறந்த ஆசிரியை. இத்தகைய பணிகளில் ஈடுபடும்பொழுது, வீட்டுப் பொறுப்பிலிருந்து விலக நேரிட்ட வேளைகளில், பொறுமை காத்து ஊக்குவித்தவர் எனது வாழ்க்கைத் துணைவி யோகேஸ்வரி. இறுதி நேரத்தில் அச்சுப் பிழை பார்த்து உதவியவர் நண்பர் வே.திருநாவுக்கரசு அவர்கள். இவர்களுக்கும் நூலை அழகுற அமைத்து உதவிய மாசறு D.T.P. பதிப்பகத்தாருக்கும் எனது நன்றி.

சைவத்தை அறியுங்கள் என்ற இந்நூல் சைவத்தை அறியாதவர்களைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்டது. ஆயினும் இது அனைவருக்கும் பயன்படுமென நம்புகிறேன்.

யூலை, 1998 க.கணேசலிங்கம்

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| வாழ்த்துரை | 3 |
| மதிப்புரை | 4 |
| முன்னுரை | 6 |
| 1. An Outline of Saivaism | 9 |
| 2. சைவத்தின் தொன்மையும் சிறப்பும் | 19 |
| 3. சிவம் எனும் செம்பொருள் | 24 |
| 4. சார்ந்தே இருக்கும் உயிர் | 31 |
| 5. அறியாமை செய்யும் ஆணவம் | 36 |
| 6. இருள்சேர் இருவினை | 41 |
| 7. மாயை எனும் உட்பொருள் | 48 |
| 8. ஆன்ம வளர்ச்சி | 53 |
| 9. சைவக் கோயில்கள் | 62 |
| 10. தெய்வத்தின் திருவுருவங்கள் | 70 |
| 11. வழிபாட்டு முறைகள் | 80 |
| 12. விரதங்கள் | 89 |
| 13. திருநீறும் திருவைந்தெழுத்தும் | 99 |
| 14. சைவத்திருமுறைகள் (1) | 106 |
| 15. சைவத்திருமுறைகள் (2) | 117 |
| 16. பெருமைமிகு திருத்தொண்டர் | 124 |
| 17. சமயகுரவர் வரலாற்றுக் குறிப்பு | 132 |
| 18. சைவ சித்தாந்த நூல்கள் (1) | 143 |
| 19. சைவ சித்தாந்த நூல்கள் (2) | 152 |

# AN OUTLINE OF SAIVAISM

*தென்னா டுடைய சிவனே போற்றி*
*எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி.*

*Praise to Siva of the southern land*
*Praise to the God of every land.*

These words of the Saiva Saint Manikkavasagar suggests that the God who is common to the whole world is worshiped as Siva in the Tamil land. They also reflect the universal character of the Saiva religion, the doctrine of which is not of a parochial nature.

The Saiva religion considers Lord Siva as its primary God. With some variations, it is practised as Kashmir Saivam in northern India, Vira Saivam in the central region and Siddhanta Saivam in southern India. Henceforth the word Saivam or Saivaism will refer to the Siddhanta Saivam.

## Ancient Faith

The origin of Saiva religion dates back to pre-historic period. The earliest available literature which gives some evidence of the Saiva faith is a collection of Sanskrit works called Vedas. Because of this, Saiva religion and Siva worship were considered to be of Vedic origin. However, the findings of Mohenjadaro-Harappa excavations have clear indications of Siva worship during the pre-vedic period. These excavations also suggest the existence of a civilization which was not only pre-Aryan, but also of Dravidian origin. Following statement of Sir John Marshall acknowledges this view:

*Among the many revelations that Mohenjadaro and Harappa have in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivaism has a history going much to the chalcolithic age or perhaps even further still, and that it takes place on the most ancient living faith in the world.*

Even those who attribute Siva worship to the vedic period are of opinion that Rudra in Vedic literature came to be identified with the God of the ancient indigenous people, which was Siva. Of the four Dravidian languages spoken now, Tamil is the oldest and richest language. The word Dravidian can, therefore, without any hesitation be taken to mean 'Tamilian' of South India. It is relevant to quote the following words of G. U. Pope from his book 'Tiruvacagam':

*Saivaism is the oldest prehistorian religion of South India, essentially existing from pre-Aryan times.*

It is a common practice to call Saivaism as Hinduism or as a branch of it and to refer the Saivaites as Hindus. The word *Hindu* is a transliteration of the word *Sindhu* and used originally by the alien rulers to identify the region of Sindhu river. The people south of this were referred to as Hindus and their religion as Hinduism. Accordingly all religious sects in India should be grouped together by the name Hinduism. But in practice, Hinduism has come to denote those religions which consider the Vedas as their authority. Today Vedanta has gained prominence as the philosophy of Hinduism mainly due to the influence of great scholars like Maxmuller and Swami Vivekananda. Saivaism which does not accept major portions of the Vedas and the

Vedanta philosophy cannot he called Hinduism or a branch of it.

**Saivaism in Tamil Land**

Some aspects of Saivaism and its philosophy are seen in Tholkappiam, the earliest treatise on Tamil grammar. Some of the grammatical expressions and verbal usages such as *uyir, mei, vinai,* etc., are identical with those in the Saiva philosophy. Even the word 'Kadavul' which is in common vogue now is seen in this ancient treatise. Unless the Saiva faith was in existence in the Tamil land long before the period of Tholkappiam such usages of words and identification to Saiva philosophical terms would not have been possible.

The book Thirukkural is a great contribution of the Tamils. It deals with every aspect of life - social, ethical, philosophical, etc., - and reflects the culture and civilization of the Tamil people. Though secular in its expression, many of its couplets reflect Saiva doctrine and its philosophy. Contents of these couplets and even the verbal usage had gone into the later Tamil literary and Saiva religious works.

Reference to Saiva religion and its doctrine are found in most of the Sangam works. The epics of Silappathikaram and Manimekalai, though propagating Jain and Budhist faiths, refer to various aspects of Saivaism, including the dance of Siva, panchadchara mantra, attributes of Siva, His activities and the prevailing branches of Saivaism. Manimekalai is the first Tamil literature where Siva is spoken in His eight forms (அட்டமூர்த்தம்).

## Saiva Renaissance

The period between the 3rd and 6th century after the common era was considered a dark period in the history of the Tamils. Tamil land was ruled by some invaders from the north, called Kalabrar, who had an alien language and religion. Historical record relating to them and this period is not clear.

During this period the Tamil language and Saiva religion were gradually going into oblivion. The culture of the Tamils was disintegrating. The religion of Jainism, with the blessing of the rulers, was spreading fast. By divine grace, as if to arrest this declining trend, the Tamil land saw the advent of Saiva Saints called Nayanmars who, by their devotion to Lord Siva and the outpouring of devotional hymns, restored the linguistic, religious and cultural heritage of the Tamils. Saint Thirugnanasambandar and Saint Thirunavukkarasar were mainly responsible for the ushering in of the Saiva renaissance. They and other Saints like Karaikkal Ammaiyar were the pioneers of Bhakthi movement in the Saivaite world and instilled self respect and courage with devotion to Lord Siva.

Nayanmars were Saiva Saints with ardent devotion to Lord Siva. They carried strong conviction that all souls are his servants, everything is his possession and every happening is by His Grace. They had an unbreakable allegiance to God. Periapuranam, a religious epic by Saint Sekkilar, narrates the lives of sixty-three Nayanmars, with high literary flavour. As seen from their lives, the Nayanmars were not concerned with anything except their unstinted dedication to Lord Siva. Saint Manikkavasagar

says that he seeks the company of devotees of Siva and not the lordly life, he accepts even hell if this was the will of the Lord, and he will not worship any other God except Siva. (Thiruvasagam, verse 2 of Thiruchchathakam). Saint Appar sings in the same vein telling that he would neither be subject to anyone nor fear death. (யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்). Such display of resolute devotion and fearlessness is seen in the words and lives of these saints.

The hymns of Saints Thirugnanasambandar, Thirunavukkarasar and Sundharamoorthy are called Thevarams. Saint Manikkavasagar's works are Thiruvasagam and Thirukkovaiyar. The words of these Saints were divine. Saint Thirugnanasambandar says at one place 'My words are His words' and in another place 'His words are my words'.

By their devotional hymns of Thevarams and Thiruvasagam, these four saints, called 'Samaya Kuravar', did things impossible. They cured the incurable, gave life to the deceased and performed many miracles. They demonstrated the power of God's name, Thiruneeru the holy ash and the Panchadchara mantra.

The devotional outpourings of these Saints are of literary excellence. Though adoration of the Lord takes a prominent place, human emotions, divine ecstasy, beauty of nature and quality of life also find expression. The devotional hymns of these saints and other saints were classified under twelve volumes called 'Thirumurais'.

When different disciplines encouraged different paths which are difficult to follow for God realisation, the Saiva

Nayanmars showed the path of devotion or bhakthi as an easy way. Saint Manikkavasagar says that the God get enmeshed in the net of devotion. (பக்தி வலையில் படுவோன் காண்க).

**Temple and Deities**

Encouraged and inspired by the lives and works of Nayanmars, the rulers of Tamil land built magnificent Siva temples which are noted for their architectural beauty and majestic appearance. Significant contributions were made by the Chola and Pallava kings to the temple architecture and design. The idols in the temples speak of fine craftsmanship and aesthetic sense of the Tamils. They are of philosophical and religious significance to the Saivaites in general and scholars in particular.

The image of Nadarajah is expressive of the five-fold activities of Siva and the philosophical vision of the Saiva Saints. The world renowned scholar critic Anandha Coomarasamy sees it as philosophy, poetry and science, and says:

> *No artists of today, however great could more exactly or more wisely create an image of the Energy which science must postulate behind all phenomena. It is poetry, but nevertheless the truest science.*

The temple design and the worship of deities are governed by Saiva Agamic traditions. Like Vedas, Saiva Agamas were written centuries before the christian era. Unlike Vedas which had their origin and existence in the north of India, Agamas existed in the south. They were originally in the grantha script which was not in use in the north.

Vedas contain many and varied information which had given way to diversified interpretations and different doctrines. Saiva Agamas speak of rituals and philosophy of Saiva religion. Saint Thirumoolar, perhaps because of this, says that Vedas are of general and Agamas are of particular interest to Saiva religion. Distinctly of Dravidian culture, the Agamas lay certain criteria for the design and installation of sacred images and deities in the temples and the rituals relating to them. The images in Saiva temples are different aspects of Siva, called *Siva Moorthams*. A Saivaite is discouraged from worshipping Gods other than these moorthams. Worship of minor deities (siru theivankal) and self-styled Godmen is generally a hindrance to one's progress in the spirtual journey. Saint Thirunavukkarasar speaking of the saiva devotees says that we do not go and worship minor deities. (சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோமல்லோம்).

**Saiva Siddhanta Philosophy**

The philosophy of Saiva religion is Saiva Siddhantam. *Siddhantam* means the ultimate truth. Thirumanthiram is the earliest Tamil work where the word *Siddhantam* finds expression. Elements of this philosophy are found scattered in Vedas, particularly Vedantas, Agamas, early Tamil works and devotional hymns of Saiva Saints. Saint Meikandar (13th Centuary A.D.) codified these philosophical thoughts and brought out a brilliant exposition of Saiva Siddhanta Philosophy in his work *Sivagnanabodham*. This work is considered the primary text of Saiva Siddhanta Philosophy. Fourteen Saiva Siddhanta works including Sivagnanabodham, are called *Meikanda Sastras* which are the authoritative works of the Saiva Siddhanta Philosophy. Two of these

works belong to the earlier period than that of Sivagnanabodham.

Saiva Siddhantam posits three entities as eternal. They are *Pathi* or God, *Pasu* or Soul and *Pasam* or Bondage (materials of bondage). God is one and souls are many. Pasam consists of *Anavam, Kanmam (Karma)* and *Maya*. The Vedanta views Soul or Atma as a part of Brahmam or God, and it comes out of it and goes back to it. Maya is an illusion. These Vedanta Views are not acceptable to Saiva Siddhantam. According to Saiva Siddhantam everything is seen as real and nothing is of illusory nature.

In the Siddhanta Philosophy Maya manifests itself as the body, its parts including the sense organs, the world and the materials of enjoyment or experience. These are called *Dhanu Karana Bhuwana Bhogam*. Birth and death are mere transformation from one state to another, an evolution from Maya and involution to it. Saiva Siddhantam believes that only that which is in existence appear in any form and nothing comes out of void. This concept is called 'satkariyavadham' which is similar to the scientific view that energy is only transferable from one form to another and neither created nor destroyed.

Every religious tradition acknowledges evil. Yet it has defied solution in most of the traditions. Vedantic tradition views it as Brahmam 'somehow' becoming souls entangled with ignorance or evil. Biblical tradition attributes the evil of the souls to the original sin of its ancestor Adam. While the former dismisses any acceptable reason for it, the latter accepts an unjust transmission of evil or sin to the innocent souls from Adam. The Saiva Siddhantam offers

a plausible explanation that the eternal souls are enveloped with the evil called *Anavam* and the all merciful God is always with the souls helping to free them from its influence and bondage.

**Liberation and Bliss**

Anavam is the cause of ignorance and misery of the souls. The soul's power to know, act and desire is not only obscured by it but also made imperfect and improper. To free the souls from the bondage of anavam, God, like a potter making pots from clay, creates the body with the sense organs, and the universe, from the subtle energy called maya. With these, the souls engage in activities (karma) in the world, gain experience and knowledge and leave the world after a prescribed period. Again they take birth according to their previous karma and the cycle repeats. Karma means both action and the fruit of action.

The soul gains experience and through it the required knowledge to distinguish the real and unreal, while going through its life cycles. The shackle of anavam which causes its ignorance gets loosened and the soul gains mental equipoise to take up good and bad in the same way. God's Grace then descends on it resulting in spiritual Liberation and Bliss.

These processes are called *malaparipaakam, iruvinaioppu* and *saththinipatham* in the Saiva philosophy. Saivaism does not believe in eternal heaven in a single birth or eternal hell. It considers Liberation or Mukthi and Divine Bliss as the 'birthright' of every soul.

For the soul's spiritual progress Saivaism offers certain practices to suit the aspirants at different stages of development. *Sariyai, Kriyai, Yogam* and *Gnanam* are four paths to progress. It is also necessary that every aspirant should strive to maintain high moral standards and develop such positive qualities as love, kindness, truth etc., and desist from all negative qualities which hinder one's spiritual yearning. Siva himself is identified with love (அன்பே சிவம்) by Saint Thirumoolar who says 'Ignorant are they who say Siva and Love are separate.' (அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்). Understanding the Saiva philosophy, chanting the Thirumurais or sacred hymns and following the prescribed paths to spiritual progress will make one spiritually matured and take him to Siva's lotus feet which is His Grace.

Saiva Siddhanta Philosophy which explains the nature of God, Soul and the material world, their relationship to one another, and the way to Liberation and Bliss, is praised by scholars as a perfect system of human thought.

> *The Saiva Siddhanta Philosophy is the Choicest product of the Dravidian intellect. It is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all religions of India. It is peculiarly the South Indian and Tamil Religion.*
>
> *- Dr. G. U. Pope*

# சைவத்தின் தொன்மையும் சிறப்பும்

சைவம் சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சமயம். அது எப்பொழுது தோன்றியது, எவரால் தோற்றுவிக்கப்பட்டது என்று கூற முடியாத வரலாற்றுப் பழமை வாய்ந்தது.

இன்று நிலவும் சைவத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இந்தியாவின் வடக்கே நிலவும் காஷ்மீர சைவம், நடுப்பகுதியில் நிலவும் வீர சைவம், தெற்கே நிலவும் சித்தாந்த சைவம் என்பன இவை. இவற்றின் தத்துவங்கள், கோட்பாடுகள் ஆகியவற்றில் சில வேறுபாடுகள் உள்ளன. ஆயினும், அவற்றின் அடிப்படைக் கொள்கைகளில் வேறுபாடு இல்லை.

சைவ சித்தாந்தத்தைத் தத்துவமாகக் கொண்டு விளங்குவது சித்தாந்த சைவம். இக்கட்டுரையிலும் இனி வரும் கட்டுரைகளிலும் இது சைவம் என்றே குறிக்கப்படும். இச்சைவம் இந்தியாவில் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பிறநாடுகளிலும் விளங்குகிறது.

## வேதம், ஆகமம்

சைவத்தை அறிவதற்கு வேதம், ஆகமம் பற்றிய அறிவு பயனுள்ளது. வேதம் என்ற சொல் 'வித்' என்ற வடமொழிச் சொல்லை வேராகக் கொண்டது. 'அறிதல்' என்பது இதன் பொருள். ஆகவே வேதங்கள் என்பதை அறிவு நூல்கள் என்று கொள்ளலாம். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு பகுதிகளாக இவை உள்ளன. இதனால் இவை *நால்வேதம்* என்றும் *நான்மறை* என்றும் கூறப்படும்.

வேதங்களில் இறுதியாக வந்தவை *உபநிடதங்கள்.* இறுதியாக (அந்தமாக) வந்தவை என்பதால் இவை *வேதாந்தம்* என்றும் கூறப்படுகின்றன. வேதங்களின் முக்கியமான அறிவுசார் பகுதியாக (ஞானபாதமாக) இருப்பதாலும் இவை வேதாந்தம் எனப்படும்.

ஆகமம் என்பதற்கு ஒன்றிலிருந்து வந்ததென்பது பொருள். அது இறைவனிலிருந்து வந்ததென்பர். சைவ ஆகமங்கள் இருபத்தெட்டு. இவை மூல ஆகமங்கள் எனப்படும். இவற்றைவிட உப ஆகமங்களும் உள்ளன.

மழை, மின்னல், இடி போன்ற இயற்கை நிகழ்ச்சிகளுக்குப் பயந்து தமக்குக் கேடு நிகழாமல் இருக்க இவற்றையே தெய்வமாக வணங்குதல், இவற்றைத் திருப்திப்படுத்த வேள்வி செய்தல் போன்றவற்றை வேதங்களில் காணலாம். அவற்றிலுள்ள பல கருத்துக்கள் சைவத்துக்கு உடன்பாடற்றவை. ஆயினும் வேதகாலச்சிந்தனையில் ஒருவித வளர்ச்சியைக் காணமுடிகிறது. சைவம் உட்பட்ட இந்திய மதங்கள் பலவற்றின் வேர்களை அங்கே காணமுடியும். இந்த வகையில் சைவம் வேதத்தைப் பிரமாணமாகக் கொள்கிறது.

சைவ சமய தத்துவங்கள், வழிபாட்டுச் செயல் முறைகள், திருக்கோயில் அமைப்பு விதிகள் போன்ற அரிய செய்திகள் ஆகமங்களில் உள்ளன. இச்சிறப்புக் கருதியே சைவத்துக்கு வேதம் பொது, ஆகமம் சிறப்பு என்று கூறப்படுகிறது.

## வேதகாலத்துக்கு முன்

சைவ சமயம் ஆரியர் வருகையோடு வேத காலத்திற்றான் தோன்றியதென்று முன்பு கருதப்பட்டது. ஆனால் இந்த நூற்றாண்டில் நடைபெற்ற சில அகழ்வாராய்ச்சிகளின் பயனாக சைவசமயமும் சிவ வழிபாடும் வேத காலத்திற்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்டதென்பது நிரூபணமாகியது. மொகெஞ்சதாரோ-கரப்பா அகழ்வாராய்ச்சிகளிலிருந்து, ஆரியர் வருகைக்கு முன்பே ஒரு நாகரிகம் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்ததென்பதற்கும், அது திராவிட நாகரிகம் என்பதற்கும் சான்றுகள் கிடைத்தன. இதன் அடிப்படையில் ஜி. யு. போப் என்ற மேனாட்டறிஞர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

> *ஆரியர் வருகைக்கு முன்பே தென்னிந்தியாவில்*
> *நிலவிய வரலாற்றுக்கு முற்பட்ட சமயமே சைவம்*
>
> \- ஜி. யு. போப், திருவாசகம்.

## தமிழர் சிந்தனை

தொல்காப்பியம் ஒரு பழந்தமிழ் இலக்கண நூல். தமிழ் எழுத்துக்களின் இயல்பு பற்றியும் தமிழ்ச் சொற்களின் அமைப்புப் பற்றியும் இந்நூல் தரும் விளக்கங்கள் சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன. இந்நூல் தோன்றப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ் பேசும் மக்களிடையே சைவம் தழுவிய கருத்துக்கள் நிலவியிருந்தாலன்றி இத்தகைய விளக்கங்கள் எழ இடமில்லை.

சைவம் தழுவிய சிந்தனையில் திருக்குறளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இதிலுள்ள கருத்துக்கள் மட்டுமன்றி

சொல்லாட்சியும் கூடப் பின்வந்த இலக்கியங்களிலும் திருமுறைகளிலும் தத்துவ நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

இன்று வடமொழியில் உள்ளவையெல்லாம் வட புலத்தவர் கருத்துக்களென்று கருத முடியாது. அதுபோல் தென்னகத்து மொழிகளிலுள்ளவை எல்லாம் தென்புலத்தவர் கருத்துக்களென்று கூறமுடியாது. ஆரியர் வருகைக்கு முன்பிருந்த சமயக் கொள்கைகளும் பின்னர் எழுந்த கொள்கைகளும் இணைந்து சைவம் வளர்ச்சியடைந்ததென்பது அறிஞர் சிலரின் கருத்தாக உள்ளது.

## திருமுறைகளும் மெய்கண்ட நூல்களும்

தமிழகத்தை வடக்கே இருந்து வந்த களப்பிரர் என்பவர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை ஆண்டனர். இவர்கள் மொழியால் தமிழரல்லாதவர்; மதத்தால் சமணர். இவர்கள் வருகைக்கு முன்பே புத்தமதம் தமிழ்நாட்டிற்கு வந்துவிட்டது.

களப்பிரரின் ஆட்சியில் தமிழிலுள்ள அறிவு நூல்கள் அழிக்கப்பட்டன. தமிழர் நாகரிகம் சிதைவுற்றது. சைவம் அழிவை நோக்கியது. சமணம் அரச மதமாக மாறியது. இந்த நிலையிற்றான் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற அருளாளர் தோன்றி தமிழும் சைவமும் தழைக்கப் பணி புரிந்தனர். ஊரூராகச் சென்று திருப்பாடல்கள் பாடியும் தொண்டு செய்தும் தமிழகத்தில் ஒரு எழுச்சியை உண்டாக்கினர். இந்த அருளாளர் பாடிய திருப்பாடல்கள் பன்னிரண்டு தொகுதிகளாகப் பின்னர் தொகுக்கப்பட்டுப் *பன்னிரு திருமுறைகள்* என்று வழங்கப்

படுகின்றன. சைவத்தமிழரின் பக்தி நூல்களான இவை தோத்திர நூல்கள் எனப்படும்.

பழந்தமிழ் நூல்களிலும் பன்னிரு திருமுறைகளிலும் வேதாகம நூல்களிலும் பரவிக்கிடக்கும் தத்துவக் கருத்துக்களை ஒழுங்குபடுத்திச் சைவசித்தாந்த தத்துவ நூல்களாகப் பின்னர் வந்த ஞானிகள் தந்தனர். இவை மெய்கண்ட சாத்திரங்கள் என்ற பெயரில் பதினான்கு நூல்களாக உள்ளன. "சைவ சித்தாந்த தத்துவம் திராவிடரின் (தமிழரின்) பேரறிவில் உதித்த பெரும் கொள்கை" என்று ஜி. யு. போப் போன்ற உலகப் பேரறிஞரால் போற்றப்படுகிறது.

பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்களும் தமிழர் போற்றும் சைவத்தின் அடிப்படை நூல்களாக அமைந்துள்ளன. இன்று, உலகில் உள்ள சமயங்களில் பழமையும் சிறப்பும் மிக்க சமயமாகச் சைவசமயம் கருதப்படுகிறது.

*சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதில்சார் சிவமாம்*
*தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லெனும் நான்மறைச்*
*செம்பொருள்வாய்*
*மைவைத்த சீர்த்திருத் தேவார மும்திரு வாசகமும்*
*உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாள்எம்*
*உயிர்த்துணையே.*

- திருவருணைக்கலம்பகம்

# சிவம் எனும் செம்பொருள்

கீழ்த்திசை வெளுக்கிறது. இருள் கலைந்து கதிரவனின் கவினொளி படர்கிறது. பறவைகள் இன்னொலி எழுப்புகின்றன. மொட்டவிழ்ந்த மலர்கள் மணம் வீசுகின்றன; எழில் கூட்டுகின்றன. உலகம் புத்தெழில் பெற்றுக் கண் விழிக்கிறது.

காலையின் மலர்ச்சியிற்றான் எத்தனை அழகு! எத்தனை இன்பம்!

இந்த அழகும் இன்பமும் இன்னும் சிறிது நேரத்தில் கலைந்துவிடும். நாம் காணும் அனைத்தும் இந்த நியதிக்கு, மாறுபாட்டிற்கு, உட்பட்டன. வாழ்வின் ஒவ்வொரு கூறும் நிலையற்றது; மாறுபடுவது; மடிவது. மனிதன் காணும் புற உலகின் நியதி இது.

## குறைவிலா நிறைவு

ஆயினும், இந்த மாறுபாட்டிற்கும் நிலையற்ற தன்மைக்கும் ஊடாக, நிலையுள்ள, மாறுபாடற்ற அமைதிப் பண்பொன்றை அவன் உணரத் தவறியதில்லை. அந்தப் பண்பைக் கடவுளாகக் கண்டு போற்றி, அதில் ஒன்றி, நிறை அமைதியையும் அந்தமில் இன்பத்தையும் அவன் அடைந்திருக்கிறான்.

மலரின் மணத்திற்கும் காலையின் மலர்ச்சிக்கும் நிலையற்ற மாறுபாட்டிற்கும் காரணமாக இருப்பதும் இதுவே, *கடவுள்* என்ற தமிழ்ச் சொல் அனைத்தையும் கடந்தும் அவற்றுள் நிறைந்தும் இருப்பதை உணர்த்துவது.

குறையற்ற நிறைபொருளாக இருக்கும் இச் செம்பொருளை சிவம் என்றனர் எம் முன்னோர். 'கோதிலா அமுதே', 'குறைவிலா நிறைவே', 'செம்பொருள் துணிவே' என்றெல்லாம் போற்றிப் பயனடைந்தனர்.

கடவுள் என்றும் இறையென்றும் தமிழில் கூறப்படும் சிவனை, பிரமம் என்றும் பரப்பிரமம் என்றும் வடமொழியில் கூறுவர். தத்துவ உலகில் பதி என்று கூறப்படும்.

சிவம் என்ற சொல்லுக்கு மங்கலம் என்பது பொருள். பதி என்பதற்கு (உயிர்களைக் காக்கும்) தலைவன் என்பது பொருள். பசுபதி என்ற பெயரும் இந்தப் பொருளில் வந்ததே. (பசு - உயிர்). சிவனைச் செம்பொருளாகக் கண்டு போற்றியவர் தென்னாட்டவர். ஆயினும் அவன் எல்லா நாட்டினருக்கும் உரியவன். இதனை மாணிக்கவாசகர் திருவாக்கின் மூலம் அறியலாம்.

*தென்னா டுடைய சிவனே போற்றி*
*என்னாட் டவர்க்கும் இறைவா போற்றி.*

## நின்மலன், நிர்க்குணன்

உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத் தொடர்புடையன. மலத்தினால் கட்டுப்பட்டுள்ளன. (மலம் - அழுக்கு அல்லது குற்றம்). உயிர்களின் இக்குறையை நீக்கி அவற்றை உயர் நிலை அடையச் செய்பவன் இறைவன். மலத்தொடர்பும் எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாத, முற்றறிவும் பேராற்றலும் உடையவன் அவன். மலத்தொடர்பு இல்லாதவன் ஆதலின் அவன் நின்மலன் எனப்படுகிறான்.

அவன் குணங்கள் இல்லாதவன்; குணங்களைக் கடந்தவன். இதனால் நிர்க்குணன், குணாதீதன் என்றும் இறைவனைக் குறிப்பதுண்டு. இப்படிக் குறிக்கும் போது அவன் எமக்குள்ள குணங்கள் இல்லாதவனென்பதே கருத்து. எந்த ஒரு பொருளுக்கும் குணம் உண்டு. திருவள்ளுவர் இறைவனை எண்குணத்தான் என்று கூறுகிறார்.

*கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை.*

திருக்குறளுக்கு உரை செய்த பரிமேலழகர் சிவனின் எட்டுக் குணங்களைப் பின்வருமாறு கூறுகிறார்:

*எண்குணங்களாவன: தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவு இல் ஆற்றலுடைமை, வரம்பு இல் இன்ப முடைமை என இவை; இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது.*

மேற்கூறிய எட்டுக்குணங்களும் சைவ ஆகமத்தில் கூறப்பட்டன என்று சொல்லும் பரிமேலழகர் வைணவ சமயத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இறைவனும் அருளும்

முற்றுணர்வை ஒரு குணமாகக் கொண்ட சிவன் அறிவு அல்லது ஞான வடிவானவன். 'அ' என்னும் உயிர் எழுத்து எழுத்துக்களுக்கு முதல் எழுத்தாக உள்ளது. அத்துடன் அது ஒலிவகையால் எல்லா எழுத்துக்களிலும் கலந்துள்ளது.

இதுபோல் அறிவாகிய இறைவனும் எங்கும் நிறைந்து எதிலும் கலந்துள்ளான். இதனைப் பின்வரும் திருவருட்பயன் பாடல் விளக்குகிறது.

*அகர உயிர்போல் அறிவாகி எங்கும்*
*நிகரில்இறை நிற்கும் நிறைந்து.*

இறைவனின் குணங்களில் பேரருளும் பேராற்றலும் குறிப்பிடத் தக்கன. சிவனின் ஆற்றலாக (சக்தியாக) இருப்பது அவனின் அருளே. அனைத்தையும் கடந்து நிற்கும் இறைவன் பரசிவன் என்றும் அவனின் சக்தி பராசக்தி என்றும் கூறப்படும். சிவனும் சக்தியும், ஞாயிறும் ஒளியும் போல், தீயும் வெம்மையும் போல் ஒன்றை விட்டொன்று பிரியாமல் நிற்பன. இதனை சிவஞான சித்தியார் என்ற நூல் பின்வருமாறு விளக்கும்.

*எத்திறம் நின்றான் ஈசன்*
*அத்திறம் அவளும் நிற்பள்.*

சக்தியோடு சேர்ந்திருக்கும் சிவன் தன்னளவில் எந்தவித மாற்றமுமின்றி முழு அறிவும் பேரானந்தமும் உடையவனாக இருக்கிறான். இதனால் அவனைச் சச்சிதானந்தம் என்று உபநிடதங்களும் ஆகமங்களும் கூறும். சச்சிதானந்தம் = சத்+சித்+ஆனந்தம். சத்(து) என்பதை உள்ளது என்ற பொருளில் பொதுவாக இந்திய மதங்கள் கூறும். சைவ சித்தாந்தப்படி சத் என்பது 'என்றும் மாற்றமடையாமல் உள்ள பொருள்'. சித் என்பது அறிவு அல்லது ஞானம். ஆனந்தம் என்பது அளவற்ற இன்பமுடைமை.

## இறைவனின் அருட்செயல்கள்

உயிர்கள் தமக்குள்ள குறைகள் நீங்கி அறிவு விளக்கம் பெற்று, இறையின்பம் பெறுவதற்காக இறைவன் சில அருட்செயல்களைச் செய்கிறான். படைத்தல், காத்தல், அழித்தல் என்பன அவன் செய்யும் முத்தொழில்கள்.

படைத்தல்: ஆணவம் என்னும் அறியாமை இருளில் அழுந்திக் கிடக்கும் உயிருக்கு, அனுபவமும் அதன்மூலம் அறிவும் பெறுவதற்காக இறைவன் உடலைப் படைக்கிறான். அத்துடன் இந்த உலகையும் அனுபவிப்பதற்குப் போகப் பொருட்களையும் படைக்கிறான். தத்துவ உலகில் இவற்றைத் *தனு கரண புவன போகம்* என்பர். இவை முறையே உடல், மனம் முதலிய அந்தக் கரணங்கள் (அகக்கருவிகள்), உலகம், அனுபவிக்கும் பொருட்கள் ஆகும். ஒரு குயவன் மண்ணிலிருந்து குடம் செய்வதுபோல், இறைவன் இவற்றை மாயை என்னும் நுண்பொருளிலிருந்து படைத்தளிக்கிறான்.

காத்தல்: அவன் தோற்றுவித்த மேலே குறிப்பிட்டவற்றை உயிர் அனுபவம் பெறும் பொருட்டு ஒரு கால அளவு வரை நிலை நிறுத்துகிறான்.

அழித்தல்: அவன் தோற்றுவித்தவற்றை மீண்டும் மாயையில் ஒடுக்குகிறான். பிறப்பு, இறப்பு என்பன உடல்பற்றிய நிலை மாற்றங்களே.

மேற்கூறப்பட்ட முத்தொழிலை ஐந்தாகப் பிரித்து இறைவனின் ஐந்தொழில்கள் (பஞ்ச கிருத்தியங்கள்) என்று கூறுவதுமுண்டு. இன்ப துன்ப அனுபவங்கள் மூலம் அறிவு பெற்று

இறைவனை அறியும் பக்குவம் வரும்வரை, அவன் தன்னை உயிரிடம் இருந்து மறைத்து வைக்கிறான். காத்தல் தொழிலின் ஒரு கூறாகிய இது மறைத்தல் எனப்படுகிறது.

பல பிறவிகள் எடுத்து, அனுபவமடையும்போது, அதனால் அறிவு விளக்கம் பெற்ற உயிரின் ஆணவ மலப்பிடிப்பு வலுவிழக்கிறது. இந்நிலையில் உலகியல் நாட்டம் குறைந்து இறையியல் நாட்டம் மிகுகிறது. இங்ஙனம் பக்குவமடைந்த ஆன்மாவுக்கு இறைவன் அருள் புரிந்து முத்தியைக் கொடுத்து தன் அருளாகிய திருவடிகளின் கீழ் வைக்கிறான். இது அருளல் எனப்படும். அழித்தல் தொழிலில் வைத்து எண்ணப்படுவது இது.

ஆகவே, ஐந்தொழில்களாவன படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும். இவை வடமொழியில் முறையே சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் எனப்படும்.

## சிவனின் திருமேனிகள்

மலத் தொடர்பில்லாதவன் ஆகையால் இறைவனைத் தூய உடம்பினன் என்பர். தூய உடம்பினன் ஆதல் என்பது அவனின் எண் குணங்களில் ஒன்று. இது அவனின் தன்மை என்றும் திருமேனி என்றும் குறிப்பிடப்படும்.

சிவனுக்கு மூவகைத் திருமேனிகள் உண்டு. ஒன்று உருவமற்ற அருவத்திருமேனி. இன்னொன்று உருவத்திருமேனி. மற்றையது இரண்டுக்கும் இடைப்பட்ட அருவுருவத்திருமேனி. அருவத் திருமேனியில் சிவன் என்றும், அருவுருவத் திருமேனியில் சதாசிவன் என்றும், உருவத் திருமேனியில் மகேசுரன் என்றும் பெயர் பெறுகிறான்.

இலிங்கம் சதாசிவத்தைக் குறிப்பது. அருவத்திற்கும் உருவத்திற்கும் இடைப்பட்ட ஒன்றாக, விளங்கியும் விளங்காத நிலையைக் குறிப்பதாக அமைந்தது இது. உருவத் திருமேனியில் தோன்றும் மகேசுவரனின் வடிவங்கள் இருபத் தைந்து. இந்த வடிவங்கள் வெறும் கற்பனையில் எழுந்தவை அல்ல. அருளாளரின் அகக் காட்சியில் கண்ட திருவுருவங்கள் இவை.

சிவனின் திருமேனிகள், உயிர்கள் எடுக்கும் உடல்கள் போலல்லாது, அவை செய்யும் பூசை, தியானம் முதலியவற்றின் பொருட்டு சிவசத்தியாகிய திருவருட் குணங்களால் ஆன உருவங்கள்.

சிவனும் அவன் சத்தியும், ஞாயிறும் ஒளியும் போல் பிரிவின்றி உள்ளனர் என்று முன்பு கூறப்பட்டது. ஆண்பாதி பெண்பாதியாக உள்ள அர்த்தநாரீசுரர் வடிவம் இதனை உணர்த்துவது. சத்தியாகிய உமையுடன் சேர்ந்திருக்கும் சிவன் அனைத்து உயிர்களுக்கும் தாயாகவும் தந்தையாகவும் இருந்து அருளுகிறான். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மூன்று வயதுக் குழந்தையாகச் சீர்காழியில் நின்று அழுதபோது அம்மை அப்பராகவே இறைவன் காட்சி கொடுத்தான். மாணிக்கவாசகர் "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்று பாடிச் சிவனை வணங்குகிறார். நாம் எந்தக் கடவுளைக் கும்பிட்டாலும் அந்தக் கடவுளின் வடிவிலே உமை அம்மையுடன் சேர்ந்த சிவனே வந்து அருள்புரிகிறார் என்று சிவஞானசித்தியார் கூறுகிறது.

*யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே*
*மாதொரு பாகனார்தாம் வருவர்.*

# சார்ந்தே இருக்கும் உயிர்

*நான்*, *எனது* என்ற சொற்களைப் பலமுறை பயன்படுத்துகிறோம். *நான் எழுதுகிறேன், இது எனது உடல், எனது மனம்* என்று பேசுகிறோம். இவ்வாறு 'நான்' என்றும் 'எனது' என்றும் கூறுவதால், இந்த உடலுக்கும் உறுப்புக்களுக்கும் மனம் முதலிய அந்தக்கரணங்களுக்கும் வேறான ஒரு பொருள் உள்ளது புலனாகிறது.

## உயிர் உண்மை

உறக்கத்தில் இந்த உடலும் மனம் முதலியவையும் செயற்படுவதில்லை. எதையும் அறியாத ஒரு நிலையில் இருக்கிறோம். விழித்தவுடன், நல்ல உறக்கத்தில் இருந்தோம் என்ற உணர்வு ஏற்படுகிறது. இதனால் உணரும் பொருள் ஒன்று உண்டு; அது உடலுக்கும் அந்தக் கரணங்களுக்கும் வேறானது என்பது தெளிவாகிறது. இதுவே உயிர் அல்லது ஆன்மா எனப்படும்.

சிந்தனை, செயல், தோற்றம் ஆகியவற்றில் மனிதருக்கிடையில் வேற்றுமையுண்டு. உலகில் உள்ள கோடிக்கணக்கான மனிதரில் ஒருவரைப்போல் இன்னொருவர் இல்லை. மனிதர் மட்டுமன்றி மிருகங்கள், பறவைகள், நீர்வாழ்வன, ஊர்வன என்று பல உயிர்கள் உள்ளன. அவற்றிலும் ஒவ்வொரு வர்க்கத்தினுள்ளும் பல வேறுபாடுகள் உள்ளன. இதனால் உயிர்கள் பல என்பதும் புலனாகிறது. ஆகவே உயிர் உண்டு. அது ஒன்றல்லப் பல என்று சைவம் கூறுகிறது.

## உயிரின் தடை

நாம் எண்ணியதெல்லாம் செய்ய முடிவதில்லை. ஒன்றை நினைத்துச் செய்யும்போது எதிர்பார்த்ததற்கு மாறான விளைவு ஏற்படுவதுண்டு. எதைப் பற்றியும் முழுமையான அறிவும் எமக்கில்லை. ஆகவே, எமது செயல், சிந்தனை, அறிவு ஆகியவை குறையுடையன என்பது தெளிவாகிறது. அவற்றுக்குத் தடையாக இருந்து ஏதோ ஒரு பொருள் இக்குறையை ஏற்படுத்துகிறது. இதுவே உயிரைப் பற்றியுள்ள மலம் என்பது சைவத்தின் கருத்து. மலம் என்றால் அழுக்கு அல்லது குற்றம் என்பது பொருள்.

உயிர்களுக்குத் தடையாயுள்ள மலம் ஆணவம், கன்மம், மாயை என்று முப்பிரிவுகளாக உள்ளன. இதனால் இது மும்மலம் என்று கூறப்படுகிறது. பாசம் என்பதும் மலத்துக்குள்ள பெயர். பாசம் என்றால் கயிறு அல்லது கட்டு என்பது பொருள். பாசத்தினால் கட்டுப்பட்டிருப்பதால் உயிருக்குப் பசு என்ற பெயருண்டு. பசுத்துவம் என்பது கட்டுப்பட்ட தன்மை. பசு என்பது கட்டுப்பட்ட ஒன்று.

உயிர்களை விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என்று மூன்று வகையாகப் பிரிப்பதுண்டு. ஆணவ மலக் கட்டுடைய ஆன்மாக்கள் விஞ்ஞானகலர். ஆணவமும் கன்மமுமாகிய இரு மலக்கட்டுடையவர் பிரளயாகலர். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலக் கட்டுடையவர் சகலர்.

## இறை வேறு; உயிர் வேறு

அறிவு அல்லது ஞானம் உடையது 'சித்து' (சித்) என்று தத்துவ உலகில் குறிக்கப்படுகிறது. இறைவனைப்போல் ஆன்மாவும் ஒரு சித்துப்பொருள்தான். ஆனால், இறைவன் அறிவே வடிவானவன்; முற்றறிவு உடையவன். பசு ஆகிய ஆன்மா அறிவிக்க அறிவது; சிற்றறிவுடையது. கண், காது முதலிய ஐம்புலன்கள் வழியிலும் மனம், புத்தி முதலிய அந்தக் கரணங்கள் மூலமும் அறிவு பெறுவது ஆன்மா. எனவே முற்றறிவும் மலத்தொடர்பும் இல்லாத இறைவன் வேறு; சிற்றறிவும் மலர்த்தொடர்பும் உள்ள உயிர்கள் வேறு என்பது தெரிகிறது.

உயிர் இறைவனிலிருந்து பிரிந்து வந்தது; அது மீண்டும் இறைவனைச் சேரும்; பொன்னும் ஆபரணமும் போன்றவை இறைவனும் ஆன்மாவும்; எல்லாம் பிரமம்; என்றெல்லாம் வேதாந்திகள் கூறுவார்கள். இவர்கள் கூற்றுப்படி பார்த்தால் உயிருக்கு இறைவனின் குணங்கள் இருக்க வேண்டும். அத்துடன் ஆன்மா இறைவனுடன் சேர்ந்தாலும் மீண்டும் அவனிடமிருந்து பிரியாதென்று கூறமுடியாது. ஆகவே, இத்தகைய கொள்கைகள் சைவத்துக்கு உடன்பாடற்றவை.

இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன்; நித்தியமானவன். இறைவனைப்போல் உயிரும் என்றும் இருப்பதால் அதுவும் நித்தியமான ஒன்றே. 'என்றுளைநீ, அன்றுளம் யாம்' என்று தாயுமானவர் இதனை விளக்குவார். ஆயினும் எந்த நிலையிலும் இறைவன் ஆண்டான் ஆகவும் உயிர் அடிமையாகவும் உள்ளன என்பது சைவத்தின் கோட்பாடு. 'மீளா அடிமை உனக்கே ஆளாய்' என்பது சுந்தரர் திருவாக்கு.

உயிராகிய பசு மாத்திரமன்றி பாசப்பொருட்களாகிய ஆணவம், கன்மம், மாயையும் இறைவனைப்போல் அனாதியானவை.

*பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்*
*பதியினைப் போல்பசு பாசம் அனாதி.*

- திருமூலர்

விருப்பு வெறுப்பு (இச்சை), அறிவு (ஞானம்), செயல் (கிரியை) ஆகியவை உயிருக்குள்ள தன்மை அல்லது இயல்பு. இதனால் உயிரை *இச்சாஞானக்கிரியாசொரூபி* என்றும் விளக்கிச் சொல்வதுண்டு.

ஆணவம் இருள்போல் இருந்து உயிரின் அறிவு இச்சை செயலை விளங்கவிடாமல் தடுக்கிறது. அனாதியில் உயிர் 'காரிருளில் கண்ணிலாக் குழவிபோல்' ஆணவ இருளில் அழுந்தி இருந்தது. இந்த நிலையை மாற்றி, உயிருக்கு அறிவு விளக்கம் அளித்து, ஆணவப் பிடிப்பிலிருந்து விடுபடுவதற்கு இறைவன் கருணையோடு அருள் செய்கிறான். இதற்காக உயிருக்குப் பல பிறவிகள் கொடுக்கிறான். பிறவிகள் தோறும் உயிருடன் நீங்காதிருந்து உதவுதல் அவனின் அருள் தன்மையாகும்.

## சார்ந்ததன் வண்ணமாம் தன்மை

உலகியல் அனுபவங்களில் அழுந்தி உலகப் பொருள்களைச் சார்ந்திருப்பது பசுவாகிய ஆன்மாவின் இயல்பு. பாசம் நீங்கி முத்தி அல்லது விடுதலை அடைந்தபொழுது அது சிவனருளில் தோய்ந்து சிவத்தைச் சார்ந்து நிற்கும். பாசப்பொருட்களை அல்லது சிவனைச் சார்ந்திருப்பதே உயிரின் இயல்பாக உள்ளது. இதனால் 'சார்ந்ததன் வண்ணமாம் தன்மை' உயிருக்கு உண்டென்று கூறப்படும்.

இறைவன் அருளால் கிடைக்கும் பிறவிகளில் உயிர் நல்லனவும் செய்கிறது; அல்லனவும் செய்கிறது. நல்லது செய்வதால் புண்ணியமும் இன்ப அனுபவமும், தீயன செய்வதால் பாவமும் துன்ப அனுபவமும் கிடைக்கின்றன. இன்பதுன்ப அனுபவங்களால் உ்யிரின் அறிவு முதிர்ச்சியடைகிறது. அதனால் அதற்குள்ள மலத்தொடர்பு சிறிது சிறிதாக நீங்குகிறது. இங்ஙனம் வளர்ந்து பக்குவப்பட்ட நிலையில் அது தான் இதுவரை சார்ந்திருந்த உலகப்பொருட்களும் அதன்மூலம் பெற்ற அனுபவங்களும் தனது இயல்புக்கு உகந்ததல்லவென்றும் இறைவனைச் சார்ந்திருத்தலே நல்லதென்றும் உணர்கிறது. இந்த நிலையில் உயிர் என்றும் இறை சிந்தனையில் இருந்து செயல்படும். இறைவனும் உயிரைத் தன் அருளாகிய திருவடிகளில் சேர்த்து சிவானந்தப் பேற்றை அளிக்கிறான்.

*எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தில் அழுந்தி*
*இருவினையின் தன்மைகளுக் கீடான யாக்கை*
*அண்ணல்அரு ளால்நண்ணி அவைஅவராய் அதனால்*
*அலகில்நிகழ் போகங்கள் அருந்து மாற்றால்*
*புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்*
*புணரும்இருள் மலபாகம் பொருந்தியக்கால் அருளால்*
*உண்ணிலவும் ஒளியதனால் இருள்அகற்றிப் பாதம்*
*உற்றிடும்நற் பசுவர்க்கம் என உரைப்பர் உணர்ந்தோர்.*

- சிவப்பிரகாசம்

# அறியாமை செய்யும் ஆணவம்

இன்பத்தை விழைதலும் துன்பத்தைத் தவிர்த்தலும் எல்லா உயிர்களுக்கும் இயல்பாக உள்ளது. இன்ப அனுபவத்துக்கு ஏற்ற வழி இதுவே என்று எமது அறிவு உணர்த்த அதன் வழியில் சிந்தித்துச் செயற்படுகிறோம். ஆயினும் பல வேளைகளில் நாம் எண்ணியதற்கு எதிர்மாறான விளைவுகள் ஏற்பட்டுத் துன்ப மடைகிறோம். ஆகவே எமது அறிவு குறையுடையதாக இருப்பது தெரிகிறது. அறிவை விளங்கவிடாமல் ஏதோ ஒரு பொருள் இருக்கிறது என்று உணர வேண்டியுள்ளது. இது ஆணவம் எனப்படுகிறது. *உண்மை விளக்கம்* என்ற நூல் 'அறியாமை ஆணவம்' என்று கூறும்.

## மூலமலம்

ஆணவம் இருள்போல் இருந்து உயிரின் அறிவு, இச்சை, செயல் ஆகியவற்றை விளங்கவிடாமல் மறைப்பது என்று முந்திய கட்டுரையில் கூறப்பட்டது. இப்படிச்செய்து உயிரின் தன்மையைச் சிறுமைப்படுத்துவது ஆணவம். ஆணவம் என்றால் (உயிரை) அணுத்தன்மை ஆக்கும் பொருள் என்பது கருத்து. (அணு - அற்பம்).

எமது செயல்கள் எல்லாம் நம் அறிவின் அடிப்படையிலே நிகழ்கின்றன. முதலில், எமது அறிவில் இப்படிச் செய்ய வேண்டுமென்று அமைத்துக்கொண்டு பின்னர் செயற்படுகிறோம். ஆகவே, அறிவுக்குத் தடையாக உள்ள அறியாமை எல்லாவற்றுக்கும் அடிப்படைக் குறையாக, முதல் தடையாக உள்ளது. இதனால் அறியாமையைச் செய்யும் ஆணவம் மூலமலம் என்று கூறப்படும். மலம் என்றால் அழுக்கு அல்லது

குற்றம் என்பது பொருள். கன்மமும் மாயையும் உயிருக்குள்ள ஆணவ மலப் பிடிப்பை நீக்க உதவுவன. ஆகவே இவை இரண்டின் செயற்பாட்டிற்கும் ஆணவமே காரணமாக உள்ளது. இதனாலும் ஆணவம் மூலமலம் எனப்படுகிறது.

## தன்னியல்பும் பொதுவியல்பும்

ஆணவம் உயிருக்கு இரு நிலைகளில் நின்று இடர்செய்கிறது. தானாக நின்று இடர்செய்வது ஒரு நிலை. மாயை, கன்மம் ஆகியவற்றின் தொடர்போடு இடர் செய்வது இன்னொரு நிலை. அது தனியே நின்று உயிரின் அறிவை விளங்கவிடாமல் அறியாமை செய்கிறது. இங்ஙனம் செய்யும் அதன் ஆற்றல் 'ஆவாரக சக்தி' அல்லது மறைத்தல் சக்தி எனப்படும். (ஆவாரகம் - மறைத்தல்). இது ஆணவத்தின் உண்மை இயல்பு அல்லது தன்னியல்பு (சொரூபலட்சணம்) எனப்படும்.

இன்னொரு நிலையில் ஆணவம் எதனையும் தவறாக உணரச்செய்து உயிரைக் கீழ்ப்படுத்துகிறது. இதனை மாயை கன்மங்களுடன் சேர்ந்து செய்கிறது. மாயையும் கன்மமும் உயிரின் அறிவைச் சிறிது விளங்கச் செய்வன. மங்கிய ஒளியில் பொருள்களைத் தவறாகக் காண்பதுபோல், அறிவை மழுங்கச் செய்து பொருள்களின் இயல்பை உள்ளபடி காணவிடாமல், தவறாகக் காணச்செய்வது ஆணவம். ஆணவத்தின் இத்தகைய ஆற்றல் 'அதோநியாமிகாசக்தி' எனப்படும். 'அதோநியாமிகை' என்றால் கீழ்ப்படுத்தி வைத்தல் என்பது பொருள். ஆணவத்தின் இந்தத் தன்மை அதன் பொது இயல்பு (தடத்த இலட்சணம்) எனப்படும்.

## செயற்பாடுகள்

இங்ஙனம் இரு நிலைகளில் நின்று ஊறு செய்யும் ஆணவத்தின் செயற்பாடு (காரியம்) ஏழாக வகுக்கப்பட்டுள்ளது.

1. மோகம்: எமக்குள்ள அறிவின் துணையால் தீமை விளைவிப்பவைகளைத் தெளிவாக அறிகிறோம். ஆயினும் அவற்றைத் தவிர்க்காமல், அவற்றைச் செய்வதிலே விருப்பம் கொள்கிறோம். இது மோகம் எனப்படும்.
2. மதம்: தன்னைப்பற்றி உயர்வாகவும் தன்கொள்கைகளைச் சிறந்ததாகவும் எண்ணித் தற்பெருமை கொள்ளல் மதம்.
3. அராகம்: ஒரு பொருள் கிடைக்காதென்று தெரிந்தும் அதனை அடைய ஆசைப்படுதல் அராகம்.
4. கவலை: கிடைக்கவேண்டியது கிடைக்குமா கிடைக்காதா என்றும், செய்வதற்கேற்ற பலன் வருமா வராதா என்றும் உரிமையானவை என்றும் இருக்குமா நீங்குமா என்றும் எண்ணி மனம் வருந்துவது கவலை.
5. தாபம்: வேண்டியவர் பிரிந்தபோதும் பிரியநேரும் என்பதை எண்ணியபோதும் உண்டாகும் பிரிவாற்றாமை தாபம்.
6. வாட்டம்: தாபத்தினால் உண்டாகும் வருத்தம் வாட்டம்.
7. விசித்திரம்: எமது இன்ப துன்பத்துக்கு நாமே காரணமாக இருக்கிறோம். ஆயினும் அவற்றுக்குப் பிறரைக் குறை கூறுவது எமது இயல்பாக இருக்கிறது. இது விசித்திரம் (வேடிக்கை).

மேற்கூறிய ஏழும் ஆணவத்தின் செயற்பாடுகளாக நின்று பலவகையில் உயிரைக் கட்டுப்படுத்துகின்றன.

## இருளிலும் கொடியது

ஆணவத்தை இருளுக்கு ஒப்பிடுவது வழக்கம். ஆனால் இருளைவிட ஆணவம் மிகவும் கொடியது என்று கூறலாம். இருள் பிற பொருட்களை நாம் காணாதபடி மறைக்கிறது. ஆனால் நாம் உணரும்படி அது தன்னைக்காட்டுகிறது. ஆணவம் எமது அறிவை மறைத்தும் பிறபொருட்களின் உண்மை இயல்பைக் காணாதபடி செய்கிறது. அத்துடன் இத்தகைய ஆணவம் இருப்பதாகவே நாம் அறியாதபடி தன்னைக் காட்டாமலும் இருக்கிறது. இதனைத் திருவருட்பயன் என்ற நூல் பின்வருமாறு விளக்கும்.

*ஒரு பொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்*
*இருபொருளும் காட்டாது இது.*

## இடையில் வராதது

உயிருக்குள்ள ஆணவமலச் சேர்க்கை அனாதி காலமாகவே இருக்கிறது. நெல்லுடன் சேர்ந்த உமி போலவும் செம்புடன் சேர்ந்த களிம்பு போலவும் உயிருடன் ஆணவம் இயற்கையாகவே சேர்ந்துள்ளது.

*நெல்லிற் குமியும் நிகழ்செம்பினிற் களிம்பும்*
*சொல்லிற் புதிதன்று தொன்மையே.*

- சிவஞானபோதம்

இதனால் ஆணவ மலம் சகசமலம் எனப்படுகிறது. (சகசம்- இயற்கையானது; உடன்பிறந்தது).

ஆணவமலம் அனாதியே உயிருடன் சேராமல் இடையில் வந்து சேர்ந்ததென்றால் அதற்குக் காரணம் வேண்டும். ஆணவம்

ஒரு அறிவற்ற பொருள். ஆகையால் அது தானாக உயிரைப் பற்ற முடியாது. இறைவன் உயிர்களிலே கருணை கொண்டவன். ஆகையால் அவன் ஆணவத்தை உயிருடன் சேர்த்திருக்க மாட்டான். உயிர் தனக்குத் தீமை செய்யும் ஆணவத்தைத் தானாகப் பற்ற விரும்பாது. ஆணவம் இடையிலே வந்து சேர்ந்ததென்றால், அதற்குமுன் உயிர் அறிவு விளக்கம் பெற்றதாக இருந்து இறைவனுடன் சேர்ந்திருக்கவேண்டும். இத்தகைய காரணங்களால் ஆணவம் இடையிலே வந்து சேர்ந்ததல்லவென்றும் அனாதியே சேர்ந்ததென்றும் கொள்ளலே பொருத்தமுடையது. இதனாலேயே உமாபதி சிவாச்சாரியார் தனது திருவருட்பயன் நூலிலே 'ஆசு ஆதியேல் அணைவ காரணமென்?' என்று கேள்வி எழுப்புகிறார். (ஆசு - குற்றம்; ஆணவம்).

## அழியாத்தன்மை

இருள்போல் ஆணவம் ஒன்றே; பலவல்ல. அது உயிர்களின் தன்மைக்கேற்ப அவற்றின் அறிவை மறைத்துப் பல வழிகளில் இடர்செய்கிறது. மாயை கன்மச் சேர்க்கையால் உயிரின் அறிவு சிறிது சிறிதாக விளங்க, ஆணவத்தின் பிடிப்புக் குறைகிறது. முத்திநிலையில், உயிர் இறையருளில் தோய்ந்து இருக்கும் பொழுது, ஆணவத்தின் பிடிப்பு முற்றாக நீங்குகிறது. ஆனாலும் ஆணவம் ஆற்றல் குறைந்த தன்மையுடன் அழியாமல் இருக்கிறது.

*ஏகமாய்த் தம்கால எல்லைகளின் மீளும்*
*எண்ணரிய சத்தியதாய் இருள்ஒளிர இருண்ட*
*மோகமாய்ச் செம்பிலுறு களிம்பேய்ந்து நித்த*
*மூலமல மாய்அறிவு முழுதினையும் மறைக்கும்.*

- சிவப்பிரகாசம்

# இருள்சேர் இருவினை

வாழ்வியல் அனுபவங்கள் பலவற்றிற்குக் காரணம் காண முடிவதில்லை. ஒரே சூழலில் பிறந்து வளர்ந்தவர்களில் ஒருவன் எல்லா நலன்களும் பெற்று இன்பமடைவதையும் இன்னொருவன் துன்பமடைவதையும் காண்கிறோம். எதிர்பாராத வகையில் நோய், வறுமை, இறப்பு ஆகியன நேர்கின்றன. எதனால் இவை நிகழ்கின்றதென்று அறிய முடியாத நிலையில் இவற்றின் காரணம் கன்மம் அல்லது வினை என்கிறோம்.

கன்மம் என்பதன் பொதுவான பொருள் செயல். ஆனால் சமய தத்துவங்களில் இது செய்யப்படும் வினை, வினையின் பயன், வினைக்கான நியதி அல்லது சட்டம் ஆகியவற்றைக் குறிக்கும்.

## பிறர் தர வாரா

கடவுளை நம்பாத சமணம், பௌத்தம் போன்ற மதங்கள் கூட கன்மத்தை நம்புகின்றன. ஒருவன் செய்கின்ற வினையின் பயனை அவனே அனுபவிக்க வேண்டுமென்பது கர்மத்தின் நியதி. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்', 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான்' போன்ற பழமொழிகள் இதனை உணர்த்துவன. நன்மை செய்தால் இன்பமும் தீமை செய்தால் துன்பமும் கிடைக்கின்றன. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற சங்கத்தமிழ்ச் சொற்றொடர் கன்மம் பற்றிய சுருக்கமான விளக்கமாக அமைகிறது.

வினை தானாக நடைபெற முடியாது. அது ஒரு பொருளைப் பற்றியே நிகழும். நான் எழுதுகிறேன் என்றால், எழுதும் செயலுக்குப் பேனா, தாள், எழுதும் கை ஆகியன தேவைப் படுகின்றன. இவை மாயை என்னும் நுண்பொருளின் வெளிப்பாடுகள் அல்லது காரியங்கள். ஆகவே கன்மம் அல்லது வினை மாயையைப் பற்றியே நிகழும். கன்மமும் மாயையும் ஆன்மாக்களின் ஆணவமல நீக்கத்துக்கு உதவுவன. ஆணவ மலத் தொடர்பு பற்றி வெளிப்படுதலால் (காரியப்படுதலால்) அவையும் ஆணவத்தைப் போல அனாதியே உள்ள மலங்களாகும். ஆயினும், ஆணவம் உயிருடன் அனாதியே சேர்ந்திருப்பதால் அது சகச மலம் எனப்படுகிறது. ஆணவத்தின் நீக்கத்துக்கு உதவ கன்மமும் மாயையும் வந்தவையாதலால் அவை ஆகந்துக மலம் எனப்படுகின்றன. அத்துடன், ஆணவம் உயிருக்கு நேர் எதிராய் நின்று அதனைக் கட்டுப்படுத்துவதால் அது பிரதிபந்தம் எனப்படுகின்றது. ஆணவச் சேர்க்கை காரணமாக வந்ததால் கன்மம் அனுபந்தம் எனப்படுகிறது. கன்மத்துடன் தொடர்புடையதால் மாயை சம்பந்தம் எனப்படுகிறது.

## மூவகை வினை

மனம், வாய், மெய்யினால் நாம் வினை செய்கிறோம். எண்ணம், சொல், செயல் மூன்றும் வினைகளே. நல்வினை, தீவினை என்று புதிதாகச் செய்யப்படும் வினை ஆகாமியம் எனப்படும். மேல்வினை, வருவினை என்றும் இது அழைக்கப்படும். வினை, செய்து முடிந்தாலும் அதன் பயன் முடியாமல் இருக்கும். நல்வினை தீவினைக் கேற்ப வினையின் பலன் புண்ணிய பாவப் பதிவுகளாகப் பிறவிகள் தோறும் உயிரைத் தொடர்கின்றன.

'அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி' என்னும் திருவாசகத் தொடர் இதனை உணர்த்துகிறது.

இங்ஙனம் நாம் பல பிறவிகளில் செய்யும் வினைகள் சூக்கும (நுண்ணிய) நிலையில் குவிந்துள்ளன. இந்த வினைத் தொகைக்கு சஞ்சிதம் என்று பெயர். தொகுவினை, தொல்வினை, பழவினை என்றும் இதற்குப் பெயருண்டு.

இந்த சஞ்சித மூட்டை அல்லது தொகுதியிலிருந்து ஒரு பகுதி அடுத்து வரும் பிறவியில் பலனுக்கு வருகிறது. மிகுதி அதன்பின் வரும் பிறவிகளில் பலனுக்கு வரும். வினையை அனுபவிப்பதற்கு ஏற்ற உடம்பை இறைவன் மாயையிலிருந்து படைத்தளிக்கிறான். எந்த நேரத்தில் எந்த வினையை எப்படி அனுபவிக்க வேண்டுமென்பதையும் அவனே நிர்ணயிக்கிறான்.

சமணமும் பௌத்தமும் வினை தானாகவே சென்று செய்தவனைச் சேரும், அதைச் சேர்ப்பதற்குக் கடவுள் தேவையில்லை என்கின்றன. ஒரு பசுக்கன்று, பல பசுக்களின் கூட்டத்தில் சென்று தன் தாய்ப் பசுவை இனங்கண்டு பால் சுவைப்பதுபோல் வினையும் பல உயிர்களிடை தானாகவே சென்று அதைச் செய்த உயிரைச் சேர்ந்து பலனுக்கு வரும் என்பது இச்சமயங்கள் தரும் விளக்கம். வினை அறிவற்ற சடப் பொருளாகையால் அது தானாகச் சென்று செய்தவனைச் சேர மாட்டாது; அதைச் சேர்க்க முற்றறிவும் பேராற்றலும் கொண்ட இறைவன் ஒருவன் வேண்டும் என்பது சைவம் தரும் விளக்கம்.

சஞ்சித வினைத் தொகுதியிலிருந்து இங்ஙனம் பயனுக்கு வரும் வினைக்கு பிராரப்தம் என்று பெயர். இது நுகர் வினை என்றும் கூறப்படும். திருவள்ளுவரும் பிற ஆசிரியரும் ஊழ், ஊழ்வினை என்று குறிப்பது இந்தப் பிராரப்த வினையே. இது பலனுக்கு வரவேண்டிய காலமும் இடமும் இறைவனால் விதிக்கப்படுவதால், *விதி* என்றும் அழைக்கப்படும்.

## வினையும் பலனும்

ஒரு பிறவியில் ஒருவன் செய்த வினை முழுதும் அந்தப் பிறவியில் பயனுக்கு வருவதில்லை. அடுத்து வரும் பிறவியிலும் அதன் பின்னரும் பயனுக்கு வரும். வினைகள் செய்யப்பட்ட ஒழுங்கு முறையிற்றான் பயனுக்கு வரவேண்டுமென்பதில்லை. முன் பின்னாக அனுபவத்துக்கு வரலாம். ஒருவன் விதைத்த தானியங்கள் எல்லாம் விதைத்த ஒழுங்கு முறையில் முளைவிடுவதில்லை. சில முன்னும் சில பின்னும் முளை விடுகின்றன. இது போன்றதே வினைகளும் அவை பயனுக்கு வரும் முறையும்.

வினைப்பலன் அனுபவமாவதற்குப் புதிய வினை அல்லது முயற்சி தேவைப்படுகிறது. இந்தப் புதிய வினை மூலம் முன் செய்த வினை இன்ப துன்ப அனுபவமாகி அழிகிறது. ஆனால் புதிய வினை ஆகாமியமாகி பின் சஞ்சிதமாக நின்று திரும்பவும் பிராரப்தமாக வருகிறது. இங்ஙனம் ஒருவினை அனுபவத்திற்கு வந்து அழியும்போது, அதிலிருந்து புதிய வினைகள் உண்டாகின்றன. இப்படி அழிவும் தோற்றமும் (நாசமும் உற்பத்தியும்) தொடர்ந்து வருவதால் வினையின் இந்தத் தன்மை நாசோற்பத்தி எனப்படும்.

ஆற்றிலே ஒரு இடத்திலுள்ள நீர் ஓடிப்போகப் புதிய நீர் வருவதும் பின் அதுவும் ஓட மீண்டும் புதிய நீர் வருவதுமாக நீரோட்டம் தொடர்கிறது. ஆயினும், அங்கே ஆறு நிலைத்திருப்பதுபோல் தோன்றுகிறது. கன்மத்தின் தன்மையும் இப்படி இருப்பதால் அது பிரவாகநித்தம் என்றும் கூறப்படும்.

வினையாலும் அதன் பலனாலும் அனுபவம் கிடைக்கிறது. அனுபவத்தினால் அறிவு வளர்கிறது. இதனால் ஆணவ மலப்பிடிப்பு குறைகிறது. அறிவு முதிர்ந்து பக்குவமடைந்த நிலையில் தனது உண்மை இயல்பையும் இறைவனுக்கும் தனக்குமுள்ள உறவையும் உயிர் அறிகிறது. அவனின் அளவிலாக் கருணையை உணர்ந்து வீடுபேறடைகிறது. கன்மம் மலமாகக் கருதப்படினும் உயிருக்கு உதவுவதாகவும் உள்ளது.

வினையை அனுபவிப்பதற்காக எமக்குப் பிறவிகள் வருகின்றன. முன் செய்த வினை பலனுக்கு வந்து இப்பிறவியில் அனுபவமாவதோடு, (அந்த அனுபவ முயற்சியால்) அது அடுத்த பிறவிக்கும் காரணமாக அமைகிறது. ஒருவன் செய்த விளைவினால் பெற்ற நெல்லின் ஒரு பகுதி உணவுக்கும் மீதி பின் செய்யப்படும் பயிருக்கு வித்தாகவும் இருப்பது போன்றது இது. சிவஞான சித்தியார் இதனைப் பின்வருமாறு விளக்கும்:

*மேலைக்கு வித்து மாகி விளைந்தவை உணவும் ஆகி*
*ஞாலத்து வருமாப் போல நாம்செய்யும் வினைகள் எல்லாம்*
*ஏலத்தான் பலமாச் செய்யும் இதம்அகி தங்கட் கெல்லாம்*
*மூலத்த தாகி என்றும் வந்திடும் முறைமை யோடே.*

## முயற்சிக்கு இடமில்லையா?

நாம் பெற்ற பிறவிகளுக்கும் எமது இன்ப துன்ப அனுபவங்களுக்கும் நாம் முன் செய்த வினை காரணமென்றால், மனித முயற்சிக்கு இடமில்லையா என்ற கேள்வி எழுகிறது. இதற்கான விடையை ஒரு உதாரணம் மூலம் விளக்கலாம். சீட்டாட்டத்தில் ஒருவனுக்கு ஒரு குறிப்பிட்ட சீட்டுக்கள் கிடைக்கின்றன. இது அவனின் முயற்சிக்கு அப்பாற்பட்டது. அந்தச் சீட்டுக்களைப் பொறுத்தே ஆட்டத்தில் ஏற்படும் வெற்றி தோல்வியும் ஓரளவு அமைகிறது. இது அவனின் வினைப் பயன் எனலாம். ஆனால், கிடைத்த சீட்டுக்களை வைத்து எப்படி ஆடி வெற்றியீட்ட வேண்டுமென்பது அவனின் முயற்சியைப் பொறுத்தது. ஆகவே, ஊழ் வலிதாயினும் முயற்சிக்கும் இடமுண்டு என்பது பெறப்படும். இதனாலேயே 'ஊழிற் பெருவலி யாவுள' என்று கேட்ட திருவள்ளுவர் 'முயற்சி திருவினை யாக்கும்' என்றும் கூறினார்.

வினையினால் பிறவியும் பிறவியால் வினையும் மாறி மாறி வருகின்றன. சங்கிலித் தொடர்போல் நீளும் பிறவியிலிருந்தும் வினையிலிருந்தும் விடுபட முடியாதுபோல் தோன்றுகிறது. ஆயினும் இறையருளால் நாம் இத்தொடரிலிருந்து விடுபட முடியுமென அருளாளர் உணர்த்தியுள்ளனர்.

ஒருவன் செய்யும் தீவினைக்குக் காரணம் அவனைப் பிடித்துள்ள ஆணவமே. நல்வினை செய்பவன் பொதுவாக 'நான் செய்கிறேன்', 'நான் சேர்க்கும் புண்ணியம்', 'என்னால் செய்யப்படுகிறது' என்ற தற்செருக்குடன் செய்வது இயல்பு. இதுவும் ஆணவத்தின் சேர்க்கையால் வந்ததே. இந்த இரு

வினைகளும் புதிய வினைகளுக்கு வழிவகுக்கின்றன. ஆகையாற்றான் நல்வினை பொன்விலங்கு என்றும் தீவினை இரும்பு விலங்கென்றும் கூறப்படுகிறது. ஆணவம் என்னும் இருளுடன் சேர்ந்தவை என்பதால் இவற்றை 'இருள் சேர் இருவினை' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

வினையை நாம் அனுபவித்தே தீரவேண்டுமென்பது பொதுவான நியதி. இனியும் அது வளராமல் இருக்கவும் அதிலிருந்து விடுபடவும் வள்ளுவரே வழி சொல்கிறார். நல்லனவே செய்ய வேண்டும், அவற்றையும் 'நான் செய்கிறேன்' என்ற தற்செருக்கின்றி, அது இறை செயல் என்று எண்ணிச் செய்ய வேண்டும். வினைப்பயன் எதுவானாலும் அது இறைவழி வந்ததென்று எண்ணவேண்டும். தற்செருக்கும் ஆணவப்பிடிப்புமின்றி இறைவழி நின்று செய்யும் வினைகள் எம்மைத் தொடர மாட்டா.

*இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.*

- திருக்குறள்

# மாயை எனும் உள்பொருள்

பொருள் சக்தியாகவும் சக்தி பொருளாகவும் மாறுகின்றன. ஒன்றுமே இல்லாத வெறுமையில் இருந்து எவையும் தோன்றுவதில்லை. இது இன்றைய விஞ்ஞானக் கருத்து.

## என்றும் உள்ளது

இந்த விஞ்ஞானக் கருத்தைப் பிரதிபலிப்பதாக சைவத்தின் தத்துவக் கொள்கை அமைந்திருக்கிறது. 'உள்ளதே தோன்றும்' என்ற கொள்கை சைவத்தில் சற்காரியவாதம் எனப்படும். சத் என்றால் உள்ள ஒரு பொருள்; காரியம் என்றால் தோன்றும் அல்லது வெளிப்படும் ஒன்று என்பது கருத்து. இதிலிருந்து 'இல்லது தோன்றாது' என்பது பெறப்படுகிறது. பொருட்கள் எல்லாம் மாயை என்னும் நுண் பொருளிலிருந்து தோன்றியவை என்பது சைவத்தின் கோட்பாடு. நாம் வாழும் உலகத்தின் தோற்றத்துக்கு வித்தாக உள்ளது மாயை.

சைவ சித்தாந்தப்படி மாயை என்பது என்றுமுள்ள ஒரு நித்தியப் பொருள். வேதாந்திகள் கூறுவதுபோல அது ஒரு பொய்த் தோற்றம் அல்ல. உருவமற்ற ஆற்றலாய் எங்கும் வியாபித்துள்ளது மாயை. அது இறைவனுக்கு வேண்டும்போது பயன்படுத்தப்படும் சக்தியாக (பரிக்கிரக சக்தியாக)உள்ளது.

மாயை என்ற சொல்லை மா யா என்றும், மாய் ஆ என்றும் பிரித்துப் பொருள் காண்பதுண்டு. மா அல்லது மாய் என்றால் ஒடுங்குதல் (மாய்தல்); யா அல்லது ஆ என்றால் தோன்றுதல் (ஆதல்). இதனால் பொருள்களின் தோற்றத்துக்கும்

ஒடுக்கத்துக்கும் மூலமாக இருப்பது மாயை என்பது உணரப்படுகிறது. முற்றழிவுக் காலத்தில் (பிரளய காலத்தில்) எல்லாம் மாயையில் ஒடுங்கிப் பின் அதிலிருந்து தோன்றுகின்றன.

## சிறு விளக்கு

உயிர்கள் செயல் புரிவதற்கு உடலும் (தனு), மனம் முதலிய அகக் கருவிகளும் (கரணம்) தேவை. அத்துடன் அவை தங்குவதற்கு உலகமும் (புவனம்), செயல் அனுபவத்திற்குத் தேவையான உலகப் பொருட்களும் (போகம்) வேண்டும். இந்தத் தனு கரண புவன போகங்களை இறைவன் மாயையிலிருந்து படைத்துத் தருகிறான். குடத்தை மண்ணிலிருந்து படைத்துத் தருவது போன்றது இது. குடம் உடைந்ததும் மண்ணாக மாறுகிறது. மாயையிலிருந்து தோன்றிய பொருள்களும் அழிவுற்றதும் மாயையில் ஒடுங்குகின்றன.

ஆணவ இருளில் அறிவு மழுங்கி இருக்கும் உயிர் மாயா காரியமான தனு கரண புவன போகங்களுடன் கூடி, செயல்புரிந்து, அனுபவம் பெறுகிறது. இதன் மூலம் அது சிறிது சிறிதாக அறிவு பெறுகின்றது. இறையருள் கூடி, ஆணவப்பிடிப்பு நீங்கி, உண்மை ஞானம் கிட்டும் வரை இந்த அறிவு உயிரின் வளர்ச்சிக்கு உதவுகிறது. ஞாயிற்றின் ஒளி வரும் வரை கைவிளக்குப் போல் இருந்து உயிருக்கு ஞானத்தைக் கொடுப்பது மாயை. 'மாயா தனு விளக்கு' என்று *திருவருட்பயன்* என்னும் சாத்திர நூல் கூறுகிறது.

மாயா காரியங்கள் மூலம் பெறும் அறிவு, ஆணவமலச் சேர்க்கையுடன் உயிர் செய்யும் வினையால் வருவது. ஆகவே இது விபரீதமானதாகவும் மயக்கம் செய்வதாகவும் உள்ளது.

'மாயை மயக்கமும் செய்யுமன்றே' என்று *சிவஞான சித்தியார்* கூறுகிறது. இதனால் உயிரின் அறிவு வளர்ச்சிக்கு உதவும் மாயை ஒரு மலமாகக் கருதப்படுகிறது.

## தன்மையும் விருத்தியும்

மாயை ஒன்றே ஆயினும் அதன் தன்மையால் அது சுத்த மாயை, அசுத்தமாயை என்று இரண்டாகக் கூறப்படுகிறது. ஆணவம், கன்மம் ஆகிய மலங்களுடன் சேர்ந்த நிலையில் அது அசுத்தமாயை எனப்படுகிறது. சுத்தமாயை மயக்கம் செய்வதில்லை. அசுத்தமாயை மயக்கம் செய்யும்.

உயிர்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகையாக உள்ளன என்று முன்பு கூறினோம். அவை மூவகையாக உள்ளதால் அவைக்குத் தேவையான 'உலகமும்' மூவகையாக உள்ளன. அவை முறையே சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதிமாயை எனப்படும். சுத்தமாயையும் அசுத்தமாயையும் வேறொன்றின் காரியமாகாத காரணப் பொருள்கள். பிரகிருதிமாயை அசுத்தமாயையின் காரியப் பொருள். ஆகவே இதுவும் உண்மையில் அசுத்தமாயையே.

தனு கரண புவன போகங்கள் மாயையிலிருந்து தோன்றும் போது முதலில் தத்துவங்களாகத் தோன்றுகின்றன. தத்துவங்களிலிருந்து பொருள்கள் தோன்றுகின்றன. சைவ சித்தாந்தப்படி முப்பத்தாறு தத்துவங்கள் உள்ளன. பிற மதங்கள் இருபத்திநாலு தத்துவங்கள் (பிரகிருதிமாயா தத்துவங்கள்) பற்றியே கூறும்.

முப்பத்தாறு தத்துவங்களில் ஐந்து சுத்தமாயா தத்துவம் எனவும் ஏழு அசுத்தமாயா தத்துவம் எனவும் இருபத்து நாலு பிரகிருதிமாயா தத்துவம் எனவும் தொகுக்கப்பட்டுள்ளன.

சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை ஆகிய மூன்று வகைத் தத்துவமும் முறையே சிவதத்துவம், வித்தியா தத்துவம், ஆன்மதத்துவம் என்றும் அழைக்கப்படும்.

## இருவகை உலகம்

மாயையின் வெளிப்பாடாகத் தோன்றுபவை சொல்லுலகம், பொருளுலகம் என இருவகையாக உள்ளன. இவற்றை வடமொழியில் சப்தப் பிரபஞ்சம், அர்த்தப் பிரபஞ்சம் என்பர். சொல்லுலகில் உள்ளது வாக்கு (மொழி). இது நான்கு வகையாக உள்ளன.

நாம் பேசும் மொழி ஒலியாக வெளிவருமுன் நுண்ணிய நிலையில் இருக்கும். முதலில் காரண நிலையில் மிகவும் நுண்ணியதாக இருக்கும்பொழுது சூக்குமை எனப்படுகிறது. இது 'நாதம்' என்றும் 'பரை' என்றும் கூறப்படும்.

சூக்குமை வாக்கு விருத்தியாகி வந்த நிலையில் பைசந்தி எனப்படும். பைசந்தி (பஸ்யந்தி) என்றால் விளங்குவது என்பது பொருள். இது ஒருவாறு விளங்கியும் விளங்காமலும் இருக்கும் நிலை.

பைசந்தி வாக்கு விருத்தியாகி நிற்கும் நிலையில் மத்திமை எனப்படும். இது குரல் அடியில், வெளியே சொல்லவும் கேட்கவும் படாத நிலையில் உள்ளது.

மத்திமை வாக்கு விருத்தியாகி வைகரி வாக்காக வருகிறது. இது சொல்லவும் கேட்கவும்படுவது. வைகரி என்றால் விகாரப்படுவது, (ஒலிக் கூறுகளாகச் சிதறிவருவது), என்பது பொருள்.

இந்த நால்வகை வாக்குகளும் சுத்தமாயா காரியங்கள். ஆயினும் அசுத்தமாயா, பிரகிருதிமாயா உலகங்களில் சென்று வேறுபட்ட தன்மைகளை அடைந்து பயன் தருகின்றன.

சைவசித்தாந்தம் கூறும் முப்பத்தாறு தத்துவங்களும் பொருள் உலகைச் சேர்ந்தவை.

உயிர்கள் ஆணவமல இருளில் அழுந்தி, அறிவு செயல் இன்றி அனாதியே இருந்தன. இறைவன் கருணை கொண்டு எல்லா உயிர்களுக்கும் ஒரே தன்மையான நுண்ணுடம்பை மாயையிலிருந்து படைத்துக் கொடுத்தான். இந்த நுண்ணுடம்பு புரியட்ட காயம் எனப்படும். மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் மூன்றும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன் மாத்திரைகள் ஐந்தும் சேர்ந்தவை இந்த நுண்ணுடல். இது பிறவிகள் தோறும் உயிருடன் சேர்ந்திருக்கும்.

*நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய், உலகத் திற்கோர்*
*வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய், விமல னுக்கோர்*
*சத்தியாய் புவன போகம் தனுகர ணமும் உயிர்க்காய்*
*வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யும் அன்றே.*

- சிவஞானசித்தியார்

# ஆன்ம வளர்ச்சி

உலகில் வாழும் உயிர்களெல்லாம் வளர்ச்சியடைகின்றன. வளர்ச்சி இயற்கையானது. இந்தப் பிறவியில் மட்டுமன்றி முந்தின பிறவிகளிலும் உயிர்கள் வளர்ச்சியடைந்துள்ளன. இனி வரும் பிறவிகளிலும் இந்த வளர்ச்சி தொடரும். ஓரறிவுள்ள உயிர்கள் ஈரறிவுள்ளவையாகி, மூவறிவு, நாலறிவு, ஐந்தறிவு உள்ளவையாக வளர்ந்து ஆறறிவுள்ள மனிதப் பிறவிக்கு வந்துள்ளன. மனிதரிலும் மிருகத் தன்மையிலிருந்து மனிதத் தன்மைக்கு வளர்ச்சி ஏற்படுகிறது.

ஆன்ம வளர்ச்சிக் கேற்ப அறிவு விளங்குகிறது; ஆணவம் நீங்குகிறது. ஆகவே, ஆன்ம வளர்ச்சி என்பது ஆணவமல நீக்கம் எனக் கருதலாம். முத்தியடையும் வரை இந்த வளர்ச்சி தொடர்கிறது. இந்தப் பிறவியுடன் நிரந்தரமான சொர்க்கமோ நரகமோ (eternal heaven or hell) கிடைக்குமென்ற கொள்கை சைவத்தில் இல்லை. முத்தியும் இறையின்பமும் உயிர்களின் உரிமை என்பதைச் சைவம் உணர்த்துகிறது.

## கேவல நிலை

பிறவிகள் எடுக்குமுன் உயிர் ஆணவ இருளில் இருந்தது. செம்பிற் களிம்பு போல இயற்கையாக உயிர்களுடன் சேர்ந் திருப்பது ஆணவம். தன்னையும் தன் இயல்பையும் அறியாது *காரிருளில் கண்ணிலாக் குழவி* போல் கிடக்கும் உயிரின் இந்த நிலை கேவலம் எனப்படும்.

கேவல நிலையில் இருக்கும் உயிரின் மேல் கருணை கொண்டு அதனை ஈடேற்றுவதற்காக இறைவன் மாயையிலிருந்து நுண்ணுடம்பைப் படைத்துக் கொடுக்கிறான். புரியட்டகாயம் எனும் இந்த நுண்ணுடம்பு (சூக்கும உடம்பு) குறித்து மாயை பற்றிய கட்டுரையில் முன்னர் கூறப்பட்டது.

எல்லா உயிர்களுக்கும் ஒரே தன்மையதாய்க் கொடுக்கப் பட்டிருக்கும் இந்த நுண்ணுடம்பைப் பெற்றதும் உயிர்கள் இயங்கத் தொடங்குகின்றன. அவற்றின் அறிவு, இச்சை, செயல் ஆகியவை வெளிப்படுகின்றன. இச்சையின் வெளிப்பாட்டிற்கமைய விருப்பு வெறுப்புக்கள் உண்டாகி, இவை உயிர்களின் முதல் வினைக்குக் காரணமாகின்றன. இந்த வினைக்கேற்ப உயிர்களுக்கு பருவுடம்புகள் (தூல உடம்புகள்) இறைவனால் மாயையிலிருந்து படைத்தளிக்கப்படுகின்றன. உயிர் எடுக்கும் இந்தப் பருவுடல் மூலம் வினையும் வினை காரணமாக மீண்டும் உடலும் என்று பிறவிகள் தொடர்ந்து வருகின்றன. ஆகவே, உயிர்களுக்கு இறைவன் முதல் கொடுத்த நுண்ணுடம்புகள் ஒரே தன்மையாக இருக்க, பின்னர் பிறவிகள் தோறும் வரும் பருவுடம்புகள் அவற்றின் வினைக்கேற்ப வேறுபடுகின்றன என்பது தெளிவு. பின்வரும் திருக்குறள் இதனை உணர்த்துவதாக உள்ளது.

*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்.*

## வினையும் பயனும்

நாம் பலவகை இன்ப துன்பங்களை அனுபவிக்கிறோம். கல்வி, புகழ், செல்வம் போன்ற பேறுகள், இழப்பு, இறப்பு,

இன்பம், பிணி, மூப்புப் போன்றவை எல்லாம் முற்பிறப்பில் நாம் செய்த வினைகளின் பலன்களே. இந்தப் பிறப்பில் அனுபவித்துப் போக்க வேண்டியவை அவை.

இவற்றை அனுபவித்தற்காகப் புதிய வினைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்புதிய வினைகளால் பழைய வினைகள் கழிந்தாலும் இவைகளே நல்வினை, தீவினையாகி, புண்ணிய பாவங்களாக உயிரைத் தொடர்கின்றன. இதனால் மேலும் பிறவிகள் வருகின்றன. இதனை விளக்குவதாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

*பேறுஇழப்பு இன்பமொடு பிணிமூப்புச் சாக்காடு என்னும்*
*ஆறும் கருவுட்பட்டது அவ்விதி அனுபவத்தால்*
*ஏறிடும் முன்புசெய்த கன்மம்இங் கிவற்றிற்கு ஏது,*
*தேறுநீ இனிச்செய் கன்மம் மேல்உடல் சேருமன்றே.*

- சிவஞானசித்தியார்

முன் கூறப்பட்ட புரியட்ட காயம் என்ற நுண்ணுடம்போடு உயிர் பிறவி எடுக்கிறது. முத்தியடையும் வரை இந்தப் புரியட்ட காயத்துடனே உயிர் இயங்குகிறது. உயிரின் வினைப்பயன்கள் புண்ணிய பாவப் பதிவுகளாக புரியட்டகாயத்திலுள்ள புத்தி தத்துவத்தில் நின்று பிறவிகள் தோறும் தொடர்கின்றன. உடல் அழிந்த பின்னும் மறுபிறவி எடுக்க முன்னுமான இடைக்காலத்தில் உயிர் தனது நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப சில அனுபவங்களைப் பெறுகிறது. நல்வினைப் பலனுக்கு ஏற்ப இன்பம் அனுபவிக்கும் ஒரு நிலையும் தீவினைப் பலனுக்கு ஏற்ப துன்பம் அனுபவிக்கும் ஒரு நிலையும் இறந்த பின் கிடைக்கின்றன. இந்த இரு நிலைகளும் சொர்க்கம், நரகம் என்று கூறப்படும். இத்தகைய

அனுபவங்கள் இன்றி அடுத்த பிறவி எடுக்கும் வரை உயிர் செயலற்றுக் கல்போல் கிடப்பதும் உண்டு. மாணிக்கவாசகர் சிவபுராணத்திலே 'கல்லாய்' இருக்கும் இந்த நிலையையும் உயிர்கள் எடுக்கும் ஒரு பிறவியாகக் குறிப்பிடுகிறார்.

வினை அறிவற்ற சடமாதலால் அது தானாக உயிரின் அனுபவத்துக்கு வரமுடியாது. தொடர்ந்து வரும் வினைத் தொகுதியிலிருந்து ஒரு பகுதியை இறைவனே பிறவி எடுத்த உயிருக்கு ஊட்டுகிறான். வினை செய்து அனுபவம் பெறுவதால் உயிரின் அறிவு விளக்கமுறுகிறது. அதன், ஆணவப்பிடிப்பு நீங்குகிறது. இதற்கு உதவும் இறைவனின் கருணையை நாம் எண்ணுவதில்லை.

எல்லாம் வல்ல இறைவனால் உயிர்களைப் பற்றிய ஆணவமலத்தை நீக்கமுடியாதா என்று கேட்கலாம். ஒரு நோயாளிக்குத் தொடர்ந்து மருந்து கொடுத்துச் சிறிது சிறிதாக அவனின் நோயை ஒரு வைத்தியன் நீக்குகிறான். எத்தகைய சிறந்த வைத்தியனாலும் நோயை உடனடியாக நீக்க முடியாது. எந்தத் துறையிலும் பெரும் பதவிக்கு வருமுன் ஒருவன் பள்ளியில் ஆரம்பக்கல்வி பயின்று, மேற்கல்வி மேற்கொண்டு, பின் பல்கலைக்கழகத்தில் படித்து, பட்டம் பெற்று, அதன்பின் அனுபவங்கள் பெற்றே வரவேண்டியுள்ளது. இந்தப் படிப்பும் அனுபவமும் அவனின் அறியாமையைப் போக்கி ஆற்றலை வளர்க்கத் தேவைப்படுகின்றன. இவை இல்லாத ஒருவனுக்கு அப்பதவியைக் கொடுத்தால் அவனால் எதுவும் செய்ய முடியாது. இந்த உதாரணங்கள் மூலம் இறைவன் உயிர்களுக்குச் செய்யும் உதவிகளையும் உயிரின் வளர்ச்சியையும் நாம் உணரலாம்.

## விதியையும் வெல்லலாம்

தொடர்ந்து பெருகும் வினைகளிலிருந்து விடுதலையே இல்லையென்று எண்ணத் தோன்றும். 'எல்லாம் விதிப்படியே நடக்கும், எம்மால் எதுவும் நடைபெறாது' என்று எண்ணி ஏதும் செய்யாமல் இருக்கவும் நேரும்.

முயற்சி செய்யவேண்டியது உலக நியதி. எமது முயற்சியையே வினையை வெல்லும் வழியாக அமைக்கலாம். 'முயற்சி திருவினையாக்கும்' என்பது வள்ளுவர் வாக்கு.

விதியை வென்று வாழ்வு சிறக்கவும் உயிர் வளர்ச்சியடையவும் சில வாழ்வியல் நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென எல்லா மதங்களும் அறிவுறுத்துகின்றன. அன்பு, அறம், ஒழுக்கம் முதலிய நற்பண்புகளை வளர்த்தல் அவசியம். 'அன்பே சிவம்' என்று திருமந்திரம் கூறுகிறது. 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்' என்றும், 'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' என்றும் திருக்குறள் கூறுகிறது. நற்பண்புகளை வளர்ப்பதோடு நற்பணிகள் செய்வதும் அவசியம் என்று சைவம் உணர்த்துகிறது. சைவ நாயன்மார்களும் பிற அருளாளர்களும் சமுதாயப்பணி செய்தவர்கள். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று கூறிய அப்பர் சுவாமிகள் தொண்டின் திருவுருவமாகத் திகழ்ந்தார். நற்குணங்களை வளர்த்து ஒழுக்கம் வழுவாது பணிசெய்பவரின் வாழ்வு இறை வாழ்வாக மலர்கிறது. ஆன்மவளர்ச்சிக்கு இத்தகைய நல்வாழ்வுடன் இறைவழிபாடும் தேவை.

நாம் செய்யும் செயல்கள் எல்லாம் 'என்னால் ஆவதில்லை, அவை இறையருளால் நடப்பன' என்று எண்ணிச் செய்தால், 'நான்', 'எனது' என்னும் தற்செருக்கு நீங்கும்; ஆணவப் பிடிப்புக் குறையும். இப்படிச் செய்வதால் ஆகாமிய வினை பெருகாது. ஆகவே, வினையிலிருந்து விடுபட 'நான் செய்கிறேன்' என்று எண்ணாமல் 'இறைவன் திருவருளால் செய்கிறேன்' என்று எண்ணி வினை செய்ய வேண்டும். இதனைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

*உலகினிலென் செயல்எல்லாம் உன்விதியே நீயே*
*உள்நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும்*
*நிலவுவதோர் செயல்எனக்குஇன்று உன்செயலே என்றும்*
*நினைவார்க்கு வினைகளெலாம் நீங்கும் தானே.*

\- சிவஞானசித்தியார்

இப்படி வினைசெய்யும் நிலையை அடைவதற்கும் இறை அருள் கூடவேண்டும். இதற்குத் திருமுறைகளை நம்பிக்கையோடு ஓதுவதும் அவசியம். நாயன்மார்கள் திருமுறைகளைப் பாடி விதியை வென்று காட்டியவர்கள்.

## பாசநீக்கமும் வீடுபேறும்

இவ்வாறு நல்வழியில் ஒழுகுவதும் திருமுறைகளை ஓதுவதும் இறைவழிபாடு செய்வதும் அகநிலை மாற்றத்தை உண்டு பண்ணி ஆன்மா வளர்ச்சியடையத் துணை புரியும். தன்முனைப்பும் தற்செருக்கும் அகன்று எல்லாம் இறைவன் செயல் என்ற உணர்வு வந்த நிலையில் ஆணவமலத்தின் மறைப்பு நீங்கி உயிரின் அறிவு விளங்கும். இது மலபரிபாகம் எனப்படும்.

இந்த நிலையில் நாம் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள் எம்மாலே வந்தவை என்றும் அவற்றிற்குப் பிறர் காரணமல்லவென்றும் உணரும் தெளிவு வரும். நல்வினை தீவினைப் பயன்களாகிய இன்பதுன்ப அனுபவங்களை விருப்பு வெறுப்பின்றி சமமாக நோக்கும் அகநிலைப் பண்பு உண்டாகும். இது இருவினை ஒப்பு எனப்படும்.

மலபரிபாகமும் இருவினை ஒப்பும் வந்ததும் திருவருள் ஆன்மாவை ஆட்கொள்ளும். இது சத்திநிபாதம் எனப்படும். சத்திநிபாதம் என்பதற்குத் திருவருள் வீழ்ச்சி என்பது பொருள்.

மலபரிபாகம், இருவினைஒப்பு, சத்திநிபாதம் ஆகியவை கூடிய ஆன்மா தன்னைப் பிணித்திருக்கும் மும்மலக்கட்டிலிருந்து விடுதலையடையும். முத்தி என்பது இந்த விடுதலையே. ஆன்மவளர்ச்சியின் இறுதிப்படி முத்தி என்று பொதுவாக எல்லா மதங்களும் கூறும். பாசத்திலிருந்து விடுதலை பெற்று முத்தியடைவதோடு அதற்கு மேலும் இறையருளில் தோய்ந்து இன்பமடைதலே உயர்வான இறுதி நிலை என்று சைவம் கூறுகிறது. முத்தியும் சிவானந்த அனுபவமும் சைவம் கூறும் வீடுபேறு எனப்படுகிறது.

சார்ந்ததன் வண்ணமாக இருப்பது ஆன்மாவின் இயல்பு. ஆணவத்தைச் சார்ந்து இருந்த ஆன்மா அதனிலிருந்து விடுபட்டதும் இறைவனைச் சார்ந்திருக்கிறது. அப்பொழுது அது சிவத்தன்மை பெற்றிருக்கும். ஆயினும் சிவனைப்போல் ஐந்தொழில் முதலியன புரியும் திறன் அதற்கில்லை. எப்பொழுதும் இறைவன் ஆண்டான், ஆன்மா அடிமை என்ற நிலையே இருக்கிறது.

ஆணவம் என்றுமுள்ள பொருளாகையால் அது முத்தியிலும் அழிவதில்லை. ஆனால் அது உயிருக்கு மறைப்பை உண்டாக்க மாட்டாது. ஆன்மாவுக்கு இருவினை ஒப்பு வந்ததும் கன்மம் நீங்கிவிடும். முத்தியடைந்த பொழுது ஆன்மாவின் நுண்ணுடம்பு மாயையில் ஒடுங்கிவிடும்.

## இறை உயிர் உறவு

ஆன்மாவின் வளர்ச்சியில் இறைவன் ஆன்மாவைப் பிரியாது இருந்து இடையறாது உதவுகிறான். உடலோடு உயிர் ஒன்றாக இருப்பதுபோல் உயிரோடு இறைவன் ஒன்றாய் இருக்கிறான். உயிர் சேர்ந்து இருப்பதாலே உடல் நிலைபெற்று வாழுகிறது. அதுபோல் இறைவன் சேர்ந்து ஒன்றாய் இருப்பதால் உயிர் நிலை பெற்றுள்ளது.

இப்படி ஒன்றாய் நிற்பதுடன் இறைவன் உயிர்களின் வேறாயும் நிற்கிறான். உயிர் அறிவுப் பொருள் எனினும் அது அறிவதற்கு இறைவன் வேறாய் நின்று உதவ வேண்டியுள்ளது. வேறாய் நிற்கும்போது உயிர்களைக் கடந்தும் ஒன்றாய் நிற்கும் போது அவற்றின் உள்ளும் இருக்கிறான். கடவுள் என்ற சொல் இதனை உணர்த்துகிறது.

இங்ஙனம் ஒன்றாய், வேறாய் நிற்கும் இறைவன் உயிர்களுடன் உடன் நின்று, அவற்றின் செயல்களுக்கேற்பத் தானும் செயற்படுகிறான். குழந்தைக்கு உணவு ஊட்டும் தாய், தான் உண்டு காண்பிப்பதுபோல், அல்லது அது பேசுவதற்கு தான் பேசிக் காட்டுவதுபோல் இறைவன் செயற்பட்டு உயிர்களைச் செயற்பட வைக்கிறான். திருவிசைப்பாவில் வரும் 'நுகருமா

நுகரே', 'காணுமா காணே', 'விளம்புமா விளம்பே' போன்ற வார்த்தைகள் இதனை உணர்த்துவன.

உயிர்களுடன் இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும் இந்த உறவை அத்துவித உறவு என்று சைவ சித்தாந்தம் கூறும். துவிதம் என்பது இரண்டு; அத்துவிதம் என்பது இரண்டற்றது (ஆனால் ஒன்றல்ல). ஒன்றாய், வேறாய், உடனாய் நின்று உதவும் இறைவன் மும்மலமாகிய பாசத்தை நீக்கி ஆன்மாவைச் சிவத்தன்மை அடையச் செய்து அருளாகிய தன் திருவடிப் பேற்றை நல்குகிறான்.

*செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை*
*மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்*
*நம்மையுமோர் பொருளாக்கி நாய்ச்சிவிகை ஏற்றுவித்த*
*அம்மைஎனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.*

- திருவாசகம்

# சைவக் கோயில்கள்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஆன்றோர் வாக்கு. எல்லாச் சமயங்களும் திருக்கோயில் வழிபாட்டை வலியுறுத்துகின்றன. கோயில் (கோ+இல்) என்பதன் பொருள் பதி அல்லது தலைவன் ஆகிய இறைவன் எழுந்தருளும் இல்லம் என்பதே. ஆலயம் என்பதும் கோயிலைக் குறிக்கும் சொல். 'ஆ' என்பது ஆன்மாவையும் 'லயம்' என்பது சேர்தல் (லயித்தல்) என்பதையும் குறிப்பன. ஆகவே, ஆலயம் என்ற சொல் ஆன்மா இறையருள் பெற்று இறைவனுடன் சேர்வதை உணர்த்துகிறது.

## திருக்கோயில் அமைப்பு

சைவக் கோயில்களைச் சைவ ஆகமங்கள் கூறும் விதிமுறைகளின்படி அமைத்தல் மரபு. கோயில் அமைக்கப்பெறும் இடத்தைத் தேர்ந்தெடுத்தல், நிலத்தை அகழ்ந்தபின் செய்யவேண்டிய கிரியைகள், கோயிலின் அமைப்பு முறை, இறை மூர்த்தங்கள் எழுந்தருளும் இடங்கள், அவற்றை எழுந்தருளச் செய்யும் கிரியை முறைகள் ஆகிய பல செய்திகளை ஆகமங்களில் காணலாம். இவற்றை அறிந்த சிவாச்சாரியார், சிற்பக்கலைஞர், அறிஞர் ஆகியோரின் துணையுடன் கோயில்கள் கட்டப்பட வேண்டியது அவசியம்.

ஆலய அமைப்பில் சில உட்கருத்துக்கள் உள்ளன என்பதை ஆகமங்களிலிருந்து அறியலாம். உடம்பில் உயிர் விளங்குவது போன்று திருக்கோயில்களில் இறைவன் விளங்குகிறான். ஒருவகையில் பார்த்தால் மனித உடல் போன்றே

ஆலயங்கள் அமைந்துள்ளதைக் காணலாம். கோயிலின் மூலத்தானம் அல்லது கர்ப்பக்கிரகம் என்று கூறப்படும் கருவறை இறைவன் அருள் சுரக்கும் திருவுருவம் கொண்ட இடம். இது மனித உடம்பிலுள்ள தலை எனக் கொள்ளலாம். இதுபோல் அர்த்த மண்டபம் - கழுத்து, மகாமண்டபம் - மார்பு, யாகசாலை-நாபி, ஸ்தப மண்டபம் - தொடை அல்லது உடலின் கீழ்ப்பாகம், கோபுரம் - பாதம் என்று கொள்வதுண்டு. இன்னொரு வகையாக, கோபுரம்-வாய், நந்தி - நாக்கு, கொடிமரம் - உள்நாக்கு, தீபங்கள் - இந்திரியங்கள், கருவறை - இதயம், சிவலிங்கம் - உயிர் என்று ஒப்பிடுவதுமுண்டு.

கருவறையின் மேலுள்ள விமானம் மேலே போகப்போகக் குறுகி இருக்கும். உலகப் பற்றைச் சிறிது சிறிதாக விட்டு இறையருளை நோக்கி ஆன்மா வளர்வதை இது உணர்த்துகிறது. விமானத்தின் மேலுள்ள குடம்போன்ற கலசம் திருவருள் வெளியில் ஆன்மா ஒன்றித் திளைப்பதைக் குறிக்கும். கருவறையிலுள்ள மூலமூர்த்தி கருங்கல்லால் ஆனது. சிவன் கோயிலில் இலிங்கமும் பிற கோயில்களில் அக்கோயில்களின் பெயருக்கேற்ற இறை மூர்த்தங்களும் மூலமூர்த்திகளாக இருக்கும். திருவிழா நாளில் உலாவரும் உற்சவ மூர்த்தி மகாமண்டபத்தில் உள்ளது. இது பஞ்சலோகங்களால் செய்யப்பட்டது. இறைவனின் ஐந்தொழில் அல்லது பஞ்ச கிருத்தியங்களுக்குரிய ஆற்றலைக் குறிப்பது இந்தப் பஞ்ச லோகங்கள்.

## நந்தி, பலிபீடம், கொடிமரம்

ஸ்தப மண்டபத்தில் மூன்று முக்கிய உருவங்கள் உள்ளன. நந்திதேவர், பலிபீடம், கொடிமரம் ஆகியவை இவை. நந்தியும் பலிபீடமும் கருங்கற்களால் ஆனவை. கருவறையிலுள்ள மூலமூர்த்தியும் நந்தியும் பலிபீடமும் முறையே பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளைக் குறிப்பன. இங்குள்ள நந்திதேவர் பரிசுத்தமடைந்த ஆன்மாவைக் குறிப்பது. கோயிலில் சென்று கும்பிடும்போது, எமது பாசம் நீங்குவதைப் பலிபீடமும், இறைவனை அடைதலையே உயிர் அறமாகக் கொள்ள வேண்டுமென்பதை நந்தியும் என்றும் அருள் செய்யும் இறைவனைத் துதித்து அவனை அடையவேண்டுமென்பதை மூலமூர்த்தியும் உணர்த்துகின்றன. சிவன் கோயில்களில் நந்தி இருப்பது போன்று பிற கோயில்களில் அவற்றின் மூலமூர்த்தியுடன் தொடர்பான வடிவம் இருக்கும்.

கோயிலிலுள்ள கொடிமரம் பதியையும் கொடிச்சீலை பசுவையும் தர்ப்பக் கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆன்மா பாசத்திலிருந்து நீங்கி இறையருள் வழி நின்று மேல்நிலையான முத்தியடைவதைக் குறிப்பது கொடியேற்ற விழா. கொடிமரத்தில் ஆறு வட்டவடிவான முடிச்சுக்கள், சமதூர இடைவெளியில் உள்ளன. இந்த முடிச்சுக்கள் உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களைக் குறிப்பன. கொடி மரத்தை நடு நாடியான சுழுமுனையாகக் கொண்டு, ஆறு முடிச்சுக்கள் குறிக்கும் ஆறு ஆதாரங்கள் வழியாகக் குண்டலினி சக்தியை எழுப்பி இறைவனுடன் ஒன்றும் யோக நெறியையும் கொடிமரம் குறிக்கிறது.

## தேர், தீர்த்தம், திருவிழா

கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்கி இறுதியில் தேர், தீர்த்தம் ஆகிய விழாக்கள் நடைபெற்றுக் கொடி இறக்கத்துடன் முடிவுறும். நாலு பெரிய சில்லுகள் கொண்ட அகன்ற அடிப்பாகத்தை உடையது தேர். மேல் நோக்கி அதன் சுற்றளவு குறைந்துகொண்டு போகும். அடிப்பாகம் நாம் வாழும் உலகத்தைக் குறிப்பது. ஆன்மாவின் கேவல நிலையையும் இது குறிக்கும்.

உயிர்கள் பிறவிகள் எடுக்கமுன் ஆணவத்துடன் சேர்ந்திருந்த நிலை கேவலநிலை. பிறவிகள் எடுத்துக் கலை முதலிய தத்துவங்களுடன் சேர்ந்த நிலை சகலநிலை. ஆன்மா வளர்ச்சியடைந்து பாசத்திலிருந்து நீங்கிய நிலை சுத்த நிலை. தேரின் நடுப்பாகம் அலங்கரிக்கப்பட்டு இறைவன் எழுந்தருளும் பீடம் அமைந்துள்ளது. இது சகலநிலையைக் குறிக்கும். சகலநிலை ஆன்மாக்கள் இறைவனை இடையறாது வழிபட்டு அருள்பெற்று உய்ய வேண்டும் என்பதை இறைவன் அமர்ந்துள்ள நடுப்பாகம் உணர்த்துகிறது. தேரின் மேற்பாகம் சிவப்பு, வெள்ளை நிறச் சேலைகளால் மாறி மாறி ஐந்து வட்டங்களாகச் சுற்றப்பட்டு ஒடுங்கிச் செல்லும். இது ஐந்து சிவ தத்துவங்களையும் ஆன்மாவின் சுத்த நிலையையும் குறிக்கும். மேலே இருக்கும் முடி அல்லது கலசம் முத்தி நிலையைக் குறிப்பது. தேர் என்ற சொல்லே உலக வாழ்க்கையைத் தேர்ந்து இறைவனை அறிதல் என்ற பொருளைத் தருகிறது.

தேர்த் திருவிழாவை அடுத்து வரும் தீர்த்தம், அருள் வெள்ளத்தில் குளித்து ஆன்மா இறையின்பத்தை அனுபவிப்பதை உணர்த்துகிறது. ஆன்மாவின் மலங்கள் நீங்கி சத்திநிபாதம் (இறையருள் வீழ்ச்சி) உண்டாவதைக் குறிப்பது தீர்த்தத் திருவிழா.

திருவிழாக் காலங்களிலும் விசேட விழாக்காலங்களிலும் இறைவன் பலவித வாகனங்களில் அமர்ந்து வீதி வலம் வந்து அருள்புரிகிறான். எல்லா உயிர்களுக்கும் இறைவன் உடனிருந்து எப்பொழுதும் அருள்புரிவதை இது குறிக்கிறது. அத்துடன், என்றுமே அவன் ஆண்டவன், ஆன்மாக்கள் அடிமைகள் என்பதையும் உணர்த்துகிறது.

## திருக்கோயில் வீதிகள்

கோயில்களுக்கேற்ற வகையில் வீதிகளின் (பிரகாரங் களின்) எண்ணிக்கை இருக்கும். பெரிய கோயில்களில் ஐந்து அல்லது மூன்று வீதிகளும் சிறிய கோயில்களில் இரண்டு அல்லது ஒரு வீதியும் இருக்கும். இவற்றுக்கும் சில உட்கருத்துக்கள் உண்டு.

உள் வீதியில் சில இறை மூர்த்தங்களைக் காணலாம். இவை பரிவார மூர்த்திகள் எனப்படும். இறைவனின் வெவ்வேறு அருட்செயல்களைக் குறிப்பதாக இவை அமைந்துள்ளன. திருக்கோயில் வீதியில் எப்பொழுதும் வலமாக வந்து இத்தெய்வங்களை வழிபட வேண்டும். கோயில் வலம் வருதல் என்ற சொல் கோயிலை மையமாக வைத்து வலப்பக்கமாக வருதலைக் குறிக்கும்.

ஆன்மாவுக்கு ஐந்து வகையான உடம்புகள் உண்டு. உணவினால் உண்டான பருவுடம்பு ஒன்று. இது அன்னமய கோசம் என்றும் தூல சரீரம் என்றும் கூறப்படும். இது தவிர அசுத்தமாயா தத்துவங்களாலான நாலு நுண்ணுடம்புகள் உண்டு. இவை பிராணமய கோசம் எனப்படும் சூக்கும சரீரம், மனோமய கோசம் எனப்படும் குண சரீரம், விஞ்ஞான மயகோசம் எனப்படும் கஞ்சுக சரீரம், ஆனந்த மயகோசம் எனப்படும் காரண சரீரம் ஆகும். இந்த ஐந்து சரீரங்களும் முறையே ஒன்றைவிட ஒன்று நுண்மையானது.

ஐந்து வீதிகள் உள்ள கோயிலில், அவை ஆன்மாவின் ஐந்து சரீரங்களையும் குறிப்பன. ஐந்தாவதாக உள்ள வெளிவீதியிலும் பார்க்க அதன் உள்ளிருக்கும் நான்காவது வீதி (சுற்றளவு குறைந்து) குறுகியதாகி, தூல சரீரத்திலும் பார்க்க சூக்கும் சரீரம் நுண்மையானதென்பதை உணர்த்துகிறது. இங்ஙனமே ஒவ்வொரு வீதி அமைப்பும் ஒவ்வொரு சரீரத்தின் நுண்மையை உணர்த்துகிறது.

திருக்கோயிலில் மூன்று வீதிகள் மட்டும் இருப்பின் அவை தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம் ஆகியவற்றைக் குறிக்கும். அத்துடன் ஆன்ம தத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் ஆகிய மூன்றையும் குறிப்பதாகக் கூறுவதுமுண்டு. இவற்றைவிட உயிர்களின் கேவலம், சகலம், சுத்தம் ஆகிய நிலைகளையும் ஆன்மா அடையும் பாசஞானம், பசுஞானம், பதி ஞானம் ஆகியவற்றையும் குறிப்பதாகவும் கூறப்படும்.

இரண்டு வீதிகள் மட்டுமே உளதாயின் அவை ஆன்மாவின் தூல சரீரத்தையும் சூக்கும சரீரத்தையும் குறிக்கும். ஒரு வீதி மட்டுமே இருப்பின் அது ஐந்து சரீரங்களையும் ஒருங்கே குறிக்கும்.

## பூசை, அபிஷேகம் முதலியன

திருவிழாக் காலங்களில் இறைவன் திருவீதி வலம் வருதல், எல்லா உலகங்களையும் உயிர்களையும் காத்து அருளலைக் குறிப்பதாகும். ஆண்டுக்கொருமுறை மட்டுமன்றி மாதங்களில் வரும் விசேட தினங்களிலும் உற்சவங்கள் நடைபெறும். மார்கழித் திருவெம்பாவை நாட்களில் நடக்கும் உற்சவம் முக்கியமானது. கந்தசட்டி, நவராத்திரி போன்ற நாட்களிலும் கோயில்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும். இத்தகைய சிறப்பு நாட்களில் நடைபெறும் பூசை நைமித்திய பூசை எனப்படும். நாளாந்தம் நடைபெறுவது நித்திய பூசை. இது மூன்று காலப்பூசை அல்லது ஆறுகாலப்பூசையாகக் கோயிலின் பொருள் வசதிப்படி நடைபெறும்.

பூசையில் தூப தீபம் காட்டி நைவேத்தியம் படைப்பது வழக்கம். தூபம் காட்டுவதால் எமக்குள்ள ஆற்றல் அல்லது கிரியா சக்தி எழுப்பப்படுகிறது. தீபம் அறிவு அல்லது ஞானத்தை விளக்குவது. இதனால் எமது அறிவு விளக்கமுற்று ஆணவம் என்னும் இருள் விலகும். கற்பூரம் வெண்மை நிறமானது; சாத்துவிக குணத்தைக் குறிப்பது. கற்பூராதானையால் எமக்குச் சாத்துவிக குணம் மிகுந்து, பாசங்கள் எரிந்து, எங்கும் நிறைந்துள்ள இறையருளில் ஒன்றுகிறோம்.

பசுவின் பால், பன்னீர் போன்ற பலவகைப் பொருட்களால் இறைவனுக்கு அபிடேகம் செய்யப்படும். அதன்பின் மலரிட்டுத்

தூப தீபம் காட்டிப் பூசை செய்யப்படும். தனிப்பட்ட அர்ச்சனைகளும் செய்யப்படும். இவையெல்லாவற்றுக்கும் தத்துவக் கருத்துக்கள் உண்டு. பழம் போன்ற பொருட்கள் ஐம்பூதங்களில் ஒன்றான நிலத்தையும், பால் போன்றவை நீரையும் கற்பூரதீபம் போன்றவை நெருப்பையும் வாசனை மிக்க தூபப் பொருட்கள் காற்றையும் ஓதப்படும் மந்திரம், அருட்பாடல்கள், மணியோசை போன்றவை ஆகாயத்தையும் குறிப்பன. உலக வாழ்விற்குத் தேவையான பஞ்சபூதங்களைப் படைத்தளித்த இறைவனைச் சார்ந்தே நாம் இருக்கிறோம் என்பதை அபிஷேகங்களும் பூசைகளும் உணர்த்துகின்றன.

திருக்கோயில் புதிதாகக் கட்டப்பட்டவுடன் கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) நடைபெறும். இந்த விழாவின் பின்னர்தான் கோயில் வழிபாட்டுக்குத் திறந்து விடப்பட்டு, பூசைகள் திருவிழாக்கள் நிகழும். குடமுழுக்கில் கருவறையின் மேலுள்ள விமானத்துக் கலசம் கும்பத்திலுள்ள நீரால் அபிஷேகம் செய்யப்படும். திருக்கோயில் நிகழ்ச்சிகளில் கும்பாபிஷேகம் முக்கியமான தொன்று. இதைவிடச் சங்காபிஷேகம் போன்ற அபிஷேகங்கள் இடைக்கிடை பக்தர்களால் செய்யப்படும். இந்த அபிஷேகங் களெல்லாம் சைவ ஆகம முறைப்படி நடைபெறுவன.

*காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக*
*வாய்மையே தூய்மை யாக மனமணி லிங்க மாக*
*நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்*
*பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே.*

- அப்பர் தேவாரம்

# தெய்வத்தின் திருவுருவங்கள்

அனைத்தையும் கடந்த பரம்பொருள் உயிர்களின் நலன் கருதி மூவகையான திருமேனிகளைக் கொள்கிறது. இவை அருவம், அருவுருவம், உருவம் எனப்படும். இவைபற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தோம். அருவம் புலன்களுக்குப் புலப்படாதது, அருவுருவம் சிலவேளை புலப்பட்டும் புலப்படாமலும் இருப்பது. உருவம் புலப்படுவது. அருவம் ஞான வடிவமாகவும் உருவம் உறுப்புக்கள் கொண்டதாகவும் விளங்குவன. இவை வெறும் கற்பனையில் எழுந்த வடிவங்கள் அல்ல. ஆகமங்களில் கூறப்பட்டவை; அருளாளரின் அகக்காட்சியில் விளங்கியவை.

## சக்தி வடிவம்

இறைவன் கொள்ளும் திருமேனிகள் அவனின் சக்தி வடிவானவை; அருட் செயல்களுக்கு ஏற்ற வகையில் அமைந்தவை. அவற்றை ஐந்து நிலைகளில் வகுத்து சிவம், சக்தி, சதாசிவம், ஈசுரம், வித்தை என்ற பெயர்களில் சித்தாந்தம் கூறும். ஒன்பது நிலைகளில் வகுத்து 'நவந்தரு பேதங்கள்' எனக்கொண்டு, ஒன்பது பெயர்களால் கூறுவதுமுண்டு. ஈசுரத்தை மகேசுரம் என்றும் வித்தையைச் சுத்தவித்தை என்றும் கூறும் வழக்கமும் உண்டு. இவற்றில் சிவமும் சக்தியும் அருவநிலை; சதாசிவம் அருவுருவநிலை; ஈசுரமும் வித்தையும் உருவநிலை.

சதாசிவ வடிவமாக அமைந்தது சிவலிங்கம். மகேசுர வடிவங்களாக இருபத்தைந்து மூர்த்தங்கள் உண்டு. இவற்றையும் வேறு திருவுருவங்களையும் திருக்கோயில்களில் காணலாம். இத்திருவுருவங்களைப் பற்றி அறிந்திருப்பது சைவர்களுக்கு

இன்றியமையாதது. எல்லாத் திருவுருவங்களையும் இச்சிறு நூலில் விளக்குவது இயலாததொன்று. சிலவற்றைப் பற்றிய சில விளக்கங்கள் இங்கே தரப்படுகின்றன.

## சிவலிங்கம்

சிவன் கோயில்களில் மூல மூர்த்தியாக இருப்பது சிவலிங்கத் திருவுருவம். இலிங்கம் என்பதன் பொருள் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. லிங்கம் - லிம் + கம். லிம் என்பது ஒடுங்குதலையும் (லயத்தையும்) கம் என்பது வெளிப்படுதலையும் குறிக்கும். பிரளய காலத்தில் பிரபஞ்சம் முழுவதும் எதில் ஒடுங்கி மீண்டும் வெளிவருகிறதோ அது லிங்கம் எனப்படுகிறது. லிங்கம் என்பதற்குச் சித்தரித்தல் என்றும் பொருள் உண்டு. ஐந்தொழில்களால் பிரபஞ்சத்தைச் சிவன் சித்தரிக்கிறான் என்ற பொருளில் லிங்கம் என்ற பெயர் வந்தது என்றும் நூல்கள் கூறுகின்றன.

தத்துவத்துறையிலும் சிவலிங்கத்துக்கு விளக்கமுண்டு. சிவதத்துவம் எனப்படும் சுத்தமாயா தத்துவம் பற்றி முன்னர் மாயை பற்றிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டது. இதில் நாதம், விந்து, சாதாக்கியம், மாகேசுரம், சுத்தவித்தை என்று ஐந்து தத்துவங்கள் உண்டு. சுத்தமாயையில் இறைவனின் ஞானசத்தி பதிவதால் உண்டாகும் ஓர் அசைவு நாத தத்துவமாகத் தோன்றுவது. அவனின் கிரியாசத்தி காரணமாகத் தோன்றும் ஒரு திரட்சி விந்து தத்துவமாக அமைகிறது. சிவலிங்கத்தின் நீள் வடிவமான மேற்பாகம் நாதத்தையும் வட்டவடிவமான கீழ்ப்பாகம் விந்துவையும் உணர்த்துவது. சிவனின் ஞானசத்தியும் கிரியா

சத்தியும் சமமாக நிற்கத் தோன்றுவது சதாசிவம் (சத்தி+சிவம்). இது சாதாக்கிய தத்துவம் எனப்படுவது. சிவலிங்கத்தின் முழுவடிவம் இதனைக் குறிப்பது. உயிர்களுக்கு இறைவன் அருள் செய்ய வந்த முதல் நிலை இது.

இலிங்கத்துக்கு ஒருவித உருவம் உண்டு. ஆயினும் காண்பவருக்கு இது எதனையும் விளக்காமல் அருவத்தைக் குறிப்பதாக அமைந்துள்ளது. அருவத்தையும் உருவத்தையும் ஒருசேர விளக்கும் இவ்வடிவம் சிவனின் அருவுருவத் திருமேனியைக் குறிக்கும் அறிவு சார்ந்த வடிவமாகும். சதாசிவலிங்கம், அண்டலிங்கம், பிண்டலிங்கம், ஆத்மலிங்கம் என்று சிவலிங்கங்களில் பல வகையுண்டு. திருக்கோயில்களில் மூல மூர்த்தியாக இருப்பது சதாசிவலிங்கம்.

சிவலிங்க வழிபாடு மிகவும் பழமையானது. தெய்வத் திருமேனிகள் அனைத்திற்கும் மூலமாக சிவலிங்கம் இருப்பதால், சிவலிங்க வழிபாட்டால் எல்லாத் தெய்வங்களையும் வழிபடும் பலன் கிடைக்கும்.

### விநாயகர்

விநாயகர் என்பதன் பொருள் தனக்குமேல் எவரும் இல்லாத ஒப்பற்ற தலைவர் அல்லது நாயகர் என்பதாகும். எந்தச் செயலைத் தொடங்கமுன்பு விநாயகரை வழிபட்டுத் தொடங்கினால் எவ்வித தடையுமின்றி அச்செயல் நிறைவேறும். தடைகள் அல்லது விக்கினங்களை நீக்குபவர் என்பதால் விக்கினேசுவரர் என்ற பெயர் விநாயகருக்கு உண்டு.

கணங்களுக்குத் தலைவன் என்பதால் கணபதி அல்லது கணேசன் என்றும் அழைக்கப்படுகிறார். 'க' என்ற எழுத்து ஞானத்தையும் 'ண' என்ற எழுத்து முத்தியையும் குறிப்பன என்றும் அதனால் கணபதி அல்லது கணேசன் ஞானத்தையும் முத்தியையும் தருபவன் என்றும் பொருள் கொள்வதுண்டு.

ஆனை முகமும் பேழை வயிறுமாக எலியின் மேல் அமர்ந்திருப்பது விநாயகர் வடிவம். துதிக்கையை ஐந்தாவது கரமாகக் கொண்டிருப்பதால் ஐங்கரன் என்று அழைக்கப்படுகிறார். ஐந்து கைகளும் இறைவனின் ஐந்தொழில்களைக் குறிப்பன. வியாச முனிவர் பாரதம் எழுதும்போது அவரின் எழுத்தாணி உடைந்ததால், தனது தந்தமொன்றை ஒடித்துத் தானே பாரதத்தை எழுதி முடித்ததாகப் புராணங்கள் கூறும். இதனை உணர்த்துவதாக அமைந்தது விநாயகர் கையிலிருக்கும் தந்தம். ஒற்றைக் கொம்புடன் இருப்பதால் ஏகதந்தன் என்பதும் அவருக்குள்ள ஒரு பெயர்.

ஓம் என்பது பிரணவ மந்திரம். ஒலிகளுக்கெல்லாம் மூலமாக இருப்பது இது. ஓம் என்ற வடிவமாக அமைந்தது யானையின் முகம். துதிக்கையின் நீளமான மேல் பகுதி நாத தத்துவத்தையும் வளைந்துள்ள கீழ்ப்பகுதி விந்து தத்துவத்தையும் குறிப்பன. பிரணவ மந்திரத்தின் மூலமாக உள்ளவை இத்தத்துவங்கள். எதனையும் எழுதத் தொடங்குமுன் பிள்ளையார் சுழியிட்டு எழுதுவது சைவ மரபு. அதிலுள்ள சிறு வட்டம் அல்லது சுழி விந்து தத்துவத்தையும் கோடு நாததத்துவத்தையும் குறிப்பன.

எவர் கண்ணிலும் படாமல் தொல்லை கொடுப்பது எலி. இது அஞ்ஞானமான அசுரனைக்குறிப்பது. அசுரனை வென்று அடக்கி அவனுக்கு அருள் செய்தவர் விநாயகர். அவரின் வாகனமான எலியும் அஞ்ஞான இருள் நீக்கி ஆன்மாக்களுக்கு இறைவன் அருள்வதை உணர்த்துவது. ஆணவம் முத்திநிலையில் (இறையருளின் முன்) அடங்கி இருக்கும் என்பதையும் குறிக்கிறது.

விநாயகர் அருள் பெற்று அரிய செயல்கள் செய்த ஆன்றோர் பலர். தில்லையிலே திருமுறைகள் இருக்கும் இடத்தை நம்பியாண்டார் நம்பிக்குக் காட்டியவர் திருநாரையூரிலுள்ள பிள்ளையார். சைவ சித்தாந்த சாத்திரங்களின் முதன்மை நூலான சிவஞானபோதத்தை அருளிய மெய்கண்ட தேவர் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள பிள்ளையாரின் அருள் பெற்றவர். சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாசம் சென்றடையமுன் ஔவையார் அங்கு செல்ல அருள்புரிந்தவர் விநாயகர். விநாயகரை வணங்குவதால் தடை நீங்குகிறது; விரும்பியது கிடைக்கிறது.

## முருகன்

முருகு என்பதற்கு அழகு, இளமை, தெய்வத்தன்மை என்று பல பொருள்கள் உண்டு. முருகன் என்ற தமிழ்ச் சொல் இந்தத் தன்மைகள் உள்ளவன் என்பதைக் குறிக்கும். சுப்பிரமணியன், கந்தன், கார்த்திகேயன் என்று பல பெயர்கள் முருகனுக்குண்டு.

சுப்பிரமணியன் என்ற பெயருக்கு வேதத்துக்குத் தலைவன், பரம்பொருளிலிருந்து தோன்றி ஒளிர்பவன் என்ற பொருள்கள்

உண்டு. சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து ஒளிப்பொறியாய்த் தோன்றி சரவணப் பொய்கையில் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன் என்பதால் சரவணபவன், கார்த்திகேயன் என்றும் அழைக்கப்படுகிறான். ஆறு குழந்தைகளாய் நின்று அம்பிகையின் அரவணைப்பால் ஒன்றாய்த் திரண்ட, ஆறுமுகங்கள் கொண்ட, திருவடிவம் என்பதால் கந்தன், ஆறுமுகன் என்ற பெயர்களும் உண்டு. கந்தன் என்ற சொல் திரண்டவன், திரண்ட தோள்கள் உடையவன் என்ற பொருளையும் (ஆன்மாக்களுக்கு) பற்றுக்கோடாக நிற்பவன் என்ற பொருளையும் தருவது.

வள்ளி, தெய்வானையுடன் வேலையும் சேவற் கொடியையும் தாங்கி மயில்மீதிருப்பவன் முருகன். இச்சை, ஞானம், கிரியை ஆகிய சக்திகளை முறையே வள்ளி, வேல், தெய்வயானை குறிக்கும். இருள் நீங்கி ஒளி மேவும் காலைப் பொழுதைக் கூவி அறிவிப்பது சேவல். ஆன்மாக்களின் பாச இருள் நீங்கி இறையருள் நண்ணுவதை இது குறிக்கிறது. முருகன் அமர்ந்திருக்கும் மயில் முத்தியடைந்த ஆன்மாக்களைக் குறிப்பது. மயிலின் காலில் உள்ள பாம்பு ஆன்மாக்களைப் பற்றிய ஆணவத்தைக்குறிக்கும். சைவத்தின்படி ஆணவம் அழிவதில்லை. ஆன்மா முத்தியடைந்த நிலையில் அதனைப் பற்றும் வலிமையை இழந்து விடுகிறது.

முருகனைத் தமிழ்க் கடவுள் என்பர். முருகனைப்போல் இளமை மாறாத அழகு மொழி தமிழ். தமிழ் எழுத்துக்களில் வல்லினம், மெல்லினம், இடையினம் என்பவை ஒவ்வொன்றும் ஆறு எழுத்துக்களைக் கொண்டு முருகனின் ஆறு முகங்களை

உணர்த்துவன. பதினெட்டு மெய் எழுத்துக்களும் ஆறு முகங்களிலுள்ள பதினெட்டுக் கண்களை உணர்த்துவன. பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள் அவனின் பன்னிரு கைகளை உணர்த்துவன.

ஓங்காரமாகிய பிரணவ மந்திரத்தைச் சிவனுக்கு உபதேசித்ததால் சிவகுரு என்று பெயர் கொண்டவன் முருகன். அவனை வழிபடுவதால் ஞானம், அழகு. இளமை, வீரம் ஆகியவற்றைப் பெறலாம்.

## ஆடும் பெருமான்

இறை வடிவங்களில் நடராச வடிவத்திற்கு ஒரு தனிச் சிறப்புண்டு. கலை அழகு மிக்க இவ்வடிவம் சைவ தத்துவக் கருத்துக்களை விளக்குவது; அறிவியல் உலகைக் கவர்வது. பண்டைத் தமிழரின் உன்னத படைப்பான நடராச வடிவம் இன்று உலகிலுள்ள அறிஞர்களால் வியந்து போற்றப்படுகிறது.

எல்லா உயிர்களையும் பொருள்களையும் இறைவன் உள்நின்று இயக்குகிறான். அவனின் ஆட்டம் இதனை உணர்த்துகிறது. இருபக்கமும் நீண்டு விரிந்திருக்கும் சடையுடன் கூடிய அவனது நடனத் தோற்றம் உயிர்களுக்காக அவன் இடைவிடாது செய்யும் ஐந்தொழிலைக் குறிக்கிறது.

கூத்தப்பிரானின் வலது கால் முயலகன் என்னும் அசுரனை மிதித்த ஊன்றிய திருவடியாக உள்ளது. முயலகன் ஆணவ மலத்தைக் குறிப்பது. ஊன்றிய திருவடி அவனின் மறைத்தல் தொழிலை உணர்த்துவது. இடப்பாகம் அருளாகிய

உமைக்குரியது. இடது கால் தூக்கிய திருவடியாகி சிவனின் அருளல் தொழிலைக் குறிக்கிறது. அவனின் இடது கை ஒன்றின் விரல் இந்தத் திருவடியைக் காட்டி, அவனின் அருளே எமக்குக் கதி என்பதை உணர்த்துகிறது. உடுக்கை ஏந்தியதாக வலது கை ஒன்று உள்ளது. நடுவில் குறுகி இருபக்கமும் விரிந்து செல்லும் உடுக்கையிலிருந்து ஒலி அலைகள் எழும்புகின்றன. இது படைத்தல் தொழிலைக் குறிக்கிறது. இடக்கை ஒன்று நெருப்பை ஏந்தி அழித்தல் தொழிலை உணர்த்துகிறது. வலக்கை ஒன்று அபயகரமாக நின்று காத்தல் தொழிலைக் குறிக்கிறது. திருக்கோயில்களில் தெற்கு நோக்கியிருக்கும் இவ்வடிவம் மரணமிலாப் பெருவாழ்வை நல்கும்.

## வேறு சில வடிவங்கள்

அம்பிகைக்கு தனிக்கோயில்கள் உண்டு. சிவன் கோயில்கள் பலவற்றில் தனியிடமுண்டு. சிவனின் அருட் சக்தியான அம்பிகையின்றிச் சிவனில்லை. சிவனின்றிச் சக்தியில்லை. ஞாயிறும் ஒளியும்போல் பிரிக்க முடியாதவர்கள் சிவனும் சக்தியும். தாய் வடிவான அம்பிகையை வணங்குவதால் குழந்தையை அணைக்கும் தாய்போல அவள் எம்மை அணைத்துக் காத்தருளுகிறாள்

உமாமகேசுவர மூர்த்தம் அம்மை அப்பரான உமையும் சிவனும் இணைந்து நந்தியில் இருக்கும் வடிவம். உலகத்தில் ஆண் பெண்ணாக வாழும் உயிர்களின் இயக்கம் நன்கு நடைபெற அம்மை அப்பராக இருந்து இறைவன் அருள் புரிகிறான். எந்தக் கடவுளை வணங்கினாலும் அங்கே சிவனே அம்மை அப்பராக

வந்து அருள் புரிகிறான். 'அம்மை அப்பர் அப்பரிசே வந்து அளிப்பர்' என்று திருக்களிற்றுப்படியார் என்ற சித்தாந்த நூல் கூறுகிறது.

தட்சணாமூர்த்தி வடிவம் திருக்கோயில்களில் தெற்கு நோக்கி இருப்பது. தட்சணம் என்றால் தெற்கு. தென்முகக் கடவுள் என்பது இம்மூர்த்தத்திற்குரிய தமிழ்ப்பெயர். ஆலமரத்தின் கீழ் யோக நிலையில் *சின்முத்திரை* காட்டி மௌனமாக இருக்கும் கடவுள் தட்சணாமூர்த்தி. பெருவிரல் நுனியுடன் சுட்டுவிரல் நுனி சேர்ந்திருக்க, மற்ற மூன்று விரல்களும் பிரிந்திருக்கும் நிலை சின்முத்திரை எனப்படும். பெருவிரல் இறைவனையும் சுட்டு விரல் ஆன்மாவையும் மற்றைய மூன்று விரல்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றையும் குறிப்பன. மும்மலங்களிலிருந்து நீங்கி இறைவனுடன் ஆன்மா சேர்ந்திருக்க வேண்டுமென்பதைக் குறிப்பது சின்முத்திரை. இதன்மூலம் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்ற நால்வருக்குக் கல்லால மரத்தின் கீழிருந்து மௌன உபதேசமாக நான்கு மறைகளைச் சொன்னவர் தட்சணாமூர்த்தி. ஞானகுருவான தென்முகக்கடவுளை வணங்கி ஞானம் பெற்று இறவாத நிலையை அடையலாம்.

இலிங்கோற்பவர் திருவுருவம் கர்ப்பக்கிரகத்துக்குப் பின்னால் உள்ளது. கோயில்கள் பலவற்றில் இது அடியும் முடியும் தெரியாத வகையில் அமைந்திருக்கும். சோதி வடிவான இறைவனின் அடியையும் முடியையும் திருமாலும் பிரமனும் தேடிக் காணமுடியாமல் நின்றதை உணர்த்துவது இது. அப்போது இறைவன் எடுத்த நெருப்பு வடிவமே சுருங்கித் திருவண்ணா

மலையானதென்பது புராணக்கதை. திருவண்ணாமலைத் தீபம் இதனை உணர்த்துவது.

சோமாஸ்கந்த மூர்த்தம் சிவன்கோயில்களில் காணும் இன்னொரு வடிவம். சோமாஸ்கந்த மூர்த்தம் (ஸ+உமா+ஸ்கந்த மூர்த்தம்) உமையுடனும் கந்தனுடனும் விளங்கும் சிவமூர்த்தம். சச்சிதானந்தம் (சத்+சித்+ஆனந்தம்) ஆனவன் சிவன். 'சத்' என்பது என்றும் உள்ள ஒன்று. 'சித்' என்பது ஞானம். சிவன் சத்; உமை சித்; முருகன் அல்லது கந்தன் ஆனந்தம். சச்சிதானந்த வடிவத்தைக் குறிப்பதாக இவ்வடிவம் உள்ளது.

*குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.*

- அப்பர்

# வழிபாட்டு முறைகள்

வழிபாடு என்ற தமிழ்ச்சொல் இறைவனின் அருள் வழியில் நிற்றல் (அருள்வழிப்படுதல்) என்பதைக் குறிக்கும். என்றும் அருள்புரியும் இறைவனின் கருணையை நினைந்து அவனுக்கு நன்றியுணர்வைக் காட்டலும் அவனின் அருள் வழியில் வாழ்தலும் உண்மையான வழிபாடாகும்.

வழிபாட்டு முறைகள் பலவாக உள்ளன. திருக்கோயில் வழிபாடு எல்லோரும் கைக்கொள்ள வேண்டிய சிறந்த வழிபாடு. குருவை வழிபடுவது, சிவலிங்கத்தையும் சிவமூர்த்தங்களையும் வழிபடுவது, சிவனடியார்களை வழிபடுவது ஆகிய மூன்றும் *குருலிங்கசங்கம வழிபாடு* எனப்படும். ஆன்மீக வளர்ச்சிக்கு ஏற்றதாகப் படி முறையில் வகுக்கப்பட்ட நால்வகை வழிபாடு *சரியை, கிரியை, யோகம், ஞானம்* எனப்படும். இவற்றை அறிவது சைவர்களுக்கு இன்றியமையாதது.

## திருக்கோயில் வழிபாடு

இறைவன் எங்கும் நிறைந்தவன் என்பதால் அவனை எங்கிருந்தும் வழிபடலாம்; கோயிலுக்குச் சென்றுதான் வழிபட வேண்டுமா? என்ற கேள்வி எழுகிறது. எங்கும் நிறைந்துள்ள காற்றை எங்கிருந்தும் அனுபவிக்க முடியும். ஆயினும் மின்விசிறியின் அருகில் அதனைக் கூடுதலாக அனுபவிக்க முடிகிறது. அதிக காற்றைத் தர மின்விசிறி துணைபுரிவதுபோல் இறையருள் திரண்டு விளங்கத் திருக்கோயில் துணைபுரிகிறது. அதனால் அங்கு சென்று இறைவனை வழிபடுதல் அதிக பலனைத் தருகிறது.

திருக்கோயில் வழிபாட்டினால் இறையருளைப் பெறுவதோடு மன அமைதியும் ஆன்ம வளர்ச்சியும் உண்டாகின்றன. ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் போக முடியாதவர்கள் வாரத்தில் ஒரு நாளாயினும் அதற்கும் இயலாதவர்கள் தம்மால் இயன்றளவாவது போவது நல்லது. இறைவழிபாட்டுக்கும் ஆன்ம வளர்ச்சிக்கும் அகத்தூய்மை இன்றியமையாதது. அகத் தூய்மைக்குப் புறத்தூய்மை துணை புரியும். இதனால் புறத்தூய்மையும் இவற்றுக்கு இன்றியமையாததாகிறது. திருக்கோயிலுக்குச் செல்லுமுன் நீராடித் தூய ஆடை அணிந்து தேங்காய், பழம், கற்பூரம் முதலியன எடுத்துச் செல்ல வேண்டும். கோயிலை அடைந்ததும் கால்கைகளைக் கழுவி, தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, உள்ளேசென்று, அங்கிருக்கும் விநாயகரையும் முருகனையும் கும்பிட வேண்டும். கோயிலுக்குள் சென்றவுடன் முதலில் வணங்க வேண்டியவை பலி பீடம், கொடிமரம், நந்தி தேவர் ஆகியவை. பலி பீடத்தை வணங்கும் போது தீய எண்ணங்களையும் தீய பழக்கங்களையும் அங்கு பலியிடுவதாக எண்ணவேண்டும். பின்பு, பலி பீடத்துக்கு இப்பால் நின்று ஆண்கள் அட்டாங்கமாகவும் பெண்கள் பஞ்சாங்கமாகவும் விழுந்து வணங்குதல் முறையாகும். அட்டாங்க வணக்கமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு ஆகிய எட்டு உறுப்புக்களும் நிலத்தில் பொருந்த வணங்குதல். பஞ்சாங்க வணக்கமாவது தலை, கையிரண்டு, முழங்காலிரண்டு ஆகிய ஐந்து உறுப்புக்கள் நிலத்தில் பொருந்த வணங்குதல். அபிஷேகம், நிவேதனம் முதலியன நடைபெறும் பொழுது இவற்றைச் செய்தல் கூடாது. வடக்கு, மேற்கு நோக்கிய சந்நிதிகளில் இடப்பக்கத்திலும் கிழக்கு, தெற்கு நோக்கிய

சந்நிதிகளில் வலப்பக்கத்திலும் நின்று விழுந்து வணங்குதல் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டியது. இங்ஙனம் செய்யும் பொழுது தலை கிழக்கு அல்லது வடக்கு நோக்கி இருக்கும்.

பழம், பாக்கு முதலியன படைத்து அர்ச்சனை தீபாராதனை செய்வித்து மூலமூர்த்தியைத் தரிசித்து, பின்னர் திருநீறு பெற்று சிவசிவ என்று மனத்தில் சொல்லிப் பூசுதல் அவசியம். இறை வழிபாடு செய்யும்போது பஞ்சபுராணம் பாடி வழிபடல் நல்லது. பஞ்சபுராணம் என்பது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்து திருமுறைகளாகும். இவற்றை, வழிபடும் பிற அடியார்களுக்கு இடையூறின்றி ஓத வேண்டும்.

பின்பு, உள்வீதியை வலமாகச் சுற்றி அங்குள்ள பரிவார தெய்வங்களை வழிபட வேண்டும். சபாபதி, தட்சணாமூர்த்தி, சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்தங்களும் சமயகுரவர் முதலியவர்களும் உள்வீதியில் எழுந்தருளி இருப்பார்கள். இவர்கள் பக்தியுடன் பணிந்து போற்றப்பட வேண்டியவர்கள். விநாயகரைத் தரிசிக்கும்போது, முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு மூன்றுமுறை தாழ்ந்தெழுந்து கும்பிடல் வேண்டும். நடராசரை வணங்கும்போது இறைவன் உயிர்களுக்குச் செய்யும் ஐந்தொழிலை எண்ணி மனமுருகுதல் வேண்டற்பாலது.

திருவீதியிலுள்ள தெய்வங்களை வழிபட்டு, சண்டேசுரர் சந்நிதியை அடைந்து கும்பிட்டு, தோத்திரஞ் செய்து,

சிவபெருமானுக்கு நைவேத்தியமாகப் படைத்தவற்றை ஏற்றுக் கொண்டு சிவனை வழிபட்ட பலனைத் தரும்படி வேண்டிப் பிரார்த்திக்க வேண்டும். சண்டேசுரர் சிவபெருமானுக்குப் படைத்தளித்தவற்றைப் பூசை முடிந்ததும் நிர்மாலியமாக ஏற்றுக் கொண்டு தரிசனம் செய்த பலனைத் தருவார். அவர் எப்பொழுதும் மௌனமாகச் சிவனையே தியானித்துக்கொண்டிருப்பவர். அதனால் அவர் கவனத்தை ஈர்ப்பதற்கு வழிபடுபவர் மூன்றுமுறை கைதட்டுவது வழக்கம். இறைவனுக்குத் தாம் படைத்ததை நிர்மாலியமாகச் சண்டேசுரருக்கு அளிப்பதையும், தம் உடைமை களிலுள்ள பற்றை விட்டு இறையருளை வேண்டுவதையும் குறிக்கத் தமது ஆடையிலிருந்து ஒரு துண்டு நூலைக் கிள்ளி அங்கு போடுவதும் வழக்கம். இவற்றை விடுத்து மனத்தினால் பாவனை செய்தாலே போதும்.

இத்திருச்சுற்று வழிபாடு முடிந்ததும் மீண்டும் நந்தி தேவர் இடத்தில் வந்து சிவலிங்கப்பெருமானைத் தரிசித்து, பலிபீடத்துக்கு இப்பால் விழுந்து வணங்கி, திருவைந்தெழுத்தை உச்சரித்து வழிபாட்டை முடித்தல் முறையானது. அம்பிகை, விநாயகர், முருகன் ஆகிய தெய்வங்களின் திருக்கோயில்களிலும் இந்த முறையில் வழிபட வேண்டும்.

திருக்கோயிலுள் இருக்கும்போது ஒழுங்கும் ஒழுக்கமும் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டியவை. பின் நிற்கும் அடியவர்களுக்கு இடையூறின்றி ஆண்கள் ஒருபக்கமாகவும் பெண்கள் ஒருபக்கமாகவும் நின்று வழிபட வேண்டும். பாக்கு வெற்றிலை உண்பது, உணவு உண்பது, உரத்துப் பேசுவது, சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையே நின்று வணங்குதல்,

போதல் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டியவை. திருக் கோயிலைச் சுத்தமாக வைத்திருத்தல் அர்ச்சகர், அடியவர் அனைவரினதும் முக்கிய கடமையாகும்.

## குருசங்கம வழிபாடு

இறைவனை மட்டுமன்றி குருவையும் வழிபட வேண்டு மென்று சைவம் கூறுகிறது. குருவாக இருப்பவர் மாணவரின் குற்றங்களை அறுப்பவர். (கு-குற்றம்; ரு-அறுத்தல்). ஆசிரியன் என்பதும் இதே பொருளை உடைய சொல்லாகும். (ஆசிரியன் - ஆசு + இரியன்; குற்றத்தை நீக்குபவன்). குரு வழிபாட்டினால் உயிருக்குத் தடையாயிருக்கும் அறியாமையும் அறியாமை செய்யும் ஆணவப் பிடிப்பும் நீங்கும். இதனால் மெஞ்ஞானமும் இறையருளும் கூடும் நிலை பிறக்கும்.

சங்கமம் என்பது பொதுவாகச் சிவனடியார் கூட்டத்தைக் குறிக்கும். நிர்வாண தீட்சிதர், விசேட தீட்சிதர், சமய தீட்சிதர் ஆகிய முத்திறத்துச் சிவபக்தர்களையும் கூட இச்சொல் குறிக்கும். இறைவனையும் குருவையும் வழிபடுவதுபோல் இவர்களையும் வழிபட வேண்டும். இச்சிவபக்தர்களும் தமது ஆசாரியரையும் தம்மில் மூத்த தீட்சிதரையும் வழிபட வேண்டும்.

சிவனையே எக்காலமும் சிந்தை செய்பவர்கள் சிவனடியார்கள். இவர்களை வழிபடுவதாலும் அவர்களின் சேர்க்கையாலும் சிவசிந்தனை இயல்பாகவே எழும். சிவபெருமானை நினைவிற்குக் கொண்டு வரும் இவர்களின் திருவேடத்தைக் கண்டு போற்றுவதால் சிவபக்தி வளரும். 'மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரனெனத்

தொழுமே' என்று சைவசித்தாந்த முதன்மை நூலான சிவஞானபோதம் இயம்புகின்றது.

## நால்வகை நெறிகள்

இறைவனை வழிபடும் முறைகளை சைவம் நான்காக வகுத்துள்ளது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும். ஒவ்வொருவரின் ஆன்ம வளர்ச்சிக்கேற்பக் கைக்கொண்டு ஒழுகக்கூடிய தவநெறிகள் இவை.

சிவபெருமான் ஆன்மாக்களின் நலன் கருதி அருவம், அருவுருவம், உருவம் ஆகிய திருமேனிகளை எடுப்பதைப் பற்றி முன்பு கூறப்பட்டது. இறைவனை உருவ வடிவில் வணங்கி உடலால் தொண்டு செய்வது *சரியை*. எல்லோராலும் பின்பற்றக்கூடிய இந்த நெறியில், திருக்கோயிலைத் தூய்மை செய்தல், நந்தவனம் அமைத்தல், மலர் பறித்தல், மாலை தொடுத்தல் ஆகிய திருப்பணிகள் இடம்பெறும்.

சரியை வழியில் தொண்டு செய்பவருக்கு, பக்குவ முதிர்ச்சி உண்டாகிச் சிவனின் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கமே பொருள் என்ற உணர்வு ஏற்படும். இதனால் சிவனை இடையறாது நினைந்து வழிபடுதல், பூசை செய்தல், அவனைப் போற்றித் திருமுறை ஓதல், திருவைந்தெழுத்தை உச்சரித்தல் ஆகியவற்றில் உடலோடு மனமும் ஈடுபடும். இது *கிரியை* எனப்படும்.

கிரியை நெறியில் நின்று மேலும் பக்குவ முதிர்ச்சியடைய இறைவனின் அருவத்திருமேனியை உணரும் உள்ளுணர்வு பிறக்கும். இந்த நிலையில் சிவபெருமானிடம் நெருங்கிய உறவு

ஏற்பட்டு, திருவைந்தெழுத்தை மனமொன்றி உச்சரித்தல், இறைவனைத் தியானித்தல், பூசை செய்தல் முதலியவற்றை ஆழ்ந்த ஈடுபாட்டுடன் செய்யும் நிலை உண்டாகும். இது யோக நெறியாகும். யோகம் என்பதன் பொருள் ஒன்றி இருத்தல் என்பதாகும்.

மேற்கூறப்பட்ட மூன்று நெறிகளில் சரியை புறவழிபாடு, கிரியை அகப்புற வழிபாடு, யோகம் அகவழிபாடு. இந்த நெறிகளில் நின்று படிப்படியாக வளர்ந்த ஆன்மாவுக்கு இறைவனின் உண்மை இயல்பு பற்றிய ஞான உணர்வு வரும். இது முற்பிறவிகளில் பின்பற்றிய இத்தகைய தவநெறிகளால் பெரிதும் உண்டாகும். தான் பொறி புலன்களுக்கு அடிமையில்லை, அவை வேறு, தான் வேறு என்ற ஞானம் பிறக்கும். இத்தகைய நிலையை அடைந்தவர் எங்கும் எதிலும் இறைவனைக்கண்டு வழிபடுவர். இது ஞான நெறியாகும். இந்த நெறியில் நிற்பவருக்கு இறைவன் குருவாக வந்தும் உள்நின்று உணர்த்தியும் சிவஞானத்தை அருளுவான்.

## வழிபடு தெய்வம்

வழிபடு தெய்வமாக ஒன்றை நாம் கொள்ளவேண்டும். அத்தெய்வம் சிவலிங்க வடிவமாகவோ, சிவமூர்த்தங்களில் ஒன்றாகவோ, விநாயகர், முருகன், வயிரவர் ஆகிய தெய்வம் ஒன்றின் வடிவமாகவோ இருக்கலாம். இந்தத் தெய்வ வடிவத்தை எப்பொழுதும் மனதில் வைத்து அதற்குரிய மந்திரங்களையும் திருப்பாடல்களையும் ஓதி வழிபட வேண்டும். இது ஆன்ம வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரியும்.

இன்று பலவித தெய்வ வடிவங்களையும் பலர் வழிபடு கின்றனர். இவ்வடிவங்களெல்லாம் வழிபாட்டுக்குரியவையல்ல.

தேவர்கள் எனப் போற்றப்படுபவர் உயர்ந்த நிலையடைந்த உயிர்வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களும் பிறப்பு இறப்புக்கு உட்பட்டு இன்பதுன்பங்களை அனுபவிப்பவர்கள். அவர்களை வழிபடுவதால் எந்தப் பயனும் கிடைப்பதில்லை. ஆகையால் அனைத்தையும் கடந்த சிவபரம்பொருளின் வடிவங்களையே வழிபட வேண்டும். நாம் எத்தெய்வத்தை வழிபட்டாலும் அத்தெய்வமாக நின்று அருள் செய்பவர் சிவபெருமானே. இவற்றை உணர்த்துவதாகப் பின்வரும் சிவஞானசித்தியார் பாடல் உள்ளது.

*யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி யாங்கே*
*மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்*
*வேதனைப் படும்இ றக்கும் பிறக்கும்மேல் வினையும் செய்யும்*
*ஆதலால் இவைஇ லாதான் அறிந்தருள் செய்வன் அன்றே.*

கோயில்கள் பலவற்றில் நவக்கிரக வடிவங்கள் உண்டு. பழைய கோயில்களில் இவை இல்லை. சோதிடத்தின்படி கிரகங்களின் நிலையைக் கொண்டு வாழ்வியல் நிகழ்வுகளை ஓரளவு அறியலாம். இந்த நிகழ்வுகளுக்குக் கிரகங்கள் காரணமல்ல. எமது வினைப்பலனின்படி அவை நிகழ்கின்றன. இந்த நிகழ்வுகளின் தாக்கத்திலிருந்து விடுபடவும் இவற்றை எதிர்கொள்ளும் மனநிலையைப் பெறவும் இறைவழிபாடு ஒன்றே துணை புரியும். கிரகங்களின் இயக்கத்துக்கும் இறைவனே மூலமாக இருக்கிறான். இதனை உணராது, நவக்கிரகங்களை வழிபடுவதும் இறைவனிலும் மேலான இடத்தை அவற்றுக்குக் கொடுப்பதும் அறியாமையால் உண்டாவது; எப்பயனும் தராதது. (எங்ஙனமாயினும் கிரகங்களை வழிபடவேண்டுமென்று அஞ்சுபவர் அவற்றை உள்நின்று இயக்கும் இறைவனை நினைந்து வழிபடலாம்.)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் கோளறுபதிகம் நவக்கிரக வழிபாட்டைக் குறிப்பதாகப் பலர் எண்ணுகின்றனர். சிவபெருமானை உள்ளத்தில் இருத்தி வழிபடும் அடியவருக்கு கிரகங்கள் நல்லனவாக அமையும் என்பதே அவரின் பதிகம் கூறுவது. அவரின் பதிகத்தைப் பாடிச் சிவபெருமானை வழிபடுபவருக்குக் கிரகங்கள் காட்டும் குறைகள் நீங்குவது திண்ணம்.

தம்மைத்தாமே கடவுள் என்றும் கடவுளின் அவதாரம் என்றும் கூறுபவர்களையும் இன்று பலர் வணங்குகிறார்கள். இவர்கள் மூலம் குறுகிய காலத்தில் விரும்பியதைப் பெற விழைகின்றனர். இவர்களை வழிபடுவதால் தற்காலிகமான ஒருவித அகநிலை மாற்றம் சிலவேளை ஏற்படலாம். இதுகூட வழிபடுபவரின் மனநிலையைப் பொறுத்ததே. முடிவான பலன் எதுவும் கிடைப்பதில்லை. இதுபோல் மகமாயி, மாரி போன்ற சிறு தெய்வங்களையும் காட்டேறி போன்ற பேய்த் தெய்வங்களையும் ஆஞ்சனேயர் போன்ற வடிவங்களையும் சிலர் வழிபடுகின்றனர். இவற்றைச் சைவமக்கள் தவிர்க்க வேண்டும். இயற்கை நிகழ்ச்சிகளுக்கு அஞ்சி, அறியாமை காரணமாக ஏற்பட்டது சிறு தெய்வ வழிபாடு. இவ்வழிபாடுகளில் சில பின்னர் வந்த இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளன. இவையும் மேற்சொன்ன வழிபாடுகளும் எந்த விதப் பலனையும் தராமல் ஆன்ம வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. அப்பர் சுவாமிகள் இதனைப் பின்வருமாறு வலியுறுத்துகிறார்:

*சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்*
*சிவபெருமான் திருவடிக்கே சேரப்பெற்றோம்.*

## விரதங்கள்

இறை வழிபாட்டிற்குப் புலனடக்கம் இன்றியமையாதது. அதற்குத் துணை புரிவது விரதங்கள். உணவை விட்டு அல்லது குறைத்து மனத்தைக் கட்டுப்படுத்தி இறைவனை மெய்யன்புடன் வழிபடுதல் விரதம்.

சைவர்கள் கடைப்பிடிக்கும் விரதங்கள் பலவுண்டு. வாரம், மாதம், ஆண்டு தோறும் வரும் புண்ணிய நாட்களில் விரதமிருந்து இறைவனை வழிபடுவதால் உடல் நலமும் மனநலமும் ஆன்ம வளர்ச்சியும் ஏற்படுகின்றன. சிவன், உமை ஆகிய தெய்வங்களுக்குரிய விரதங்கள் பற்றிய சில விளக்கங்கள் கீழே தரப்படுகின்றன.

### சிவ விரதம்

சிவனுக்குரியவையாகச் சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமா மகேசுர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கலியாணசுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம் என எட்டு விரதங்கள் உண்டு. இவற்றுடன் பிரதோஷ விரதமும் சிவனுக்குரிய முக்கிய விரதமாகும்.

சோமவார விரதம் கார்த்திகை மாதத்து முதல் திங்கட்கிழமை தொடங்கி, திங்கள் தோறும் அநுட்டிக்கப்படுவது. உமையுடன் கூடிய சிவன் சோமன் எனப்படுவர். சோமனுக்குரிய நாள் சோமவாரம் என்னும் திங்கட்கிழமை. இதில் முழுநாளும் உபவாசம் இருப்பது சிறந்தது. அது கூடாதவர் இரவிலே உண்ணலாம். இதற்கும் இயலாதவர் மதியத்தின் பின் உண்ணலாம். இந்த விரதம் வாழ்நாள் முழுவதும் அல்லது பன்னிரண்டு ஆண்டுகள், அல்லது ஒரு ஆண்டு அநுட்டித்தல்

வேண்டும். இதற்கும் இயலாதவர் கார்த்திகை மாதத்துத் திங்கட்கிழமைகளில் அநுட்டிக்கவேண்டும்.

திருவாதிரை விரதம் மார்கழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரத்தில் அநுட்டிப்பது. இந்த விரதத்தைச் சிதம்பரம் கோயிலில் உணவின்றி இருந்து மேற்கொள்வது மிகவும் சிறந்தது. திருவாதிரை ஆருத்திரா என்று வடமொழியில் குறிக்கப்படும். இதன் பொருள் (திருவருளில்) 'நனைதல்' என்பது. மார்கழித் திருவாதிரையில் நடராசப் பெருமான் தன் திருநடனத்தைப் பதஞ்சலி முனிவருக்கும் வியாக்கிரகபாதருக்கும் ஆடிக் காட்டினார் என்பது புராண வரலாறு. இத்திருநடனம் உயிர்களின் நன்மைக்காக இறைவன் செய்யும் ஐந்தொழிலைக் குறிப்பது.

உமாமகேசுர விரதம் கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியில் உமாமகேசுரமூர்த்தியை வழிபட்டு அநுட்டிப்பது. இதில் பகலில் ஒருபொழுது போசனமும் இரவில் சிற்றுண்டியும் கொள்ளலாம்.

சிவராத்திரி விரதம் மாசி மாதத்து அமாவாசைக்கு முன்வரும் சதுர்த்தசி திதியில் சிவனை வழிபட்டு அநுட்டிப்பது. இதில் முழுநாளும் உபவாசம் செய்து, இரவு நித்திரையின்றி, நான்கு சாமமும் சிவபூசை செய்தல் வேண்டும். திருவைந்தெழுத்து ஓதல், சிவபுராணம் படித்தல் முதலியன செய்தல் நல்லது. உபவாசம் இருக்க இயலாதவர் நீர் அல்லது பால் பருகலாம். இதற்கும் இயலாதவர் பழம் அல்லது சிற்றுண்டி உண்ணலாம். நான்கு சாமமும் நித்திரையின்றி வழிபட இயலாதவர் நடுச்சாமம் வரை இருந்து சிவதரிசனம் செய்வது அவசியம். சைவர்கள் அனைவரும் அநுட்டிக்க வேண்டிய விரதம் இது.

சிவராத்திரி பற்றிப் பல கதைகள் உண்டு. ஊழிக்காலத்தில் பிரபஞ்சம் அனைத்தும் அசைவற்று இருந்தன. தேவியின் வேண்டுகோளின்படி, மீண்டும் பிரபஞ்ச இயக்கத்தை இறைவன் உண்டாக்க, முதலில் உணர்வு பெற்ற உருத்திரர்கள் திருவைந்தெழுத்தை ஓதி சிவபூசை செய்த இரவு சிவராத்திரி என்பது ஒரு கதை. எல்லாம் ஒடுங்கியபின் மாசூனிய வெளிமட்டும் எஞ்சிநிற்க சிவன் யோக துயில் கொள்ளும் நிலையில் அவனின் சொரூபத்தன்மையில் உமையம்மை ஒன்றி நின்ற இரவு சிவராத்திரி என்றும் கூறப்படும். பிரம்மாவும் விஷ்ணுவும் அடிமுடிதேடிக் காணாத பொழுது இலிங்கோற்பவமூர்த்தியாய்த் தோன்றி அவர்களுக்கு அருள் செய்த இரவு இது என்ற கதையும் உண்டு. புலிக்குப்பயந்த வேடன் ஒருவன் வில்வமரத்தில் ஏறி இரவு முழுதும் இருந்து, நித்திரையின்றி இருப்பதற்காக வில்வம் இலைகளை ஒடித்துக்கீழே போட, அவை கீழிருந்த சிவலிங்கத்தின் மேல் விழுந்ததென்றும் அந்த இரவு சிவராத்திரியாதலால் அவனுக்கு இம்மை மறுமைப் பயன் கிடைத்தது என்றும் சிவராத்திரியின் பெருமையை விளக்குவதாக ஒரு கதையுண்டு.

கேதார விரதம் புரட்டாதி மாதத்து வளர்பிறை அட்டமி தொடங்கித் தேய்பிறை சதுர்த்தசி வரை இருபத்தொரு நாளாயினும், தேய்பிறைப் பிரதமை தொடங்கி சதுர்த்தசி வரை பதினான்கு நாளாயினும் தேய்பிறை அட்டமி தொடங்கி சதுர்த்தசி வரை ஏழு நாளாயினும் தேய்பிறை சதுர்த்தசியாகிய ஒரு நாளாயினும் கேதாரநாதரை வழிபட்டு அநுட்டிப்பது. இதில் இருபத் தோரிழையாலாகிய காப்பை (கயிற்றை) ஆடவர்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொண்டு,

முதலிருபது நாளும் ஒவ்வொரு பொழுது போசனஞ்செய்து, இறுதி நாளாகிய சதுர்த்தசியிலே கும்ப ஸ்தாபனம் பண்ணிப் பூசை செய்து, உபவாசித்தல் வேண்டும். உபவாசிக்க இயலாதவர் கேதாரநாதருக்கு நிவேதிக்கப்பட்ட உப்பில்லாத சிற்றுண்டி உண்ணலாம்.

கலியாணசுந்தர விரதம் பங்குனி மாதத்து உத்தர நட்சத்திரத்தில் கலியாணசுந்தர மூர்த்தியை வழிபட்டு அநுட்டிப்பது. இதில் ஒருபொழுது இரவில் உணவு கொள்ளல் வேண்டும்.

சூல விரதம் தை மாதத்து அமாவாசையில் சூலாயுதம் தரித்த சிவனை வழிபட்டு அநுட்டிப்பது. சூலாயுதம் இச்சா ஞானக்கிரியா சத்தியைக் குறிப்பது. பகலில் ஒரு பொழுது உணவு உட்கொண்டு இரவில் ஒன்றும் உட்கொள்ளக்கூடாது.

இடப விரதம் வைகாசி மாதத்து வளர்பிறை அட்டமியில் இடபவாகனத்தமர்ந்திருக்கும் சிவபெருமானை வழிபட்டு அநுட்டிப்பது. இதில் ஒருபொழுது பகலிலே உணவு கொள்ளல் வேண்டும்.

## பிரதோஷ விரதம்

பிரதோஷ விரதம் வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரு பகுதிகளிலும் வரும் திரயோதசி திதியில், சூரியன் மறைய முன் மூன்றே முக்கால் நாழிகையும் (ஒன்றரை மணித்தியாலம்) பின் மூன்றே முக்கால் நாழிகையுமாய் உள்ள மூன்று மணித்தியால காலமாகிய பிரதோஷ காலத்தில் வழிபட்டு அநுட்டிப்பது. பகலிலே போசனம் செய்யாது பிரதோஷ காலத்தின் முன் நீராடி சிவபூசை செய்து, திருக்கோயில் சென்று சிவனை வழிபட்டுப் பிரதோஷகாலம் முடிந்தபின் போசனம் செய்ய வேண்டும்.

பிரதோஷகாலத்தில் போசனம், சயனம், நீராடல், விஷ்ணு தரிசனம், எண்ணெய் தேய்த்தல், வாகனமேறல், மந்திர செபம், நூல் படித்தல் என்னும் எட்டும் செய்யலாகாது. தவறாமல் இவ்விரதத்தை மேற்கொண்டு மெய்யன்போடு சிவனைக் கும்பிட்டால் கடன், வறுமை, நோய், பயம், அவமிருத்து, மரணவேதனை ஆகியவை நீங்கும். சூரியன் மறைவுக்கு முன்னுள்ள பிரதோஷகாலம் சிவதரிசனத்துக்கு மிகவும் சிறந்தது.

சிவபெருமான் நஞ்சுண்ட வரலாறு பிரதோஷ விரதத்துடன் தொடர்புடையது. மந்திர மலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு, தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்த பொழுது முதலில் நஞ்சு வெளிப்பட்டது. அனைவரையும் அழிக்கும் ஆற்றல் மிக்க அக்கொடிய நஞ்சுக்கு அஞ்சிய தேவர்களின் வேண்டுகோளைக் கேட்ட சிவபெருமான் அதனை உருண்டையாகத் திரட்டி உண்ணத் தொடங்கினார். இந்த நஞ்சு அவரையும் அழித்துவிடுமோவென்று தேவர்கள் அஞ்ச, அறங்காத்த நாயகியான உமையம்மை சிவனின் தொண்டையைத் தன் திருக்கரத்தால் தடவ, அந்த நஞ்சு, சிவனின் தொண்டையிலே நின்றது. இதனால் சிவனை 'நஞ்சுண்ட கண்டன்', 'கறை மிடற்று அண்ணல்' என்ற பெயர்களினால் குறிப்பிடுவர்.

திருப்பாற் கடலிலிருந்து வெளிப்பட்ட ஆலமும் (நஞ்சும்) வாசுகி என்னும் பாம்பு கக்கிய ஆலமும் சேர்ந்த இந்த நஞ்சு ஆலாலம் எனப்படுவது. இறைவனின் விருப்பப்படி அதனைச் சிறு உருண்டையாகத் திரட்டி இறைவனுக்கு உண்ணக்கொடுத்தவர் அவருக்கு அருகிலிருந்து தொண்டு செய்யும் சுந்தரர் பெருமான்.

இதனால் அவர் ஆலாலசுந்தரர் என அழைக்கப்படுகிறார். அவரின் கைகள் சிவனுக்கு திருநீற்றைக் குழைத்துக் கொடுத்தவையாகையால் நஞ்சினால் பாதிக்கப்படவில்லை.

தேவர்கள் தம்மைக் காத்தருளும்படி சிவனை வேண்டத் துணை புரிந்தவர் நந்திதேவர். நஞ்சு சிவனையும் கொன்று விடுமென்று எல்லோரும் அஞ்ச, சிவனின் அழிவிலாத் தன்மையை உணர்ந்து புன்சிரிப்புடன் நந்திதேவர் இருந்தார். நஞ்சுண்டபின் சிவன் நந்திதேவரின் நெற்றியில் இரு கொம்புகளினிடையே திருநடனமாடினார். இது நிகழ்ந்தது திரயோதசி திதியில் வரும் பிரதோஷ காலத்தில் என்பதால் பிரதோஷ விரதம் முக்கிய விரதமாகிறது.

## உமாதேவி விரதம்

சுக்கிரவார விரதம், ஐப்பசி உத்தர விரதம், நவராத்திரி விரதம் என்பவை தேவி விரதங்கள்.

சுக்கிரவார விரதம் சித்திரை மாதத்து வளர்பிறையில் வரும் முதல் வெள்ளிக்கிழமை (சுக்கிரவாரம்) தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அநுட்டிப்பது. இதில் ஒரு பொழுது பகலில் உணவு கொள்ளல் வேண்டும்.

ஐப்பசி உத்தரவிரதம் ஐப்பசி மாதத்து உத்தர நட்சத்திரத்தில் ஒருபொழுது பகலில் உணவு உட்கொண்டு அநுட்டிப்பது.

நவராத்திரி விரதம் புரட்டாதி மாதத்து வளர்பிறையில் வரும் பிரதமை முதல் நவமி வரை ஒன்பது நாட்கள் பார்வதி தேவியைக் கும்பத்திலே பூசை செய்து அநுட்டிப்பது. இதில் முதல் எட்டு நாளும் சிற்றுண்டி, பழம் முதலியவை உட்கொண்டு நவமியில் உபவாசம் செய்தல் வேண்டும்.

நவராத்திரியில் முதல் மூன்று இரவுகள் துர்க்கைக்கும் அடுத்த மூன்று இரவுகள் மகாலட்சுமிக்கும் கடைசி மூன்று இரவுகள் கலைமகளுக்கும் உரியதாக எண்ணி வழிபடுவது வழக்கம்.

சைவக் கொள்கையின்படி சிவன் உயிர்களின் நலன் கருதி ஒன்பது நிலைகளில் நின்று அருள் செய்கிறான். 'நவம்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன்' என்று சிவஞானசித்தியார் இதனை விளக்கும். ஒன்பது நிலைகளில் நிற்கும் சிவனின் ஒன்பது சக்திகளுக்கு உரியது நவராத்திரி.

## விநாயக விரதம்

சுக்கிரவார விரதம், விநாயகசதுர்த்தி விரதம், விநாயகசட்டி விரதம் என்பன விநாயகருக்குரிய விரதங்கள்.

சுக்கிரவார விரதம் வைகாசி மாதத்து வளர்பிறையில் வரும் முதல் வெள்ளிக்கிழமை தொடங்கி ஒவ்வொரு வெள்ளியும் விநாயகரை வழிபட்டு அநுட்டிப்பது. இதில் பழம் முதலியன இரவில் உண்ணலாம்.

விநாயகசதுர்த்தி விரதம் ஆவணி மாதத்து வளர்பிறைச் சதுர்த்தியில் அநுட்டிப்பது. ஒருபொழுது பகலிலே போசனஞ்செய்து இரவிலே சிற்றுண்டி உட்கொள்ளல் வேண்டும். இந்த நாளில் சந்திரனைப் பார்க்கக் கூடாது.

விநாயகசட்டி விரதம் கார்த்திகை மாதத்து வளர்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாதத்துத் தேய்பிறைச் சட்டி வரையுள்ள இருபத்தொரு நாளும் விநாயகரை வழிபட்டு அநுட்டிப்பது. இதில் இருபத்தோரிழையாலாகிய காப்பை ஆண்கள் வலக்கையிலும்

பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொண்டு, முதலிருபது நாட்கள் ஒவ்வொரு பொழுதில் போசனம் செய்து, இறுதிநாளாகிய சட்டியில் உபவாசம் இருத்தல் வேண்டும்.

## சுப்பிரமணிய விரதம்

சுக்கிர வார விரதம், கார்த்திகை விரதம், கந்தசட்டி விரதம் என்னும் மூன்றும் சுப்பிரமணியருக்குரிய விரதங்கள்.

சுக்கிரவார விரதம் தேவிக்கும் விநாயகருக்குமுரியதுபோல் சுப்பிரமணியருக்கும் உரியது. ஐப்பசி மாதத்து முதல் வெள்ளிக்கிழமை தொடங்கி ஒவ்வொரு வெள்ளியும் அநுட்டிப்பது இது. இதில் முழு நாளும் உபவாசமிருக்க இயலாதவர்கள் இரவில் பழம் முதலியன உட்கொள்ளலாம். அதற்கும் இயலாதவர் ஒருபொழுது பகலில் போசனம் செய்யலாம். இவ்விரதம் மூன்றாண்டு காலம் அநுட்டித்தல் வேண்டும்.

கார்த்திகை விரதம் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரம் தொடங்கி ஒவ்வொரு கார்த்திகை நட்சத்திரமும் அநுட்டிக்கப்படுவது. இதில் உபவாசம் இருக்க இயலாதவர், பழம் முதலியன இரவில் உட்கொள்ளலாம். பன்னிரண்டு ஆண்டுகள் அநுட்டிக்க வேண்டியது இவ்விரதம்.

சிவபெருமான் சோதி வடிவாகத் தோன்றியது திருக்கார்த்திகைத் தினத்திலே. திருவண்ணாமலைத் தீபம் இதனை உணர்த்துவது.

கந்தசட்டி விரதம் ஐப்பசி மாதத்து வளர்பிறைப் பிரதமை தொடங்கி சட்டிவரை உள்ள ஆறு நாளும் சுப்பிரமணியரை வழிபட்டு அநுட்டிப்பது. இதில் ஆறு நாளும் உபவாசம் இருத்தல்

மிகவும் சிறந்தது. இயலாதவர் முதல் ஐந்து நாளும் ஒவ்வொரு பொழுது உண்டு, இறுதி நாளாகிய சட்டியில் உபவாசம் இருக்க வேண்டும். இவ்விரதம் ஆறு ஆண்டு காலம் அநுட்டித்தல் வேண்டும். மாதம் தோறும் வரும் வளர்பிறைச் சட்டியிலே சுப்பிரமணியரை வழிபட்டு மா, பழம், பால், பானகம், மிளகு என்பவைகளுள் இயன்றது ஒன்று உட்கொள்வது மிகச் சிறந்தது.

## வைரவ விரதம்

மங்கல வார விரதம், சித்திரைப் பரணி விரதம், ஐப்பசிப் பரணி விரதம் ஆகியவை வைரவருக்குரிய விரதங்கள்.

மங்கல வார விரதம் தை மாதத்து முதல் செவ்வாய்க்கிழமை தொடங்கி செவ்வாய் தோறும் அநுட்டிப்பது. இதில் ஒரு பொழுது பகலில் போசனம் செய்தல் வேண்டும்.

சித்திரைப்பரணி விரதம் சித்திரை மாதத்துப் பரணி நட்சத்திரத்தில், ஒருபொழுது பகலில் போசனம் செய்து அநுட்டிப்பது.

ஐப்பசிப் பரணி விரதம் ஐப்பசி மாதத்துப் பரணி நட்சத்திரத்தில், ஒருபொழுது பகலில் போசணம் செய்து அநுட்டிப்பது.

## வீரபத்திர விரதம்

மங்கலவார விரதம் ஒன்றே வீரபத்திரருக்குரிய விரதம். செவ்வாய்க்கிழமை தோறும் வீரபத்திரரை வழிபட்டு, ஒருவேளை பகலிலே போசனம் செய்து இவ்விரதத்தை அனுட்டிக்க வேண்டும்.

◆ *மேலே தரப்பட்ட விரதங்கள் பற்றிய விளக்கங்கள் (அவை குறித்த கதைகள் தவிர) ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய சைவ வினாவிடை இரண்டாம் புத்தகத்திலிருந்து எடுக்கப் பட்டவை.*

## பிற விரதங்கள்

சைவ சமயத்தவருக்குரிய புண்ணிய தினங்களாகப் பலவுள்ளன. ஆடி அமாவாசை மறைந்தவர்களை நினைந்து வணக்கம் செய்யும் நாளாகும். அமாவாசை பௌர்ணமி நாட்களில் கடலில் நீராடி இறைவனை வேண்டுதல் நல்லது. மறைந்த முன்னோர்கள் பிதிர் உலகில் சிலகாலம் வாழ்வதாகவும் அவர்கள் நன்நிலையடைய இது துணைபுரியும் என்றும் கூறுவர்.

சித்திரைப் பௌர்ணமி நாள் தமிழர்களுக்கு வரலாற்றுச் சிறப்பு மிக்கது. தமிழகத்தில் பூம்புகாரில் இந்திரவிழா முன்னர் நடைபெற்றது இந்த நாளிற்றான். வசந்தவிழா என்றும் இது அழைக்கப்பட்டது. ஈழத்தில் சைவமக்கள் சித்திரைப் பௌர்ணமியில் விரதம் அநுட்டித்துக் கோயில்களில் சித்திரபுத்திரனார் கதை படித்து, கஞ்சி சமைத்து வழங்குவது வழக்கம்.

தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்தரம், வைகாசி விசாகம், ஆடிப்பூரம், ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை ஆகிய நாட்களும் சைவருக்குப் புண்ணிய தினங்களாகக் கருதப்படுகின்றன. இத்தினங்களிலும் சைவமக்கள் விரதம் அநுட்டித்து இறைவனை வழிபடுதல் பலனளிக்கும்.

*உடம்பெனும் மனைய கத்துள் உள்ளமே தகளி யாக*
*மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனுந் திரிம யக்கி*
*இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்*
*கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே.*

- அப்பர் அடிகள்

# திருநீறும் திருவைந்தெழுத்தும்

எல்லாச் சமயத்திலும் குறியீடுகள், சின்னங்கள், வார்த்தைகள் முதலியன உள்ளன. அவை அந்தச் சமயம் கூறும் பொருளை உணர்த்திப் பயனடையத் துணைபுரிகின்றன. சைவத்தில் விபூதி, உருத்திராட்சம் போன்ற சின்னங்களும் மந்திரங்களான சொற்கள் வார்த்தைகளும் உள்ளன. இவற்றைத் தரித்தலும் அணிதலும் ஓதலும் சைவநெறியில் முன்னேற வழி வகுக்கும்.

## திருநீறு

பசுவின் சாணத்தைத் தீயிலே சுடுதலால் உண்டானது திருநீறு அல்லது விபூதி. அது வெள்ளை நிறமாக இருக்க வேண்டும். பசுமலம் என்ற சொல் பசுவின் சாணத்தையும் குறிக்கும்; ஆன்மாவாகிய பசுவுடன் சேர்ந்த மும்மலத்தையும் குறிக்கும். ஆன்மாவின் மலத்தை ஞானமாகிய தீயினில் எரித்துத் தூய்மை பெறுவதைக் குறிப்பது திருநீறு. வெள்ளை நிறம் தூய்மையையும் குறிக்கும், அற நெறியையும் குறிக்கும். அனைவரும் ஒருநாள் உலக வாழ்வை விட்டு நீங்கி நீறாகிப் போவர் என்பதை அறிவுறுத்தி, வாழும் காலத்தில் அறநெறியில் நின்று, இறை வாழ்வு வாழ வேண்டுமென்பதையும் திருநீறு உணர்த்துகிறது.

சைவர்கள் அவசியம் தரிக்க வேண்டியது திருநீறு. பசுவின் சாணத்திலிருந்து செய்யப்படும் திருநீறு உடலைத் தூய்மையாக்கித் தலைவலி, தலையில் நீர்க்கோவை முதலியவற்றை நீக்கும். உள்ளத்தில் சிவ சிந்தனையை உண்டாக்கி அருள் கூட்டும்.

வாழ்வில் வரும் எத்தகைய துன்பங்களையும் நோய்களையும் போக்க உதவும். திருநீற்றின் மகிமையால் பிணி தீர்த்தும் இடர்களைந்தும் பல அற்புதங்களைச் சைவ அருளாளர்கள் செய்துள்ளனர். திருநீற்றுப் பதிகத்தைப்பாடி, சிவனை நினைந்து விபூதி தரித்து, பிணி துன்பம் நீங்கியவர் பலர் இருக்கின்றனர்.

விபூதியை, வடக்கு முகமாக அல்லது கிழக்கு முகமாக நின்று, நிலத்தில் சிந்தாமல் அண்ணாந்து 'சிவசிவ' என்று சொல்லி, வலக்கையின் நடுவிரல்கள் மூன்றினாலும் தரித்தல் வேண்டும். அதனை உத்தூளனமாக அல்லது திரிபுண்டரமாகத் தரிக்கலாம். உத்தூளனம் நீர்ப்பசை இல்லாதது; நெற்றியில் பரந்து இடுவது. திரிபுண்டரம் மூன்று குறியாக அமைவது. ஒன்றுடன் ஒன்று முட்டாமல் நெற்றியின் இரண்டு கடைப்புருவ எல்லைவரை நீண்டதாக இருக்கவேண்டும். நெற்றியில் மட்டுமன்றி மார்பு முதலிய பதினாறு தானங்களிலும் திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரிக்கலாம். திரிபுண்டரமாகத் தரிக்கப்பட்ட மூன்று குறிகளும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் குறித்து அவை எரிக்கப்பட வேண்டுமென்பதை உணர்த்தும். உத்தூளனம் மும்மலங்களையும் ஒரு சேரக்குறித்து அவை நீக்கப்பட வேண்டுமென்பதை உணர்த்தும்.

விபூதியைப் போல் உருத்திராட்சமும் ஒரு சிவ சின்னமாகும். அசுரர்களால் தாம் அடையும் துன்பத்தைத் தேவர்கள் கூறி விண்ணப்பஞ் செய்தபொழுது, அவர்களுக்கு இரங்கிய சிவபெருமானின் மூன்று கண்களிலிருந்தும் விழுந்த நீர்த்துளிகளில் தோன்றிய மணிகளே உருத்திராட்சம் என்று புராணங்கள் கூறும். இறைவனின் திருக்கண்ணில் தோன்றும்

திருவருட்பேற்றைக் குறிப்பது உருத்திராட்ச மணி. உருத்திராட்சத்தில் ஒருமுக மணி முதல் பதினாறு முக மணிவரை உண்டு.

## திருவைந்தெழுத்து

சைவம், வைணவம் போன்ற மதங்களில் மந்திரத்துக்கு முக்கிய இடமுண்டு. மந்திரம் என்ற சொல்லுக்கு நினைப்பவரை அல்லது உச்சரிப்பவரைக் காப்பது என்பது பொருள். (மந்-நினை; த்ர-காப்பாற்று). திருநீறு கூட அதனைத் தரிப்பவரைக் காப்பது. 'மந்திரமாவது நீறு' என்ற தேவாரத் தொடர் இதனைக் கூறுகிறது. ஒவ்வொரு தெய்வத்துக்கும் உரிய மந்திரங்கள் உண்டு. திருவைந்தெழுத்து சிவனுக்குரிய மந்திரம். பஞ்சாட்சரம் என்பது தமிழில் திருவைந்தெழுத்து எனப்படும். ஐந்து எழுத்துக்களை (பஞ்ச அட்சரங்களை)க் கொண்டது திருவைந்தெழுத்து மந்திரம்.

'நமசிவய' என்பது தூல பஞ்சாட்சர மந்திரம். இது பரு(தூல) நிலையாக உள்ளது. 'சிவயநம' என்பது சூட்சும பஞ்சாட்சரம். இது நுண்(சூக்கும) நிலையாக உள்ளது. இந்த இரு மந்திரங்களும் சொல் வழக்கில் முறையே 'நமச்சிவாய', 'சிவாயநம' என்று வருகின்றன. இவற்றைவிட அதிசூக்கும பஞ்சாட்சரம் என்பதும் உண்டு. 'நமச்சிவாய' சிவனின் நாமமாகவும் உள்ளது. 'நாதன் நாமம் நமச்சிவாயவே' என்பது தேவாரம். நாமமாக அமைந்தாலும் மந்திரமாக எண்ணி ஓதும் பொழுது எமக்குள்ள துன்பங்கள் நீங்குகின்றன. அப்பர் அடிகளைக் கல்லில் கட்டிக் கடலில் விட்டபோது அவருக்குத் துணைபுரிந்து கரை சேர்த்தது சிவனின் நாமமாக அமைந்த 'நமச்சிவாய' மந்திரம் என்கிறார்.

*சொற்றுணை வேதியன் சோதி வானவன்*
*பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ*
*கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்*
*நற்றுணை யாவது நமச்சி வாயவே.*

'ஓம்' என்பது *பிரணவமந்திரம்.* இதனை அ, உ, ம் என்ற மூன்று எழுத்துக்களாகப் பிரிக்கலாம். ஓம்=அ+உ+ம். இதில் அகரம்(அ) இறைவனைக் குறிப்பது. உகரம்(உ) உயிரைக் குறிப்பது. மகரம்(ம்) மலத்தைக் குறிப்பது. ஆகவே சைவம் கூறும் முப்பொருளையும் குறிப்பதாகப் பிரணவமந்திரம் உள்ளது. இதன் விரிவாக அமைந்தது திருவைந்தெழுத்து அல்லது பஞ்சாட்சரம்.

சிவனும் சக்தியாகிய அருளும் பிரிவின்றி நிற்பன. 'சி' என்ற எழுத்து சிவனையும் 'வ' என்ற எழுத்து அருளையும் குறிக்கும். 'ய' உயிரைக்குறிப்பது. உயிருக்கு மறைப்பைச் செய்வது இறைவனின் *திரோதான சக்தி* எனப்படும். உயிர் வளர்ச்சியடைந்து இறையருளைப் பெறும் பக்குவம் வரும்வரை இறைவனின் இந்த மறைப்பாற்றல் உயிருக்குத் துணை புரிகிறது. கீழ்வகுப்பு மாணவனுக்கு மேல் வகுப்புப் பாடங்கள் விளங்காமல் அம்மாணவனின் அறிவு குறையுடையதாக (மறைக்கப்பட்டு) இருக்கிறது. இது அவன் படிக்க வேண்டியவற்றைப் படித்துத் தெளிவுபெறத் துணையாக இருக்கும். இதுபோன்ற ஒரு நிலையைத் திரோதானசக்தி உயிருக்கு உண்டாக்குகிறது. மலத்தின் துணையோடு இதனைச் செய்வதால் திரோதான சக்தியையும் மலம் என்று கூறுவதுண்டு. பஞ்சாட்சரத்திலுள்ள 'ந' என்ற எழுத்து திரோதான மலத்தைக் குறிக்கும். 'ம' என்பது உயிருக்கு ஊறு செய்யும் ஆணவ மலத்தைக் குறிக்கும். ஆகவே

'சி', 'வ' என்ற இரண்டு எழுத்துகளும் பிரணவத்திலுள்ள 'அ' வில் அடங்கும். 'ய' என்ற எழுத்து 'உ' வில் அடங்கும் 'ந', 'ம' ஆகிய இரு எழுத்துக்களும் 'ம' வில் அடங்கும். ஓம்=அ+உ+ம் (சிவ+ய+நம). எனவே பிரணவ மந்திரத்தின் விரிவாக அமைந்தது பஞ்சாட்சர மந்திரம்.

எம்மைப் பீடித்த ஆணவப் பிடிப்பை நீக்கும் பொருட்டே இறைவன் மறைப்பாற்றலாகிய திரோதான சக்தியைக் கொண்டு எமக்கு உலக அனுபவங்களைத் தருகிறான். இதனால் அறிவு விளங்கப் பெற்று உலக வாழ்வு நல்லனவாக அமைவதோடு இறைவன் மீதும் பற்று வளர்கிறது. இதற்கு இறைவனே பின்னின்று துணை புரிகிறான். 'நம' என்பதை முன்னிலைப்படுத்தி 'நமசிவாய' என்று ஓதும்போது இது நிகழ்கிறது. இங்கே 'சிவ' என்ற பதம் 'நம' என்ற பதத்திற்குப் பின்னால் நின்று உயிருக்கு உறுதுணையாகிறது. 'சிவாயநம' என்று ஓதும்போது 'சிவ' என்ற பதம் முன்னிலையில் உள்ளது. அருளோடு கூடிய சிவத்தை முன்னிலைப்படுத்தி இப்படி ஓதும்போது இறையருள் எம்மை முன்னின்று வழிகாட்டி நடத்துகிறது. தூலம் சூக்குமமான இந்த இரண்டு மந்திரங்களையும் எவரும் ஓதிப் பயனைப் பெறலாம். அதிசூக்கும பஞ்சாட்சரத்தை உலகப்பற்று நீங்கியவரே ஓதலாம். மற்றையவர் ஓதப்படாது.

பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கு இறைவனே நேரில் வந்தோ குருமூலமாகவோ ஒரு மந்திரத்தைக் கொடுப்பதுண்டு. அது ஒரு சொல்லாகவோ வார்த்தையாகவோ இருக்கலாம். 'மூர்த்தி தலம் தீர்தம் முறையாய் அமைந்தவர்க்கு வார்த்தை சொலக் குருவும் வாய்க்கும் பராபரமே' என்று தாயுமானவ சுவாமி

கூறுகிறார். இந்த வார்த்தை அல்லது சொல் கேட்பவரின் வாழ்க்கைப் பாதையையே மாற்றி இறைநெறியில் செல்லவைக்கும். அருணகிரிநாதர் தனக்கு முருகன் உபதேசித்ததை, 'சும்மாயிரு சொல்லற என்றலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே' என்று கூறி விளக்குகிறார். மாணிக்கவாசகர், எந்தத் தகுதியும் அற்ற தனக்கு இறைவன் சிவாயநம என்ற மந்திரத்தைத் தந்து ஈடேற்றியதாகக் கூறுகிறார். *'யானேயோ தவம் செய்தேன், சிவாயநம எனப்பெற்றேன்'* என்று பாடி மனமுருகுகிறார்.

சிவனுக்குரிய மந்திரம் போன்று முருகனுக்குரிய மந்திரம் 'சரவணபவ' என்பது. இதுபோல பிறதெய்வங்களுக்கும் உரிய மந்திரங்கள் உண்டு. மந்திரங்களை ஓதும்போது 'ஓம்' சேர்த்து, 'ஓம் நமச்சிவாய', 'ஓம் சரவணபவ' என்று ஓதுவது வழக்கம். 'ஓம்' சேர்க்காமலும் ஓதலாம். 'ஓம்' சேர்த்து ஓதுவதால் அம்மந்திரங்களுக்கு வலிமை அதிகரிக்கும் என்பர். ஆனால் 'சிவாயநம' என்ற சூக்கும பஞ்சாட்சரத்துக்கு 'ஓம்' சேர்த்து ஓதுவது தேவையற்றது; வேண்டத்தகாதது. 'சிவாயநம' மந்திரம் 'ராஜ மந்திரம்' எனப்படும். அதி சூக்கும பஞ்சாட்சரத்துக்கு 'ஓம்' சேர்த்து ஒரு போதும் ஓதக்கூடாது.

தெய்வங்களுக்குரிய மந்திரங்களிலும் அவற்றுக்குரிய கிரியைகளிலும் சிவனே இருந்து அருள்புரிகிறான். 'மந்திரமும் தந்திரமும் ஆனான் காண்க' என்பது அப்பர் சுவாமிகளின் திருவாக்கு. இறைவன் ஐந்தெழுத்து வடிவாக இருக்கிறான். அவனின் ஆட்டத்தைக் குறிப்பதாகவும் ஐந்தெழுத்து உள்ளது. திருவைந்தெழுத்தை நூற்றெட்டுத் தடவைகள் உருத்திராட்ச

மாலை கொண்டு எண்ணி ஓதுவது சிறந்தது. அது பிறர் செவியில் கேட்கும்படியும் ஓதலாம்; தன் செவியில் மட்டும் கேட்கும்படி அமைதியாகவும் ஓதலாம். மனத்தில் வைத்தும் ஓதலாம். இவற்றுள் மனத்தில் வைத்து ஓதலே சிறப்பானது.

*மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு*
*சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு*
*தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு*
*செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான்திரு நீறே.*

- சம்பந்தர் தேவாரம்

*துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி ராதே*
*அஞ்செழுத் தோதின் நாளும் அரனடிக் கன்ப தாகும்*
*வஞ்சனைப் பால்சோ றாக்கி வழக்கிலா அமணர் தந்த*
*நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி அடிக ளாரே.*

- அப்பர் தேவாரம்

# சைவத் திருமுறைகள் (1)

இறையுணர்வை ஊட்டும் பக்தி நூல்கள் தமிழில் அதிகமாக உள்ளன. தேவாரம், திருவாசகம் போன்ற திருப்பாடல்கள் உள்ளத்தை உருக்குவன; மெய்சிலிர்க்க வைப்பன; கண்ணீர் வரச்செய்வன. சைவத்தின் உயிர் நாடியாக அமைந்து, அதற்குப் பெருமையும் சிறப்பும் செய்வன *பன்னிரு திருமுறைகள்* என்று அழைக்கப்படும் இத்தோத்திர நூல்கள்.

## வரலாறும் அமைப்பும்

பன்னிரு திருமுறைகள் சிவனருள் பெற்ற ஞானிகளால் அருளிச் செய்யப்பட்டவை. அவற்றில் ஆயிரக் கணக்கான பாடல்களை இழந்துவிட்டோம். இன்று எமக்குக் கிடைப்பவை 18,497 பாடல்களே. இவை கிடைத்த வரலாறும் அமைப்பு முறையும் சுவையானவை.

அபயகுலசேகரன் என்ற சிறப்புப் பெயர் பெற்ற இராசராச சோழன், தனது ஆட்சிக்காலத்தில் (கி.பி. 870-907) சைவத்தைப் போற்றியவன். அவனைக் காணவரும் சிவனடியார்கள் தேவாரங்கள் பாடக் கேட்டு மனமுருகிய மன்னன் அத்தேவாரங்கள் எங்குள்ளனவென்று அறிய விரும்பினான். அவை எங்கும் கிடைக்காத நிலையில் திருநாரையூரிலுள்ள பொல்லாப்பிள்ளையாரின் அருள் பெற்ற நம்பி என்னும் குழந்தையை அணுகினான். பிள்ளையாரால் ஆளப்பட்டவர் என்பதால் அவர் *நம்பி ஆண்டார் நம்பி* என்று அழைக்கப்படுபவர். அரசனின் வேண்டுகோளுக்கு இணங்கி, நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாரை வணங்கித் தேவாரப் பதிகங்கள் இருக்கும் இடத்தைத் தமக்குக் காட்டும்படி வேண்டினார்.

அவரின் வேண்டுகோளுக்கிரங்கி, சிற்றம்புலத்தில் மேற்கிலுள்ள ஒரு அறையில் தேவாரமூவரின் திருக்கை அடையாளமிடப்பட்ட கதவின் உள்ளே பூட்டப்பட்டு அவை இருக்கின்றன என்று இறைவன் உணர்த்தினான். அரசனும் நம்பியாண்டார் நம்பியும் தில்லை நடராசனை வணங்கி, தேவாரத் திருமுறைகளை அங்கு கண்டு எடுத்தனர். அவற்றில் பல செல்லரித்துச் சிதைவுற்று இருந்தன.

மன்னன் வேண்டியபடி நம்பியாண்டார் நம்பியே தேவாரப் பதிகங்களைத் திருமுறைகளாகத் தொகுத்தார். ஞான சம்பந்தப் பெருமானின் திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும் நாவுக்கரசரின் திருப்பதிகங்கள் அடுத்த மூன்று திருப்பதிகங்களாகவும் சுந்தரர் பெருமானின் திருப்பதிகங்கள் ஏழாம் திருமுறையாகவும் தொகுக்கப்பட்டன. பின்னர் நம்பியாண்டார் நம்பியே எட்டுத் தொடங்கி பதினொராம் திருமுறை வரை பிற பதிகங்களைத் தொகுத்தார். மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக அமைந்துள்ளன. ஒன்பதாம் திருமுறையாகப் பல அருளாளர் பாடிய திருவிசைப்பாவும் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டும் உள்ளன. திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக உள்ளது. பதினொராம் திருமுறையில் காரைக்கால் அம்மையார் உள்ளிட்ட பலரின் திருப்பாடல்கள் உள்ளன. இங்ஙனம் பதினொரு திருமுறைகளும் நம்பியாண்டார் நம்பியினால் தொகுக்கப்பட்டுள்ளன. பின்னர், பன்னிரண்டாம் திருமுறையாகச் சேக்கிழார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் சேர்க்கப்பட்டுள்ளது.

'திரு' என்ற சொல் பரம்பொருளாகிய சிவத்தைக் குறிக்கும். அவன் அருளாகிய சக்தி, அறிவு, இன்பம் ஆகிய பொருள்களிலும் நூல்களில் இச்சொல் வருகிறது. 'முறை' என்பதற்கு முறைப்படுத்தல், நெறிப்படுத்தல், கட்டு, நூல் என்று பல பொருட்கள் உண்டு. ஆகவே திருமுறை என்பதற்கு முறையாகத் தொகுக்கப்பட்ட, சச்சிதானந்தமாகிய பரம்பொருளைக் குறித்த நூல் என்று பொருள் கொள்ளலாம். இத்திருமுறைகளைப் பற்றிச் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளது.

## தேவாரம்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய நாயன்மார்கள் அருளிச்செய்த பாடல்கள் தேவாரம் எனப்படும். இவை முன்பு திருப்பதிகம் என்று குறிக்கப்பட்டன. திருமுறை களைப்பாடி இறைவனை வேண்டுதலை 'பதிகப் பெருவழி' என்று நம்பியாண்டார் நம்பி தமது பதிகத்திலே குறிப்பிடுகிறார்.

தேவாரம் என்ற சொல்லுக்கு இறைவனுக்கான கவி மாலை (தேவ ஆரம்) என்று பொருள் காண்பதுண்டு. இன்னொரு வகையிலே தே+வாரம் எனப் பிரித்துப் பொருள் காண்பதும் பொருத்தமானது. 'வாரம்' என்பது சொல்லும் இசையும் ஒழுங்கு பெற்று அமைந்த வழிபாட்டுக்கான பாடலைக் குறிக்கும். 'வாரம் பாடுதல்' என்ற சொல்லாட்சி பழைய நூல்களில் காணப்படுவது. 'தே' என்ற சொல் தெய்வத்தைக் குறிப்பது. ஆகவே தேவாரம் என்பது கடவுளை இசையோடு பாடி வழிபடத் துணையாகும் பாடல் என்பது தெளிவாகிறது.

இசை நயமும் தமிழினிமையும் மிக்க தேவாரங்கள் பண் முறையில் தொகுக்கப்பட்டு, 'அடங்கன் முறை' என்ற பெயரில்

வெளிவந்துள்ளன. இதிலுள்ள இருபத்தைந்து தேவாரப் பாடல்கள் 'அகத்தியர் தேவாரத்திரட்டு' என்ற பெயரில் நூலாக உள்ளது.

தேவாரங்களும் பிற திருமுறைகளும் சிவனருள் பெற்ற அடியார்களால் பாடப்பெற்றதால், அவை இறைவாக்காக நின்று பாராயணம் செய்பவருக்குப் பயன் தருகின்றன. அவற்றைப் பாடி, மக்கள் பிணிதீர்த்தும் துயர் போக்கியும் பல அற்புதங்களைச் செய்தவர்கள் இந்த அடியார்கள். சைவ சித்தாந்த தத்துவத்தின் முதன்மை நூலாகிய சிவஞான போதத்தை அருளிய மெய்கண்டாரின் பெற்றோர் பல காலம் பிள்ளைப்பேறு இல்லாமல் இருந்தனர். அவர்கள் தேவாரப் பதிகங்களில் நூல் சாத்திப் பார்த்து, திருஞானசம்பந்தரின் 'பேயடையாப் பிரிவெய்தும்' என்று தொடங்கும் திருப்பதிகம் வரக்கண்டு, அதனைப் பக்தியுடன் பாராயணம் செய்து இறையருளால் ஞானக் குழந்தையாகிய மெய்கண்டாரைப் பெற்றனர். இன்றும் திருமுறைகளைப் பக்தியுடன் ஓதி, தீராத நோய் தீர்ந்தும் கொடும் துயர் நீங்கியும் நலம்பெற்று வாழும் பலரைக்காணலாம்.

தேவாரங்களில் இறையருள், குருவருள், திருவைந்தெழுத்து, திருநீறு, இறை உயிர் உறவு, சிவனின் வடிவங்கள், திருக்கோவில் திறம் ஆகியவை குறித்த பல செய்திகள் உள்ளன. சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்கள் விரவியிருக்கின்றன.

திருஞானசம்பந்தரின் தேவாரத்தின் முதற்பாடல் 'தோடுடைய செவியன்' என்று தொடங்குகிறது. தோடு பெண்ணுக்குரிய காதணி. செவியன் ஆண்பாற் பெயர்ச்சொல். இறைவன் அம்மை அப்பராக நின்று எமக்கு அருளுகிறான்

என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. இறைவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியவையும் இப்பாடல் மூலம் உணர்த்தப்படுகின்றன.

சைவசித்தாந்த தத்துவம் கூறும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை திருமுது குன்றத்தில் பாடிய பாடலில் குறிக்கப்படுகிறது.

*விளையாததோர் பரிசில்வரு பசுபாசவே தனையொண்*
*தளையாயின தவிரஅருள் தலைவன்....*

இதில் *பசு* ஆன்மாவையும் *பாசம்* ஆணவத்தையும் *வேதனை* கன்மத்தையும் *தளை* மாயையையும் *தலைவன்* இறைவனையும் குறிக்கின்றன. ஆன்மாவின் மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகியவை இறைவனருளால் நீங்குகின்றன என்பது இதன் பொருள். மும்மலங்களும் இடையில் வந்தவையல்ல என்பதை 'விளையாததோர் பரிசில்வரு' என்ற தொடரும், இறைஞானம் கிட்டும் வரை எமக்குச் சிற்றறிவு தரும் ஒன்றாக மாயை இருப்பதை 'ஒண்தளை' என்ற தொடரும் விளக்குகின்றன. உயிர்களுடன் இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் நின்று உதவும் தன்மையை 'ஈறாய் முதல் ஒன்றாய்' என்று தொடங்கும் திருவீழிமிழலைப்பதிகத்தில் விளக்குகிறார்

இத்தகைய சைவசிந்தாந்தக் கருத்துக்கள் மட்டுமன்றி இயற்கையைப் பற்றிய அழகிய வர்ணனைகளும் சம்பந்தப் பெருமான் பாடல்களில் உள்ளன. இயற்கையோடியைந்து இறைவழி வாழ்ந்து பேரின்பம் அடையத் துணை புரிவன அவரின் பாடல்கள். அம்மையுடன் இருந்தருளும் அத்தனை வழிபடுவதால், புவி வாழ்வு நல்ல வண்ணம் அமையும், நல்லது சேரும்,

கருதியது கிடைக்கும் என்று தம் பாடல்களில் கூறிச் செய்து காட்டியவர் ஞானசம்பந்தப்பெருமான்.

*மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்*
*எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவில்லை*
*கண்ணில்நல் ல.'.துறும் கழுமலர்ப் பழநகை*
*பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.*

ஞானசம்பந்தப் பெருமானின் பதிகங்களிலே இறுதியாகவுள்ள பதினொராம் பாடல்கள், அப்பதிகத்தைப் பக்தியுடன் பாராயணம் செய்யும் அன்பர்கள் அடையும் நற்பயன்களை விளக்குவதாக அமைந்துள்ளன. இறைவன் உரையைத் தனது உரையாகக் கொண்டவர் ஞானசம்பந்தப்பெருமான். அதனால் அவர் கூறியவற்றைத் தனது ஆணையாக, 'ஆணை நமதே' என்று இருபதிகங்களில் கூறுகிறார். அவரின் திருப்பதிகங்களைப் பாராயணம் செய்து பயன் பெற்றவர்களும் பெறுபவர்களும் பலராக உள்ளனர்.

மூவரின் திருப்பாடல்கள் பொதுவாகத் தேவாரம் என்றே அழைக்கப்படுகின்றன. ஆயினும் திருநாவுக்கரசு நாயனார் அருளிய பாடல்களைத்தான் தேவாரம் என்று அழைக்கும் ஒரு மரபுண்டு. திருஞானசம்பந்தர் பாடல்கள் 'திருக்கடைக்காப்பு' என்றும் சுந்தரர் பாடல்கள் 'திருப்பாட்டு' என்றும் அழைக்கப்படும். ஞானசம்பந்தப்பெருமானின் பாடல்கள் தந்தைமுன் மகன் உரிமையோடு பேசுவதுபோல் அமைந்துள்ளன. அப்பரின் தேவாரம் ஆண்டவன் முன் அடிமைபோல் இறைவனை முன்னிறுத்தி வேண்டுவதாக அமைந்துள்ளது. காணும் பொருள் எல்லாவற்றிலும் இறைவனைக் கண்டு போற்றும் பாங்கை அதில்

காணலாம். வாழ்வின் ஒவ்வொரு கூறும் நிலையற்றது என்பதை உணர்த்தி, நிலையான சிவப்பேற்றுக்கு அழைத்துச்செல்வன அப்பரின் தேவாரப்பாடல்கள். சாதி, குலம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து, அனைவரும் சிவனடியார்களாக வாழவேண்டுமென்பதை உணர்த்துவன.

இலக்கிய நயம் மிகுந்த அப்பர் பாடல்களில் 'தாண்டகம்' என்னும் யாப்பு முறையில் பாடப்பெற்ற 'திருத்தாண்டகம்' பாடல்கள் சிறப்பானவை. தமிழ் இலக்கியத் துறையில் முதன்முதல் தாண்டக யாப்பில் பாடிய பெருமை திருநாவுக்கரசு நாயனாரையே சாரும். இதனால் அவர் 'தாண்டக வேந்தன்' என்று அழைக்கப்படுகிறார். அவரைத் 'தாண்டகச் சதுரர்' என்று சேக்கிழார் தனது பெரியபுராணத்திலே போற்றுகிறார். அப்பரும் சம்பந்தரும் பல அரிய யாப்பு முறைகளையும் பண் அமைப்புகளையும் கையாண்டு தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

அப்பரடிகள் முதலில் பாடியது 'கூற்றாயினவாறு' எனத் தொடங்கும் பதிகம். இப்பாடலில், அவர் முற்பிறப்புக்களிலும் இப்பிறவியிலும் பல கொடுமைகளைத் தன்னை அறியாது செய்து விட்டதாகக் கூறி வருந்துகிறார். அப்படி இருந்தும் இறைவன் தன்னை ஏற்றுக்கொண்டான் என்றும் இனி அவனின் திருவடிகளை மறவாது என்றும் வணங்குவேன் என்றும் கூறி உருகுகிறார். 'கொடுமை பல செய்தன நானறியேன், ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்' என்று பாடுவதிலிருந்து இதனை உணரலாம்.

அப்பரின் தேவாரத்தில் உலகியல் உண்மைகளையும் சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களையும் காணலாம். சிவனின் திருவடிவத்தை அகக் கண்முன் காட்டுவனவாகப் பல பாடல்கள் உள்ளன. ஆடும் கூத்தனின் அழகைக் கண்டு போற்றி, அதற்காகவே இந்த மனிதப் பிறவி எடுக்க வேண்டும், வேறெதுவும் வேண்டுவதில்லை எனப் பரவசப்பட்டுப் பாடுகிறார். அப்பாடல் தில்லை நடராசனின் திருவுருவை எம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது.

*குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே.*

திருவைந்தெழுத்தை மந்திரமாகக் கொண்டு வாழவேண்டு மென்பதைத் திருமுறை ஆசிரியர்கள் வற்புறுத்தியுள்ளனர். தன்னைக் கல்லில் கட்டிக் கடலில் விட்டபோது தனக்குத் துணை புரிந்தது திருவைந்தெழுத்தென்று அப்பர் சுவாமிகள் குறிப்பிடுகிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலில் பாடியது 'பித்தா' எனத் தொடங்கும் பதிகம். 'பித்தன்' என்ற சொல் பைத்தியம் பிடித்தவனைக் குறிக்கும். பெருங்கருணை கொண்டவன் என்பதையும் இது குறிக்கும். 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்பது பழமொழி. இறைவன் உயிர்களின்மேல் பெருங்கருணை கொண்டவன் என்பதை 'பித்தா' என்ற சொல் குறிப்பதாக அமைகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனின் பெயரை 'பித்தன்' என்று உச்சரித்தார். ஆகையினால் அவரின் சொல்லிலும் நினைவிலும் இறையருள் தங்கியுள்ளது. இதனால்

என்றும் இறைவனை மறவாது நினைக்கும் தன்மை அவருக்குக் கிடைத்துள்ளது. இதனை விளக்குவதாக 'எத்தால் மறவாதே நினைக்கின்றேன்' என்ற தொடர் அமைகிறது.

சுந்தரர் பாடல்களில் திருத்தொண்டத்தொகை என்ற பதிகம் முக்கியமானது. 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங்கும் இப்பதிகம்தான் சைவ நாயன்மார்களை நாம் அறிய உதவியது. நாயன்மார் ஒவ்வொருவரையும் குறிப்பிட்டு அவருக்குத் தான் அடியவன் என்று கூறுகிறார். சேக்கிழார் பெரியபுராணம் பாட மூலமாக இருந்தது இந்தத் திருத்தொண்டத்தொகை.

*மூலமான திருத்தொண்டத் தொகைக்கு இந்த*
*ஞாலமுய்ய எழுந்தருளும் நம்பி.*

என்று சேக்கிழார் சுவாமிகள் சுந்தரமூர்த்தி நாயனாரைப் போற்றுகிறார்.

## திருவாசகம், திருக்கோவையார்

'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்று கூறுவர். மனத்தை நெகிழச் செய்து பக்தி உணர்வை ஊட்டுவது திருவாசகப்பாடல்கள். காண்பதற்கும் அறிவதற்கும் அரிய சிவபரம்பொருளைப் பக்தியினால் அடையலாம் என்று திருவாசகம் கூறுகிறது. 'பக்தி வலையில் படுவோன் காண்க' என்பது மணிவாசகர் வாக்கு.

திருவாசகக் கருத்துக்களைப் பொதுவாக இருவகையாகத் தொகுக்கலாம். தன்னை ஆட்கொண்ட சிவபெருமானை விட்டுப்பிரிந்ததனால் வருந்தி உரைத்தவை ஒரு பகுதி. மிகவும்

கீழான நிலையிலிருக்கும் தன்னை ஆண்டுகொண்ட மேலான பரம்பொருளின் கருணையை நினைந்து உருகி உரைத்தவைகள் இன்னொரு பகுதி.

திருவாசகத்தின் முதல் பதிகம் சிவபுராணம். இறுதிப் பதிகம் அச்சோப்பதிகம். திருவாசகப்பாடல்கள் இறைவனை நேராகப் போற்றுவனவாக அமைந்துள்ளன. சிவபுராணம் இறைவனின் இயல்பை விளக்கிப் போற்றுகிறது. இரண்டாவதாக உள்ள கீர்த்தித்திருவகவல் சிவனின் புகழைக் கூறுகிறது. ஆகவே இவ்விரு பதிகங்களும் பதியுண்மையையும் பெருமையையும் பேசுவனவாக உள்ளன. மூன்றாவதாக உள்ள திருவண்டப்பகுதி பலபட விரிந்து கிடக்கும் அண்டத்தையும் உலகையும் பற்றிக் கூறுகிறது. இதனால் இது பாசத்தைக் குறிப்பதாகிறது. நான்காவதாக உள்ள போற்றித்திருவகவல் உயிர்களைப் பற்றிக் கூறுவதால் பசு உண்மையைக் கூறுவதாகிறது. ஆகவே முதல் நான்கு பதிகங்களும் சைவம் கூறும் முப்பொருள் உண்மையைப் பற்றியதாக உள்ளன. பொதுவாக அவற்றின் கருத்துக்கள், குறிப்பாக திருவண்டப்பகுதியில் உள்ளவை, விஞ்ஞானக் கருத்துக்களைப் பிரதி பலிப்பனவாகவும், அறிவியல் உலகில் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாகவும் இருக்கின்றன.

திருச்சதகம் என்னும் தலைப்பில் உள்ள பாடல்கள் இறைவன் அருளில் தோய்ந்த அடியவரின் பல வகையான அனுபவங்களை விளக்குகின்றன. சதகம் என்பது நூறு பாடல்களாலான தொகுதி.

மார்கழி மாதத்துக் காலைப்பொழுதில் கன்னிப் பெண்கள் சிவபரம்பொருளின் புகழைப்பாடி வீடு வீடாகச்சென்று துயில்

எழுப்புவதாக அமைந்தது திருவெம்பாவைப் பாடல். திருக்கோயில்களில் திருவெம்பாவை நாட்களில் முக்கியமாக இப்பாடல்கள் பாடப்பெறும். உலகியலில் அமிழ்ந்து தூங்கும் ஆன்மாக்கள் இறையருளில் குளித்து இறையின்பம் துய்க்க வேண்டும் என்பதை உணர்த்துவன இப்பாடல்கள்.

அருள்நூலாகவும் அனுபவநூலாகவும் மெஞ்ஞான விளக்கமாகவும் திகழ்வது திருவாசகம். அதிலுள்ள பாடல்கள் அனைத்தும் தேனைப்போல் இனிமையுடையவை. இதனாலேயே 'திருவாசகத்தேன்' என்று இந்நூல் கூறப்படுகிறது. அதன் பெருமையை உணர்த்துவதாக அமைந்தது பின்வரும் பாடல். இது திருவாசக பாராயணம் தொடங்கமுன் பாடப்படுவது.

*தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி*
*அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை*
*மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்*
*திருவா சகமென்னும் தேன்*

தமிழிலே அகத்துறை நூல்கள் தனி இடத்தைப் பெறுகின்றன. இந்த வகையைச் சார்ந்தது மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையார். இறைவனையும் ஆன்மாவையும் தலைவன் தலைவியாகக் கற்பனை செய்து பாடப்பெற்ற பாடல்களில் இதுவும் ஒன்று. திருஞானசம்பந்தரும் இத்தகைய பாடல்களைப் (1-60) பாடியுள்ளார். இதனால் கணவன் மனைவி அல்லது காதலன் காதலி பாவம் அல்லது உறவு சைவத்தில் உள்ளதாகச் சிலர் தவறாகப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். நாயகன் நாயகி உறவு சைவத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சைவத்திருமுறைகள் (2)

## திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறையாக உள்ளன. தேவார மூவர் போலவே ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்களும் இசைப்பாடல்களால் இறைவனின் பெருமையைச் சொல்கிறார்கள். இருபத்தெட்டுப் பதிகங்களைக் கொண்ட திருவிசைப்பா ஒன்பது அருளாளரால் பாடப்பெற்றது.

இறைவனின் ஆற்றல் செயற்படுவதாற்றான் உயிர்களின் ஆற்றல் செயற்படுகிறது. நாம் செயற்படுவதற்காக அவன் செயற்படுகிறான். நாம் பேசுவதற்காக அவன் பேச வேண்டும். நாம் நினைப்பதற்காக அவன் நினைக்கவேண்டும். இத்தகைய கருத்துக்கள் கொண்ட பாடல்கள் திருவிசைப்பாவிலே உள்ளன. 'விளம்புமா விளம்பே', 'நினையுமா நினையே' போன்ற திருவிசைப்பாத் தொடர்கள் இவற்றை விளக்குவன.

திருப்பல்லாண்டு சேந்தனார் என்னும் அருளாளரால் பாடப்பெற்றது. தில்லையில் நடைபெற்ற திருவாதிரைத் திருவிழாவில் ஓடாது நின்ற தேரை, திருப்பல்லாண்டு பாடி சேந்தனார் ஓடச் செய்ததாகக் கூறுவர். இறை பணியே மேலானது, அதற்குத் தந்தை கூட ஊறு செய்தல் கூடாது என்ற கருத்தை விளக்கி சண்டீசுவர நாயனாரைப்பற்றிப் பாடுகிறார். 'மன்னுக தில்லை, வளர்க நம் பக்தர்கள், வஞ்சகர் போயகல' போன்ற கருத்துக்களையும் திருப்பல்லாண்டிலே காணலாம்.

## திருமந்திரம்

அன்பு அல்லது பக்தியின் அடிப்படையில் அமைந்தது தோத்திர நூல். அறிவு அல்லது ஞானத்தின் அடிப்படையில் அமைந்தது சாத்திர நூல். பன்னிரு திருமுறைகளும் தோத்திர நூல்கள் என்ற வகையில் பத்தாம் திருமுறையாக அமைந்த திருமந்திரமும் ஒரு தோத்திர நூலே. ஆனால் அது சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றைக் கொண்டிருப்பதால் சாத்திர நூலாகவும் கருதப்படும் தகுதி உடையது.

மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாக(பகுதிகளாக)ப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் கடவுள் வாழ்த்துடன் தொடங்கும் பாயிரத்தில் வேதம், ஆகமம் முதலியவற்றைப் பற்றிக் கூறப்படுகிறது. இதில் முதலாவதாக உள்ள 'ஒன்றவன் தானே' என்று தொடங்கும் பாடல் இறைவனின் இயல்பை விளக்குகிறது. முதல் தந்திரம் 'உபதேசம்' என்ற பகுதியுடன் தொடங்குகிறது. இதில் சைவ சித்தாந்தக் கருத்துக்களுடன் இறையனுபவமும் கூறப்படுகிறது. யாக்கை நிலையாமை முதலிய நிலையற்ற பொருட்கள் பற்றியும் கொல்லாமை, அன்பு, கல்வி என்று பல பொருட்கள் பற்றியும் பேசும் பகுதிகள் உள்ளன. இரண்டாம் தந்திரத்தில் சிவனின் புகழ், அருட்செயல்கள், உயிர்வகைகள் முதலிய பல செய்திகள் கூறப்படுகின்றன. மூன்றாம் தந்திரம் யோகநெறிகள், சாதனங்கள் பற்றியும் நான்காம் தந்திரம் மந்திர யந்திர முறைகள் பற்றியும் கூறுகின்றன. ஐந்தாம் தந்திரம் சைவத்தின் பிரிவுகளையும் சரியை முதலிய நால்வகை நெறிகளையும் விளக்குகிறது. ஆறாம் தந்திரம் சிவனே குருவாக வந்து அருளும் திறத்தையும், அதற்கு

வேண்டிய நெறிகளையும் சொல்கிறது. ஏழாம் தந்திரம் இலிங்க வடிவங்கள், சிவபூசை, ஐம்பொறிகளை அடக்குதல் முதலியவை பற்றிக் கூறுகிறது. எட்டாம் தந்திரம் உயிரின் அவத்தை (அனுபவ) நிலைகள் பற்றிக் கூறுகிறது. ஒன்பதாம் தந்திரம் திருவைந்தெழுத்து, சிவனின் நடனம், சமாதி நிலை முதலிய செய்திகளைத் தருகின்றது.

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பல கொண்ட நூல் திருமந்திரம். தமிழ் நூல்களில் திருமந்திரத்திற்றான் *சைவசித்தாந்தம்* என்ற சொல்லாட்சி முதலில் காணப்படுகிறது. இறைவனைப்போல் உயிர்களும், உலகப் பொருட்களும் அனாதியானவை, இறையருள் கிட்டும்போது உயிரைப் பற்றிய தளையாகிய பாசம் நீங்கிவிடும் என்பது போன்ற கருத்துக்களைக் கூறுவதால் திருமந்திரம் ஒரு சாத்திர நூலாகவும் உள்ளது.

*பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்*
*பதியினைப் போல்பசு பாசம் அனாதி*
*பதியினைச் சென்றணு காப்பசு பாசம்*
*பதியணு கில்பசு பாசம் நிலாவே.*

## பதினொராம் திருமுறை

பதினொராம் திருமுறையில் பன்னிரு அருளாளர் அருளிச் செய்த நாற்பது பிரபந்தங்கள் உள்ளன. திருஆலவாயுடையாரின் 'திருமுகப்பாசுரம்' முதலாக, நம்பியாண்டார் நம்பிகள் அருளிய 'திருநாவுக்கரசுதேவர் திருஏகாதச மாலை' ஈறாகக் கொண்டது இத்திருமுறை.

இதில் இருபத்தைந்து சிவபெருமானைப் போற்றுவதாகவும் ஒன்று முருகனைப் போற்றுவதாகவும் மூன்று விநாயகரைப்

போற்றுவதாகவும் பதினொன்று சிவனடியார்களின் சிறப்பை உரைப்பதாகவும் உள்ளன. காரைக்கால் அம்மையார் அருளிச் செய்த 'திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்' இரண்டு, 'திரு இரட்டை மணிமாலை', 'அற்புதத் திருவந்தாதி' ஆகிய நான்கு நூல்களும் 'திருமுகப்பாசுரத்துக்கு' அடுத்து வருவன. இறையருளே உலகை வாழ்விப்பதென்றும் இறைவனை வழிபடுவதற்கும் அவனருளே வேண்டும் என்றும் அற்புதத் திருவந்தாதியில் உணர்த்துகின்றார்.

*அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்*
*அருளே பிறப்பு அறுப்பதனால் - அருளாலே*
*மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்*
*எப்பொருளும் ஆவது எனக்கு.*

கபிலதேவ நாயனார் அருளிச் செய்த 'மூத்த நாயனார் திரு இரட்டை மணி மாலை' என்ற நூலில், விநாயகரை வழிபடுபவர் களுக்கு எல்லாச் செல்வங்களும் நல்லவாக்கும், நல்ல செயல்களும் கைகூடும் என்று கூறப்படுகிறது.

*திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை*
*காதலால் கூப்புவர்தம் கை.*

பதினொராம் திருமுறையிலுள்ள காரைக்கால் அம்மையார், நக்கீரதேவநாயனார், பட்டினத்துப்பிள்ளையார் ஆகிய அருளாளரின் பாடல்களிலுள்ள சைவசித்தாந்தக் கருத்துக்கள் சிறப்பானவை.

## பெரியபுராணம்

பன்னிரண்டாம் திருமுறையாக அமைந்தது சேக்கிழார் சுவாமிகள் பாடிய *பெரியபுராணம்*. சைவத் தொண்டர்களின் பெருமையைக் கூறுவதால் இந்நூலுக்கு சேக்கிழார் இட்ட பெயர் *திருத்தொண்டர் புராணம்*. பக்திச் சுவையும் பைந்தமிழ் இனிமையும் இலக்கிய நயமும் மிக்க சிறந்த ஒரு காப்பியம் இது. இந்நூல் ஏழு வகையான விருத்தப் பாவகையால் அமைந்து 4286 பாடல்களைக் கொண்டது. 'எடுக்கு மாக்கதை' என்று சேக்கிழார் இந்நூலைக் குறிப்பிடுகிறார். பெரியபுராணம் என்ற பெயர் பொருத்தமானது என்பதை இது உணர்த்துகிறது.

சுந்தரர் பெருமானின் 'தில்லைவாழ் அந்தணர்' என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகை சிவனடியார்களைப் பற்றிக் கூறுகிறது. நம்பியாண்டார் நம்பிகளின் 'திருத்தொண்டர் திரு அந்தாதி' என்ற நூலும் திருத்தொண்டத்தொகையைப் பின்பற்றி எழுதப்பட்டது. இவ்விரண்டின் விரிவாக அமைந்தது பெரியபுராணம்.

பெரியபுராணம் கைலை மலையில் நடந்த ஒரு நிகழ்ச்சியுடன் தொடங்கிக் கைலை மலையில் முடிவுறுகிறது. கைலை மலை அடிவாரத்திலிருக்கும் பல முனிவர்களுக்கு ஒருமுறை ஒரு பேரொளி தோன்றியது. உபமன்யு முனிவர் அவ்வொளியினைக் கண்டு கைகூப்பி வணங்கினார். சிவனையன்றி வேறெவரையும் வணங்காத அம்முனிவர் இப்பேரொளியைக்கண்டு வணங்கியதன் காரணத்தை மற்றைய முனிவர்கள் கேட்டனர். தென்னாட்டிலிருந்து சுந்தரர் பெருமான் இப்பேரொளியாகக் கைலைக்கு வருகிறார் என்று கூறிய உபமன்யு முனிவர், அவரைப் பற்றிக் கூறுகிறார். திருப்பாற்கடலைக் கடைந்தபோது அதில்

திரண்ட நஞ்சைக்கண்டு தேவர் அஞ்சி ஓட, சுந்தரர் பெருமான் தன் உள்ளங்கைகளில் அந்த நஞ்சை அடக்கிச் சிவனுக்குத் திருவமுது செய்யக் கொடுத்தவர். அவரின் கைகள் சிவனுக்குத் திருநீறு குழைத்துக் கொடுத்தவை; மலர்மாலை சாத்தியவை. அதனால் ஆலகால நஞ்சு அவரை எதுவும் செய்யவில்லை. இக்கதையைக் கேட்ட முனிவர்களின் வேண்டுகோளின்படி உபமன்யு முனிவர் சுந்தரரின் வரலாற்றையும் திருத்தொண்டத் தொகையில் கண்ட மற்றைய அடியார்களின் கதையையும் சொல்கிறார். இங்ஙனம் ஆரம்பித்து, சிவனடியார் பெருமையைக் கூறி, சுந்தரர் பெருமான் திருக்கைலையை அடையும் நிகழ்ச்சியுடன் பெரியபுராணத்தைச் சேக்கிழார் முடிக்கிறார்.

பெரியபுராணம் அறுபத்து மூன்று தனியடியார்கள் (நாயன்மார்கள்) பற்றியும் ஒன்பது தொகை அடியார் (அடியார் கூட்டம்) பற்றியும் கூறுகிறது. 'உலகெலாம்' என்று தொடங்கி 'உலகெலாம்' என்று முடிகிறது. 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தவர் தில்லையில் எழுந்தருளிய நடராசப் பெருமானே.

சுந்தரர் பெருமான் திருத்தொண்டத்தொகையிலே சிவனடியார்பற்றிக் கூறுகிறார். அதில் கூறப்பட்ட அடியார்களின் வரிசையைப் பின்பற்றிச் சேக்கிழார் சுவாமிகளும் பெரிய புராணத்திலே பாடுகிறார். பல பாடல்கள் தேவாரங்களின் விளக்கமாகவும் உள்ளன. சிவனடியார் செய்த அற்புதங்களின் காரணத்தை விளக்கும் பாடல்களும் உள்ளன. அமங்கலமான சொற்கள் தவிர்க்கப்பட்டுப் படிப்பவருக்கு இறைபக்தி ஊட்டுவன பெரியபுராணப் பாடல்கள். அடியார்களின் செயல்கள் அருளிச் செயல்கள் என்று குறிக்கப்படுகின்றன. 'வணங்கினார்' என்று

கூறாமல் 'வணங்கி அருளினார்' என்பது போன்று சொல்லப் படுகிறது. ஒவ்வொரு பதிகத்தின் முடிவிலும் அப்பதிகத்திற்குரிய நாயனாரை வணங்கி, அடுத்துவரும் பதிகத்துக்குரிய நாயனாரைப் பாடுவதாகச் சேக்கிழார் கூறும் பாங்கு போற்றற்குரியது.

பெரிய புராணத்தில் திருவைந்தெழுத்து, திருநீறு ஆகியவற்றின் பெருமை பேசப்படுகிறது. தமிழகத்தின் பண்பாடும் அறநெறியும் உணர்த்தப்படுகின்றன. வாழ்க்கையின் குறிக்கோள் சிவபரம்பொருளை அடைதல் என்பது காட்டப்படுகிறது. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மலிந்துள்ளன. சிவனடியார் குற்றமற்ற (ஆணவமலப்பற்றற்ற) குணக்குன்று அனையவர் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. அடியார் கூட்டம் 'புனிதர் பேரவை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் சைவர்களுக்குக் கிடைத்த ஒரு தெய்வீக நூல்; செந்தமிழ்த்தேன் பிலிற்றும் நல்ல கவிதைமலர். இறை பக்தியை வளர்த்து மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் சிவனருள் பெற்று உய்யவும் சிவனடியாரின் வாழ்க்கைமூலம் வழி காட்டுவது.

ஓட்டையும் பொன்னையும் சமமாகக் கருதுவதுபோல் துன்பத்தையும் இன்பத்தையும் சமமாகக் கருதும் சிவனடியார்கள் இருவினையொப்பு நிலை கூடியவர்கள். அவர்கள் சிவபரம்பொருளை அன்பு மேலீட்டால் கும்பிடுதலன்றி முத்தியைக்கூட விரும்பாத பண்பாளர் என்று சேக்கிழார் கூறுவது சிந்தனைக்குரியது.

*கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்*
*ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்*
*கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி*
*வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.*

# பெருமைமிகு திருத்தொண்டர்

சைவ சமய வரலாற்றிலே நாயன்மாருக்கு முக்கிய இடமுண்டு. *நாயன்மார்* என்ற சொல் தலைவர் அல்லது முதன்மையானவர் என்ற பொருள் தருவது. சிவனையே சிந்தை கொண்ட அடியார்களில் முன்னிலை வகிப்பவர் நாயன்மார். உயிர்களெல்லாம் இறைவனின் அடிமைகள் என்பதிலும் அவனருளாலேயே அனைத்தும் நடக்கின்றன என்பதிலும் உறுதியான நம்பிக்கை கொண்டவர்கள் இவர்கள். சைவத்தில் அறுபத்து மூன்று நாயன்மார் பற்றிக் குறிப்பிடுவது வழக்கம்.

## தனி அடியாரும் தொகை அடியாரும்

சுந்தரர் பெருமானின் திருத்தொண்டத்தொகையை அடிப்படையாக வைத்து, பெரிய புராணத்தில் சேக்கிழார் அறுபத்து மூன்று நாயனாரைப் பற்றிப் பாடுகிறார். இவர்களைத் தனியடியார்கள் என்று கூறுவது வழக்கம். இவர்கள் தவிர தொகையடியார்கள் என்று அடியார் கூட்டங்களின் ஒன்பதைப் பற்றியும் சேக்கிழார் கூறுகிறார். இவர்களும் திருத்தொண்டத் தொகையில் குறிப்பிடப்பட்டவரே.

சுந்தரரின் திருத்தொண்டத் தொகையின் அடிப்படையில் பார்த்தால் தனி அடியார்கள் அறுபது பேர்தான். சுந்தரரையும் அவரின் தந்தை, தாயாகிய *சடையன், இசைஞானி* என்னும் இருவரையும் சேர்த்து அறுபத்து மூன்று நாயன்மார்களாகச் சேக்கிழாரின் பெரியபுராணம் போற்றுகிறது. சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடிய காலத்தில் அவரின் பெற்றோர் அரன் அடியைச் சேர்ந்து விட்டனர் என்பதும் சுந்தரரால் போற்றப்பட்டவர்கள் அவர்கள் என்பதும் திருத்தொண்டத்

தொகையிலிருந்து அறியக்கிடக்கிறது. இந்த அறுபத்து மூவருடன் சேக்கிழாரையும் சேர்த்து அறுபத்து நான்கு நாயன்மார்களாகச் சைவ உலகம் இன்று போற்றுகிறது.

தொகை அடியார்களாகத் தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமையில்லாப் புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பால் வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிசார்ந்தார் ஆகிய ஒன்பது தொகையினர் போற்றப்படுகின்றனர். ஒவ்வொரு தொகுப்பினரும் பண்பாலும் செயலாலும் தனிச்சிறப்புடையவர். சுந்தரர் காலத்துக்கு முன்னரும் பின்னரும், தமிழகத்தில் மட்டுமன்றி அதற்கு வெளியேயும் உள்ள அடியாரை 'அப்பாலும் அடி சார்ந்தார்' என்ற தொடர் உணர்த்து வதாக சேக்கிழார் விளக்குகிறார்.

## நாயன்மார் நெறி

நாயன்மாரின் வரலாற்றைப் பார்க்கும்பொழுது சைவத்தில் சாதிப்பாகுபாடு இல்லை என்பது தெளிவு. பணத்தாலும் குலத்தாலும் பதவியாலும் ஏற்றத்தாழ்வு இல்லாத நிலை இருந்தது. எல்லோருமே சிவனடியார் என்ற உறவு இருந்தது.

அந்தணர், வேளாளர், குயவர், யாதவர் என்று பல குலத்தைச் சேர்ந்த நாயன்மாரைப் பெரிய புராணத்தில் காணலாம். வேளாளர் மரபில் வந்த அப்பர் அடிகளை அந்தணர் மரபில் வந்த அப்பூதியடிகள் ஏற்றிப் போற்றுவதைக் காணலாம். முடிமன்னரும் குடிமன்னருமான நாயன்மார் குடிமக்களான நாயன்மாரைப் போற்றுவதைக் காணலாம். எந்தக் குலத்தைச்

சேர்ந்தவரென்று அறியப் படாதவர்களும் உண்டு. கணம்புல்லர், எறியத்தர் போன்றவர் இந்த வகையினர்.

பெரியபுராணம் கூறும் நாயன்மார் வரலாற்றின் மூலம் தமிழகத்துப் பண்பாட்டை விளங்க முடியும். சாதி, குலம், பதவி என்ற அடிப்படையில் சமுதாயம் முன்னர் பிளவுபடவில்லை. 'மாட்சியில் பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே' என்ற சங்கத்தமிழனின் கூற்று பண்பட்ட தமிழகத்தின் சிந்தனையைப் பிரதிபலிப்பது. இதற்கு உதாரணமாக வாழ்ந்தவர்கள் சைவத்தமிழர்.

குருவையும் சிவனையும் சிவனடியார் கூட்டத்தையும் வழிபடல் சைவத்தின் வழிபாட்டு நெறி. குருலிங்கசங்கம வழிபாடு என்று இது குறிக்கப்படும். அப்பூதியடிகள் போன்ற அடியார்கள் குருவருளால் முத்தியடைந்தவர்கள். எறிபத்தர் போன்ற நாயன்மார் சிவலிங்க வழிபாட்டால் முத்தி பெற்றவர்கள். திருநீலகண்டர் போன்ற நாயன்மார் அடியாரை வழிபட்டு முத்தியடைந்தவர்கள்.

நாயன்மாரின் பாடல்கள் இலக்கிய நயம்மிக்க இன்தமிழ்க் கவிதைகள். இயல் இசைத் தமிழில் வல்லவர்களாகச் சில நாயன்மார்கள் இருந்தனர். தேவாரமூவரும் காரைக்கால் அம்மையாரும் இயல் இசையில் வல்லவர்கள். திருநாளைப் போவார், திருநீலகண்டத்து யாழ்ப்பாணர், ஆனாயனார், பரமனையே பாடுவார் ஆகியோர் இசைத்தமிழில் வல்லவர்கள். ஐயடிகள், திருமூலர், காரியார், பொய்யடிமையில்லாப் புலவர், சேரமான் பெருமாள் ஆகியோர் இயற்றமிழில் வல்லவர்கள்.

இவர்கள் காட்டிய பக்தி நெறியின் வெளிப்பாட்டுக்குத் தமிழ் துணை புரிந்தது. அதனால் தமிழும் வளர்ந்தது.

## மாணிக்கவாசக சுவாமிகள்

பன்னிரு திருமுறைகளில் திருவாசகத்திற்கு ஒரு தனி இடமுண்டு. ஆயினும் அதனை அருளிச் செய்த மாணிக்கவாசக சுவாமிகள் அறுபத்துமூன்று நாயன்மார்களில் இடம்பெறவில்லை. சுந்தரர் பெருமான் தன் திருத்தொண்டத் தொகையில் அவரைக் குறிப்பிடவில்லை. இதன் காரணமாகவே சேக்கிழாரின் பெரிய புராணத்தில் அவர் சேர்க்கப்படவில்லை என்று கருதலாம்.

தேவாரம் பாடிய மூவருக்கும் காலத்தால் முற்பட்டவர் மாணிக்கவாசகர் என்று மறைமலை அடிகள் தன் ஆராய்ச்சியால் கூறுகிறார். ஆனால், அவர் காலத்தால் பிற்பட்டவர் என்பதும் ஆதி சங்கரர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருக்கவேண்டும் என்பதும் (கி.பி. 795 -835) வேறு சில அறிஞரின் ஆய்வு முடிவு. இது சரியானால் சுந்தரரின் திருத்தொண்டத்தொகையில் அவர் இடம் பெறாததில் வியப்பில்லை.

மூவர் அருளிய முதல் ஏழு திருமுறைகளும் தில்லைக் கோயிலுள் பூட்டி வைக்கப்பட்டு, அவை பற்றி எவரும் அறியாத காலத்தில் மாணிக்கவாசகர் அவதரித்திருக்கலாம். தேவாரம் பற்றிய குறிப்பேதும் திருவாசகத்தில் இல்லாததற்கு இது ஒரு காரணமாக இருக்கலாம். அறுபத்து மூன்று நாயன்மார்களில் சண்டீசுரர் பற்றியும் கண்ணப்பர் பற்றியும் திருவாசகத்தில் கூறப்பட்டுள்ளன. இவர்கள் காலத்தால் மிகவும் முற்பட்டவர்கள் என்பதும் இவர்கள் பற்றிய தெளிவான வரலாற்றுக் குறிப்புக்கள்

இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கன. ஆயினும் இவர்கள் குறித்த செவிவழிச் செய்திகள் இருந்தன.

தேவாரம் பாடிய மூவரும் சிவாகமங்களை விட வேதங்களைப் பற்றிக் கூடுதலாகக் குறிப்பிட்டுள்ளனர். மாணிக்கவாசகர் சிவாகமங்கள் பற்றிக் கூடுதலாகக் குறிப்பிடுகிறார். இறைவனையே 'ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்' என வர்ணிக்கிறார். ஆகமங்கள் பிற்காலத்திற்றான் கூடுதலாகப் போற்றப்பட்டன என்றும் இதனால் மாணிக்கவாசகர் காலமும் தேவார மூவர் காலத்துக்கு பிற்பட்ட தென்றும் கருதுவோர் உளர். இவை வரலாற்றாய்வாளர்கள் தீர்க்க வேண்டியவை. எங்ஙனமாயினும் மாணிக்கவாசக சுவாமிகள் நாயன்மாரில் ஒருவராகப் போற்றப்பட வேண்டியவர்.

## தமிழகத்தின் பொற்காலம்

தமிழக வரலாற்றில் பக்தி இயக்கத்துக்கு வித்திட்டவர்கள் நாயன்மார்கள். இவர்கள் வாழ்ந்த காலத்தைத் தமிழகத்தின் பொற்காலம் எனலாம். வடக்கே இருந்து வந்த களப்பிரர் என்பவர் சில காலம் (கி.பி. 300 முதல் கி.பி. 600 வரை) தமிழகத்தை ஆண்டனர். இந்தக் காலம் தமிழகத்தின் இருண்ட காலம் எனப்படும். களப்பிரர் மொழியாலும் மதத்தாலும் வேறுபட்டவர்.

களப்பிரர் ஆட்சியில் சைவமும் தமிழும் அழியத் தொடங்கின. சமணம் அரச மதமாக அரியணை ஏறியது. தமிழரின் கலாச்சார பண்பாட்டுக் கூறுகள் அழிந்தன; அழிக்கப்பட்டன.

இந்த அழிவைத் தடுத்து நிறுத்திய பெருமை திருஞானசம்பந்தரையும் திருநாவுக்கரசரையுமே பெரிதும் சாரும்.

சைவத்தையும் தமிழையும் தமிழர் பண்பாட்டையும் அழியாது காத்த பெருமக்கள் இவர்கள்.

தன்னைத் 'தமிழ் ஞானசம்பந்தன்' என்றும் தனது பாடல்களைச் 'சம்பந்தன் தமிழ்' என்றும் கூறி இனமொழி மானம் காத்த முதல் சுயமரியாதைத் தமிழன் என்று திருஞானசம்பந்தரைக் கூறலாம். 'யாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்' என்று வீர முழக்கம் செய்த பற்றற்ற துறவி அப்பர் அடிகள். 'வானேயும் பெறல் வேண்டேன்; மண்ணாள்வான் மதித்துமிரேன்' என்று தன்மானக்குரல் கொடுத்தவர் மாணிக்கவாசகர். இச்சான்றோர்கள், மொழி இன மானத்தைப் பேணுவதின் அவசியத்தைத் தமிழினத்துக்கு உணர்த்தியவர்கள். இவர்களுக்கு முன்பே தன் பக்திப் பாடல்கள் மூலம் சிவம் போற்றிச் செந்தமிழ் வளர்த்தவர் காரைக்காலம்மையார். கொண்ட குறிக்கோளுக்காகத் தன் பெண்வடிவின் பேரழகையும் தூக்கி எறிந்தவர் அவர். தத்துவம் பேசியபோதும் தான் *தமிழ் செய்கிறேன்* என்று கூறிய பெருந்தகை திருமூலர். இத்தகைய அருளாளர் தோன்றியிராவிடின் தமிழும் சைவமும் என்றோ மறைந்திருக்கும். அவர்களது பற்றற்ற வீரமும் தன்மான உணர்வும் சிவனையே எண்ணும் சிந்தையும் என்றென்றும் போற்றிப் பின்பற்ற வேண்டியவை.

## ஆளுவது அருளே

இச்சிவனடியார்களுக்குப் பல இடையூறுகள் வந்தன. உயிரையே இழக்கவேண்டிய சூழ்நிலைகள் உருவாகின. தாங்கமுடியாத துன்பங்கள் நேர்ந்தன. ஆயினும் சிவனையே சிந்தை கொண்ட இவ்வடியார்கள் இவற்றினால் பாதிக்கப்

படவில்லை. இறையருளின் முன், ஏற்படும் இடையூறுகள் எதுவும் செய்யா என்பதையும் அருளால் எதையும் வெல்ல முடியும் என்பதையும் இவர்களின் வாழ்க்கையிலிருந்து காண முடிகிறது. *அருளே எம்மை ஆள்வது, அதுவே எம்மை வாழ்விப்பது* என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட அருளாளர் இவர்கள். அருளே உலகை ஆள்விப்பது என்று காரைக்காலம்மையார் கூறுகிறார்.

ஆழ்ந்த இறை நம்பிக்கை கொண்ட இச்சிவனடியார்கள் சிவனிடத்து அயரா அன்பு பூண்டவர்கள். அவனைத் தொழுதலன்றி வேறெதுவும் வேண்டாதவர்கள். 'கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலினர்' இப்பெருமக்கள். இவர்களின் பேச்சும் மூச்சும் இறையருளின் வெளிப்பாடாக இருந்தன. 'அவனுரை எனது உரை' என்று சம்பந்தப்பெருமான் கூறுகிறார். 'எனது மூச்சாக - என்னுளே உயிர்ப்பாக - இறைவன் உள்ளான்' என்று அப்பர் அடிகள் இயம்புகிறார். இதனாற்றான் இச்சான்றோரால் தம் பாடல்கள் மூலம் பல அற்புதங்களைச் செய்ய முடிந்தது. உயிருக்குத் தீங்கு செய்யும் சமணர் முன் நின்று சிறு குழந்தையான ஞானசம்பந்தர் சிவனைப் பாடிப் பரவினார். கல்லில் கட்டிக் கடலில் விட்டபோதும், வெண்ணீற்றறையினுள் பூட்டிவைத்தபோதும் திருநாவுக்கரசர் எத்தகைய தீங்குமின்றி வெளியேறினார். சுந்தரரால் வேண்டிய போது பொன்னும் நெல்லும் பெறமுடிந்தது. மாணிக்கவாசகரால் அரச தண்டனையைத் தாங்கியபோதும் எப்பாதிப்பும் இல்லாமல் இருக்க முடிந்தது. கொண்ட மனைவியையும் பெற்ற குழந்தையையும் இழக்க நேர்ந்தபோதும் நிலை குலையாத இறை நம்பிக்கை கொண்ட நாயன்மாரைப் பெரிய புராணத்தில் காண்கிறோம்.

## விதியையும் வெல்லலாம்

நாம் செய்த வினையின் பலனை நாமே அனுபவித்துத் தீர்க்க வேண்டுமென்பது நியதி. கடவுளை நம்பாத பௌத்தம், சமணம் போன்ற மதங்கள்கூட இதனை நம்புகின்றன. 'வகுத்தான் வகுத்த வகை'யிலேயே எம் அனுபவங்கள் அமையும் என்று கூறிய திருவள்ளுவர் 'ஊழிற் பெருவலி யாவுள?' என்று கேட்கிறார். விதியை வெல்ல முடியாது என்ற கொள்கை அனுபவத்தில் அறிந்த ஒன்று.

சிவனருளால் விதியையும் வெல்லலாம் என்று செய்து காட்டியவர்கள் நாயன்மார்கள். இறந்தவரை உயிர்ப்பித்தும் நோய் தீர்த்தும் பல அற்புதங்கள் செய்தவர் திருஞானசம்பந்தர். இவர் போன்றே பிற நாயன்மாரும் செயற்கரிய செய்தவர்கள். 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்ற வள்ளுவன் வாக்கை இவ்வடியார்கள் தம் அருட்செயல்கள் மூலம் செய்து காட்டினர். அவர்களின் திருவாக்கு விதியையும் வெல்லத் துணை புரிந்தது.

இவ்வடியார்கள் வாழ்க்கையைப் படிப்பதால் நாமும் வாழ்வில் வளம் காணமுடியும். சம்பந்தர் முதலான அருளாளரின் பாடல்களைப் பக்தியுடன் ஓதிப் பிணி துன்பம் நீங்கியவரை இன்றும் காணலாம். மன அமைதியையும் மகிழ்வையும் துன்ப நீக்கத்தையும் அளிப்பவை இவ்வருளாளரின் வாழ்வும் வாக்கும்.

*மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்*
*எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவில்லை*
*கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்*
*பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.*

- சம்பந்தர் தேவாரம்

# சமய குரவர் வரலாற்றுக் குறிப்பு

சைவத்தை அழிவிலிருந்து காப்பாற்றி அதன் வளர்ச்சிக்கு வழி வகுத்தவர்கள் சமயகுரவர். தேவாரம் பாடிய மூவரும் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரும் சமயகுரவர் எனப்படுவர். போக்குவரத்து வசதியற்ற அந்த நாட்களில் ஊரூராகச் சென்று திருப்பாடல்கள் பாடிப் பக்தி நெறியை வளர்த்து சைவத்தின் பெருமையை நிலை நாட்டியவர்கள் இந்த ஞானிகள். சைவ மக்கள் இவர்களின் வரலாற்றை அறிந்திருத்தல் அவசியம். இக்கட்டுரையில் அதனை முழுமையாகத் தர இயலாதென்பதால் சில குறிப்புக்கள் தரப்படுகின்றன.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

மூன்று வயதிலேயே ஞானம் பெற்றுத் தேவாரம் பாடிய தெய்வக்குழந்தை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். ஆளுடைய பிள்ளையார் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் சீர்காழியில் அந்தணர் மரபில் கவுணியர் குலத்தில் அவதரித்தவர்.

சீர்காழியிலுள்ள தோணிபுரம் திருக்கோயிற் குளத்தில் தந்தை நீராட, அவரைக் காணவில்லையென ஏங்கிய குழந்தை கோயிற் கோபுரத்தைப் பார்த்து 'அம்மே அப்பா' என்று கூவி அழுதது. சிவனுடன் இடபவாகனத்தில் வந்த உமையம்மை, தன் திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் ஊட்ட, அதனைப் பருகிய குழந்தை சிவஞானத்தையும் கலை ஞானத்தையும் ஒருங்கு உணர்ந்ததாகச் சேக்கிழார் கூறுகிறார்.

*சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்*
*உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெஞ்ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.*

நீராடி முடித்து வந்த தந்தை குழந்தையின் வாயிலிருந்து வழிந்த பாலைக் கண்டு அதுபற்றி வினவியதற்கு, கோயிலைச் சுட்டிக் காட்டி 'தோடுடைய செவியன்' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார் சம்பந்தப் பெருமான். இங்ஙனம் மூன்று வயதில் பாடத்தொடங்கிய சம்பந்தர் பல திருக்கோயில்களுக்குச் சென்று இறைவனைப் பாடி அற்புதங்கள் செய்தவர்.

திருக்கோலக்கா என்னும் கோயிலில் 'மடையில் வாளை பாய' என்னும் பதிகம் பாடிய சம்பந்தப் பெருமானுக்கு, இறைவன் *உலகவர் முன் பொற்றாளம்* ஈய்ந்து *நாளும் செந்தமிழால் சிவம் பெருக்க* அருள் செய்தான். அவரின் பெருமையைக் கேள்வியுற்ற *திருநீலகண்டத்து யாழ்ப்பாணர்* என்னும் சிவனடியார் தன் மனைவி மதங்கசூளாமணியுடன் அவரின் சீடராகி அவரின் பாடல்களை யாழில் வாசித்து வரலாயினர்.

தந்தையின் தோள் மேலிருந்து செல்வதை வழக்கமாகக் கொண்ட ஞானக்குழந்தை, திருநெல்லைவாயில் அரத்துறை என்ற கோயிலுக்கு நடந்தே சென்றார். நடைப்பயணத்தால் ஏற்படும் இடரை அகற்றுவான்போல் அவருக்கு முத்துச் சிவிகையும் முத்துக்குடையும் முத்துச் சின்னமும் அளித்தான் இறைவன். மகனுக்குத் தந்தை காட்டும் பரிவுபோல் அமைந்த இறை கருணையை எண்ணி உருகிய சம்பந்தப்பெருமான் 'எந்தை ஈசன் எம்பெருமான்' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடிப் பரவினார். ஏழு வயதில் அவரின் குலவழக்கப்படி நடைபெற்ற

உபநயனச் சடங்கில் 'துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்' என்று பாடிய பதிகம் திருவைந்தெழுத்தின் பெருமையை விளக்குவதாக அமைந்தது.

வயது முதிர்ந்தவரான திருநாவுக்கரசு நாயனார் சிறுகுழந்தையான சம்பந்தரைக் காணச் சீர்காழிக்கு விரைந்தார். அவரின் வருகையை அறிந்த சம்பந்தப்பெருமான் சீர்காழி எல்லையில் அவரை எதிர்கொண்டு 'அப்பரே' என்று அழைத்து வணங்கினார். அப்பரும் ஞானப்பாலுண்ட சம்பந்தரைப் பார்த்து 'அடியேன்' என்று கூறி வணங்கினார். சைவம் சிவப்பணியோடு சமுதாயப்பணியையும் போற்றுவது. இவ்விரு அடியார்களும் திருவீழிமிழலையில் மீண்டும் சந்தித்து இறைவனிடம் வேண்டிப் படிக்காசு பெற்று அங்கு நிலவிய கொடும்பஞ்சத்தை நீக்கினர். வேதாரணியத்திலே அடைக்கப்பட்டிருந்த கோயிற்கதவை அப்பர் பாடித் திறக்கச் செய்ததும் சம்பந்தர் மீண்டும் அடைக்கச் செய்ததும் சிவனடியார்களின் ஆற்றலை உணர்த்துவன.

பாண்டிய நாட்டு மன்னன் சமணர்களின் சூழ்ச்சியால் சைவத்தை விட்டு சமணத்தைத் தழுவ, நாட்டு மக்களும் சிறிது சிறிதாக மதம் மாறினர். மன்னன் மனைவி மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவநெறி பிறழாமல் வாழ்ந்தவர்கள். அவர்களின் வேண்டுகோளின்படி சம்பந்தப் பெருமான் பாண்டிநாடு சென்று, சமணரை வென்று மன்னனுக்குண்டான கொடிய வெப்பு நோயை 'மந்திரமாவது நீறு' என்று தொடங்கும் பதிகம் பாடி திருநீறு பூசித் தீர்த்தருளினார். திருநீற்றின் பெருமையும் சம்பந்தர் தமிழின் ஆற்றலும் மன்னனும் குடிமக்களும் மீண்டும் சைவத்தைத் தழுவத் துணைசெய்தன.

சமணர்களால் சைவமும் தமிழும் தாழ்வுற்றுத் தமிழர் கலாச்சாரம் சிதைவுற்றது. அவர்கள் கொடுமை மிக்கவர் என்பதால் சிறுவனான ஞானசம்பந்தர் அவர்களால் பல கொடுமைகளை அனுபவிக்க நேரும் என்று அஞ்சியவர் மங்கையர்க்கரசியார். இறையருள் இருக்கையில் பாலனாகிய தனக்கு எந்த இடையூறும் ஏற்படாது என்று உறுதி கூறி, அதனைச் செய்து காட்டினார் ஞானசம்பந்தப்பெருமான்.

*மானிநேர்விழி மாதராய்வழு திக்குமாபெரும் தேவிகேள்*
*பானல்வாயொரு பாலனீங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்*
*ஆனைமாமலை ஆதியாய இடங்களில்பல அல்லல்சேர்*
*ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே.*

இங்ஙனம் பல அற்புதங்கள் செய்த சம்பந்தப்பெருமான், *பெருமணம்* என்னும் திருக்கோயிலில் நம்மாண்டார் நம்பி என்பவரின் திருமகளை மணந்து, அவளுடனும் கூடி நின்ற அடியவருடனும் வைகாசி மூலத்தன்று, 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்று தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தைப்பாடி, அங்கு சோதியாய் எழுந்த இறையருளில் கலந்தார்.

## திருநாவுக்கரசு நாயனார்

திருநாவுக்கரசு நாயனாரின் இயற்பெயர் மருணீக்கியார். இளமையிலே சமணத்தில் சேர்ந்து சமணத்துறவிகளின் தலைவராகித் தருமசேனர் என்ற பட்டத்துடன் வாழ்ந்தவர். முதிர்ந்த வயதிலே மீண்டும் அவர் சைவத்துக்குத் திரும்பி அதன் பெருமையை நிலை நாட்டினார். அதற்குக் காரணமாக இருந்தவர் அவரின் தமக்கை திலகவதியார்.

சிறுவயதிலே பெற்றோரை இழந்து, தனக்குக் கணவராக வரவிருந்தவரைப் போரில் பறிகொடுத்து நொந்தழிந்திருந்த திலகவதியாருக்கு மருணீக்கியாரின் மதமாற்றம் பெரும் வேதனையை அளித்தது. தன் தம்பி மீண்டும் சைவத்துக்குத் திரும்பவேண்டுமென்று குல தெய்வமான திருவதிகைப் பெருமானை வேண்டித் தவமிருந்தார். அவரின் தவம் வீண்போகவில்லை. சூலை நோய் பிடித்து அதனைத் தாங்கமுடியாத நிலையில் தரும சேனரான மருணீக்கியார் தமக்கையிடம் வரவேண்டியிருந்தது. தம்பியின் வரவு கண்டு மகிழ்ந்த திலகவதியார், திருநீறு கொடுத்துப் பூசுவித்துத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார். திருவதிகை விரட்டானத்து இறைவனைப் போற்றி, 'கூற்றாயினவாறு' என்று தொடங்கும் பதிகம் பாட அவரின் சூலை நோய் நீங்கியது. இறைவனின் கருணையை எண்ணி உருகி நின்ற மருணீக்கியாருக்கு அவரின் செந்தமிழ்ப் பதிகத்தைக் கேட்ட இறைவனே 'திருநாவுக்கரசு' என்ற பெயரைச் சூட்டினான். சமணத்தில் தருமசேனராக இருந்த மருணீக்கியாரை திருநாவுக்கரசராக மாற்றிச் சைவம் தழைக்கப் பணி செய்ய வைத்த பெருமை திலகவதியாரையே சாரும்.

சமணத்தை விட்டு நீங்கிய நாவுக்கரசருக்குப் பல தீமைகளைச் சமணர் அரசன் மூலம் செய்தனர். சுண்ணாம்பறையில் பூட்டி வைத்த பொழுது நாவுக்கரசர் பாடிய 'மாசில் வீணையும்' என்ற பதிகம் அவ்வறையைக் குளிர்வித்தது. நஞ்சூட்டியும் மதம் பிடித்த யானைமுன் நிறுத்தியும் கொல்ல முடியாத நிலையில் கல்லில் கட்டி நாவுக்கரசரைக் கடலில் எறிந்தனர். சிவனைப் பரவித் திருவைந்தெழுத்தை ஓதி, கட்டிய கல்லைத் தெப்பமாக்கிக் கரை சேர்ந்தார் நாவுக்கரசர்.

*சொற்றுணை வேதியன் சோதி வானவன்*
*பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ*
*கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்*
*நற்றுணை யாவது நமச்சி வாயவே.*

திருநாவுக்கரசு நாயனார் சைவத்துக்குத் திரும்பியது அறுபது வயதிலென்பதும் அதன்பின் பத்தாண்டுகள் கழித்தே ஞானசம்பந்தரை முதலில் கண்டனரென்பதும் அறிஞரின் கருத்தாக உள்ளது. முதிர்ந்த வயதில் சிவபெருமானைப் பாடியதோடு உழவாரப் பணியும் செய்தவர் அப்பர் அடிகள். அவரின் திருப்பணிகளால் கவரப்பட்ட அப்பூதியடிகள், திருநாவுக்கரசர் என்ற பெயராலேயே தான் அமைக்கும் குளம், தண்ணீர்ப்பந்தல் முதலிய அனைத்திற்கும் பெயரிட்டுப் பணிசெய்தவர். அவரின் மூத்த மகன் 'மூத்த திருநாவுக்கரசு' பாம்பு தீண்டி இறந்ததையும் வெளிக்காட்டாமல் அவரும் அவர் மனைவியும் அப்பரடிகளுக்கு உணவு பரிமாறினர். இதனை அறிந்த அப்பரடிகள் 'ஒன்று கொலாம்' என்று தொடங்கும் பதிகம் பாடி இறந்த மகனை உயிர்பெற்று எழச்செய்தது சிவனடியார் பெருமைக்கு எடுத்துக்காட்டு.

தில்லை நடராசனின் திருவடிவத்தைக் காண்பதற்காகவே இம்மனிதப் பிறவி எடுக்கலாம், அது வேண்டுவதே என்று பாடியவர் திருநாவுக்கரசர். தள்ளாத வயதில் அவனின் திருவுருவக் காட்சியைக் கைலையில் காண விழைந்து காடு மேடுகளெல்லாம் நடந்து உடல் தேய்ந்து சோர்வுற்று வீழ்ந்தார். அவரின் உறுதியைக் கண்ட இறைவன், அவரின் நலிவைப் போக்கி, அருகிலுள்ள திருக்குளத்தில் மூழ்கித் திருவையாற்றிலுள்ள குளத்தில் எழுந்திருக்கச் செய்து அங்கே தன் திருவுருவைக்

காட்டினான். அப்பொழுது பாடியது *'மாதர் பிறைக் கண்ணியானை'* என்று தொடங்கும் பதிகம்.

சென்றவிடமெல்லாம் சிவத்தொண்டும் உழவாரப்பணியும் செய்த திருநாவுக்கரசு நாயனார் சித்திரைச் சதயநாளில் திருப்புகலூர்ப் பெருமானை நினைந்து 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' என்று புகன்று, அவனின் திருவடி நீழலில் கலந்து சிவப்பேறு பெற்றார்.

## சுந்தரமூர்த்தி நாயனார்

கைலை மலையில் சிவபெருமானுக்கு அருகில் இருந்து பணிவிடை செய்பவர் *ஆலாலசுந்தரர்*. உமையம்மைக்குத் திருப்பணி செய்யும் *அநிந்திதை, கமலினி* என்ற இரு பெண்களின் அழகில் மனத்தைப் போகவிடுகிறார். அவர்களும் ஆலால சுந்தரரின் அழகால் கவரப்படுகின்றனர். இதனால் மண்ணுலகில் பிறந்து அப்பெண்களை மணந்து மகிழ்வுற்று மீளும்படி சுந்தரருக்கு இறைவன் கூறி அருளுகின்றான். தன் செயலுக்கு வருந்திய அவர் 'மானிட வாழ்வில் அடியேன் மயங்கும் வேளையில் தேவரீர் என்னைத் தடுத்து ஆட்கொள்ள வேண்டும்' என்று வேண்ட, இறைவனும் அதற்கு இசைகிறான். சுந்தரர் பெருமானின் மண்ணுலக வரலாற்றுக்கு இந்த நிகழ்ச்சியே காரணமாக அமைந்தது.

சுந்தரரின் இயற்பெயர் நம்பியாரூரர். முன்பு கைலையில் கொண்ட பெயரின் அடிப்படையிலே சுந்தரமூர்த்தி நாயனார் என்று அழைக்கப்படுகிறார். கல்வியிற் சிறந்து விளங்கிய நம்பியாரூரரின் திருமணவேளையில், முன் கொடுத்த வாக்கின்படி

அவரைத் தடுத்தாட்கொள்ள இறைவன் கிழப்பிராமணராக வருகிறான். நம்பியாரூரன் தனக்கு வழிவழி அடிமை என்று கூறி, அதற்குரிய ஆவண ஓலையைக் காட்ட, அவரைப் பித்தன் என்று கேலி செய்து அந்த ஓலையைக் கிழித்து எறிகிறார் நம்பியாரூரர். ஆயினும் மூல ஓலையை ஆராய்ந்து பார்த்த நடுவர் மன்றம் அவ்வோலையில் உள்ளதை உறுதி செய்ய, நம்பியாரூரர் அதனை ஏற்று அந்தணர் பின் அடிமையாகச் செல்கிறார். முன்சென்ற அந்தணர் திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலில் மறைய, வந்தவர் சிவபெருமானே என உணர்ந்த நம்பியாரூரர் உள்ளம் உருக 'அடியேன் செய்வதென்ன?' என்று இறைவனை வேண்டுகிறார். உலகவர் முன் வன்மை பேசியதால் 'வன்தொண்டன்' என்ற பெயர் சூட்டி, 'பித்தன்' என்று முன்பு தன்னை அழைத்த அந்தச் சொல்லையே முதலடியாக இறைவன் எடுத்துக்கொடுக்க, சுந்தரர்பெருமான் 'பித்தா பிறை சூடி' என்று தொடங்கும் பதிகம் பாடுகிறார். இங்ஙனம் பாடிய சுந்தரர் பெருமானின் *திருத்தொண்டத்தொகை* என்ற பதிகம்தான் சைவ நாயன்மார்களை உலகறியச் செய்தது.

இறையருள் பலவழிகளில் செயற்படுகிறது. அப்பர் அடிகள் தொண்டு செய்த புண்ணிய நிலமாகிய திருவதிகையைக் காலால் மிதிக்க விரும்பாத சுந்தரர் அருகில் இருக்கும் சித்தவடம் மடத்தில் இரவைக் கழித்தார். உறங்கும்போது இறைவன் ஒரு கிழவேதியர் வடிவில் வந்து அவரின் தலைமேல் பாதம் வைத்துத் திருவடித்தீட்சை செய்தது அவரின் அருட்செயல்களில் ஒன்று. இதனாற் பக்குவமடைந்த சுந்தரர் பல திருக்கோயில்கள் சென்று பாடிப்பரவித் திருவாரூர் அடைந்தபோது அவரைத் தோழனாக

ஏற்று என்றும் மணக்கோலத்துடன் இருக்க அருள்புரிகிறான் இறைவன். மணக்கோலம் கொண்ட சுந்தரர் அங்கு வந்த பரவையார் என்ற பெண்ணைக் கண்டு மணந்ததும் இறையருள் வழி நடந்த நிகழ்ச்சியே. முன்னர் திருக்கைலையில் கமலினியாக இருந்தவரே பரவையார். அநிந்திதையாக இருந்த பெண் சங்கிலியாராகத் திருவொற்றியூரில் இறைபணி செய்தவர். அவரையும் சுந்தரர் கண்டு மயங்கி மணம் செய்ததும் இறையருளால் நடந்ததே.

கண்ணிழந்து வருந்திய சுநதரருக்கு இறைவன் திருவெண்பாக்கத்தில் ஊன்று கோலொன்று கொடுத்தும் காஞ்சிபுரத்தில் இடது கண்ணையும் திருவாரூரில் வலது கண்ணையும் திரும்பக் கொடுத்தும் அருள்புரிந்தான். திருவாரூரில் சுந்தரர் பாடியது 'மீளா அடிமை' என்று தொடங்கும் பதிகம்.

வாழ்வின் குறிக்கோள் நிறைவேறிய பின், ஆடிச் சுவாதி நாளில் இறைவன் அனுப்பிய வெள்ளை யானை மீதேறி திருக்கைலையை அடைந்தார் சுந்தர் பெருமான். அவரின் நண்பரான சேரமான் பெருமான் நாயனாரும் அவரைப் பின்தொடர்ந்து சிவப்பேறு பெற்றார்.

## மாணிக்கவாசக சுவாமிகள்

மாணிக்கவாசகர் எனப் போற்றப்படும் திருவாதவூரரின் வரலாறு பெரிய புராணத்தில் இல்லை. ஆனால் திருவாலவுடையாரின் திருவிளையாடற்புராணம், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம், கடவுள் மாமுனிவரின் திருவாதவூரடிகள் புராணம், தலபுராணங்கள் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளது.

பாண்டிய மன்னனுக்கு முதலமைச்சராக இருந்து, 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டத்தைப் பெற்றுப் போற்றப்பட்ட அருள்ஞானி வாதவூரர். குதிரைகள் வாங்குவதற்கு மன்னன் கொடுத்த பணத்தையெல்லாம், குருந்த மரத்தடியில் இருந்த குருவினால் ஆட்கொள்ளப்பட்டு, சிவப்பணியில் செலவழித்ததால் அரச தண்டனைக்கு உள்ளானார். அவரின் துயர் போக்குவது போல் ஆவணி மூலத்தன்று காட்டிலுள்ள நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி அனுப்பினான் இறைவன். குறித்த வேளையில் குதிரைகள் வந்ததைக் கண்டு மகிழ்ந்த மன்னன் வாதவூரருக்குத் தான் அளித்த தண்டனைக்காக வருந்தினான். ஆயினும் அன்றிரவே குதிரைகள் மீண்டும் நரிகளாகி இடர் விளைத்தன. வாதவூரர் மீண்டும் தண்டனை பெற, வைகையாறு பெருக்கெடுத்தது. அதனால், பாண்டியநாடே பாழாகும் நிலை உருவானது. குடிமக்களே ஆற்றுப் பெருக்கை அணையிட்டுத் தடுக்கவேண்டுமென்ற அரச உத்தரவை நிறை வேற்றுவதற்கு வந்தி என்ற மூதாட்டி ஆளில்லாமல் அவதியுற்றாள். அவளுக்கு உதவக் கூலியாக இறைவனே வந்தான். அவள் கொடுத்த பிட்டினைக் கூலியாகக் கொண்டு மண்சுமந்த பெருமான் குறித்த வேலையில் நாட்டமில்லாதிருந்ததால் அரசனின் பிரம்படிக்கு ஆளானான். அவனுக்கு விழுந்த அடி அரசன் உட்பட அனைவருக்கும் விழ, கூலியாக வந்த இறைவன் மறைந்தான்; வைகைக்கரையும் கட்டப்பட்டது. இறைவனின் இத் திருவிளையாடல் வாதவூரருக்காகவே நடந்ததென்பதை அறிந்த அரசன் அவரை சிவனெனவே போற்றிப் பணிந்தான்.

வாதவூரரின் வாசகங்கள் மாணிக்கம் போல அழகாக இருந்ததால் அவருக்கு மாணிக்கவாசகர் என்ற பெயர்

உண்டானது. மாணிக்கவாசகர் பல அற்புதங்கள் செய்ததையும் அவருக்காக இறைவன் பல அற்புதங்கள் செய்ததையும் காணமுடிகிறது. ஈழநாட்டு மன்னனுடன் தில்லைக்கு வந்த புத்த துறவிகளுடன் வாதிட்டு வென்று, அவனின் மகளின் ஊமைத்தன்மையை மாற்றி, அவள் மூலம் திருச்சாழல் என்ற பதிகத்தைப் பாடுவித்து சைவத்தின் மேன்மையை நிலை நாட்டியவர் மாணிக்கவாசக சுவாமிகள்.

திருப்பதிகள் பல சென்று அவர் பாடிய பாடல்களை, தில்லைப்பதியில் மீண்டும் பாடச்செய்து தன்கையால் ஓலைச் சுவடியில் எழுதியவன் அந்தணராக வந்த இறைவனே. திருக்கோவையாரைப் பாடச் செய்ததும் அவனே. தான் எழுதிய ஏட்டுச் சுவடியில் 'மாணிக்கவாசகன் சொல்ல சிற்றம்பலத்தான் கையெழுத்து' என ஒப்பமிட்டு மறைந்தது அவரின் திருப்பாடல்களின் பெருமைக்குச் சான்று பகர்வது.

இறைவனால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடி பின்னர் தில்லைச் சிற்சபையிலுள்ள பஞ்சாட்சரப் படிகளில் இருக்கக்கண்ட தில்லைவாழந்தணர் மாணிக்கவாசகரை அணுகி அதிலுள்ள பாடல்களின் பொருள் வேண்டி வணங்கினர். அவர் பாடல்களின் பொருள் ஆடும் பெருமானின் அழகிய திருவடிகளே எனக்காட்டி, அத்திருவடி ஒளியில் இரண்டறக் கலந்தார்.

*பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி*
*ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி*
*வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி*
*ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.*

# சைவ சித்தாந்த நூல்கள் (1)

பன்னிரு திருமுறைகள் சைவத்தின் பக்தி நூல்களாக உள்ளன என்றால். பதினான்கு தத்துவ நூல்கள் சைவத்தின் அறிவு நூல்களாக உள்ளன. இவை சைவசித்தாந்த நூல்கள் அல்லது மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும். சித்தாந்தம் என்பது முடிந்த முடிவு அல்லது நன்கு நிறுவப்பட்ட முடிவு என்று பொருள்படும். *பதி, பசு, பாசம்* எனும் முப்பொருள்களின் இயல்பு. அவற்றுக் கிடையிலுள்ள உறவு, ஆன்மாவின் வளர்ச்சி, இறை அனுபவம் போன்றவற்றை விளக்குபவை இந்த நூல்கள்.

பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் பன்னிரண்டாம் பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் வெளிவந்தவை. உபநிடதங்கள், சிவாகமங்கள், பழந்தமிழ் நூல்கள், திருமுறைகள் ஆகியவற்றில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் விரவியுள்ளன. அவற்றைத் தொகுத்து முறைப்படுத்தித் தருவனவாக மெய்கண்ட சாத்திர நூல்கள் உள்ளன.

## சிவஞானபோதம்

சைவசித்தாந்த நூல்களின் முதன்மை நூலாகக் கருதப்படுவது சிவஞான போதம். பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்ட இந்நூலில் சித்தாந்த தத்துவக் கருத்துக்கள் அனைத்தும் உள்ளன.

முதல் மூன்று சூத்திரங்களும் முப்பொருள் உண்மையைப் பேசுகின்றன. இதனால் இவை *பிரமாண இயல்* என்ற தொகுதியாக அழைக்கப்படுகின்றன. அடுத்த மூன்று சூத்திரங்களும்

முப்பொருள்களின் தன்மையை (இலக்கணத்தை) பேசுகின்றன; இவை *இலக்கண இயல்* என்ற தொகுதியாக உள்ளன. இதற்கடுத்த மூன்று சூத்திரங்களும் இறைவனை அடையும் வழி முறைகளைக் கூறுவதால் *சாதன இயல்* எனப்படுகின்றன. இறுதி மூன்று சூத்திரங்களும் சாதன இயலில் கூறப்பட்ட வழியில் நின்று அடையும் பயனைக் கூறுகின்றன. இதனால் இவற்றின் தொகுதி *பயனியல்* எனப்படுகின்றது.

ஒவ்வொரு சூத்திரமும் *அதிகரணங்கள்* என்று பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அதிகரணத்துக்கும் *மேற்கோள்*, ஏது, உதாரண வெண்பா என்று விளக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. உலகில் உள்ள சமய தத்துவ நூல்களில், காரண காரியத்தொடர்புடன் விளக்கப்பட்ட மிகச் சிறந்த நூல் சிவஞான போதம் என்பது அறிஞர்களின் கருத்து. (*One of the most closely reasoned religious philosophies found anywhere in the world* - John H. Piet)

இந்நூலின் முதற் சூத்திரம் இறை உண்மையை நிறுவுகிறது. இந்தப் பிரபஞ்சம் அவன், அவள், அது என்று கூறப்படும் பொருட்களின் தொகுதியாக உள்ளது. இவை தோன்றுதல், நிலை பெறுதல், அழிதல் (ஒடுங்குதல்) ஆகிய மூவித நிகழ்வுகளை உடையன. உயிர்களின் ஆணவமல நீக்கத்துக்காகத் தோற்றுவிக்கப்பட்ட இவை மீண்டும் ஒடுங்குகின்றன. அந்தம் அல்லது ஒடுக்கத்தை(சங்காரத்தை)ச் செய்பவனே பிரபஞ்சத்துக்கு முதற்கடவுள் (ஆதி) என்று ஞானிகள் கூறுவர். இங்ஙனம் இறையுண்மையை நிறுவும் சூத்திரத்தில் பல தத்துவக் கருத்துக்கள் மறைவாக உள்ளன.

*அவன்அவள் அதுஎனும் அவைமூ வினைமையின்*
*தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்*
*அந்தமாதி என்மனார் புலவர்.*

இந்நூலுக்குள்ள உரைகளில் சிவஞான முனிவர் எழுதிய 'சிவஞான மாபாடியம்' என்னும் பேருரையும், 'சிவஞான போதச் சிற்றுரை'யும் சிறப்பு மிக்கவை.

சிவஞானபோதத்தை (கி.பி. 1232) அருளிச் செய்தவர் மெய்கண்டார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் *சுவேதவனப்பெருமாள்* திருவெண்காட்டுக் கோயிலுக்குப் பெற்றோர் சென்று, சம்பந்தப் பெருமானின் தேவாரத்தை ஓதி இறைவனை வேண்டியதால் இக்குழந்தை பிறந்தது. அதனால் அக்கோயில் இறைவனின் பெயரையே (சுவேதவனப் பெருமாள்) பெற்றோர் தம் குழந்தைக்குச் சூட்டினர். இக்குழந்தைக்கு இரண்டு வயது வந்த பொழுது, பரஞ்சோதி முனிவர் என்பவர் திருக்கைலையிலிருந்து தெற்கேயுள்ள பொதிகை மலைக்கு வானவீதி வழியாகச் சென்றாரென்றும் செல்லும் வழியில் இக்குழந்தையின் பக்குவ நிலையை அறிந்து கீழிறங்கி வந்து, சிவதீட்சை செய்து, 'மெய்கண்ட சிவம்' என்னும் திருப்பெயரைச் சூட்டி, 'சிவஞானபோதம்' என்னும் நூலின் நுண்பொருளை உபதேசித்ததாகவும் வரலாறுண்டு. இவ்வருள் உபதேசம் பெற்ற சுவேதனைப் பெருமாள், 'மெய்கண்ட சிவம்' என்று போற்றப்பட்டு, 'சிவஞான போதம்' என்னும் உயர்ந்த தத்துவ நூலை அருளிச் செய்தார்.

## சிவஞான சித்தியார்

சிவஞானபோதத்துக்கு ஒரு விளக்க நூலாகத் திகழ்வது சிவஞானசித்தியார். விருத்தப்பாக்களால் அமைந்த இந்நூல் சிவஞான போதத்தின் வழிநூல் என்று கூறப்படும். பரபக்கம் சுபக்கம் என்று இரு பகுதிகள் உடையது இது.

அன்றிருந்த பிற மதக்கொள்கைகளைக் கூறி, அவற்றைக் காரண காரியத் தொடர்புடன் மறுப்பது பரபக்கம். சைவசித்தாந்தக் கொள்கையை நிறுவுவது சுபக்கம். தர்க்க முறையில் எழுதப்பட்ட சிறந்த தத்துவ நூல் சிவஞானசித்தியார். 'சிவனுக்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை; சித்தியாருக்கு மிஞ்சிய சாத்திரமும் இல்லை' என்று ஒரு சொல் வழக்குண்டு.

'அவன்' என்றும் 'அவள்' என்றும் 'அது' என்றும் நாம் கூறும் வேறுபாடுகளையுடைய இந்தப் பிரபஞ்சத் தொகுதி, தோற்றம், இருப்பு, மறைதல் என்ற நியதிக்கு உட்படும் இயல்புடையது; ஆதலால் இதனைத் தருபவன் ஒருவன் வேண்டும்; அவனே இறைவன் என்று கூறி இறையுண்மையை நிறுவும் பாங்கு சிறப்பானது.

*ஒருவனோ டொருத்தி ஒன்றென் றுரைத்திடும் உலகம் எல்லாம்*
*வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே*
*தருபவன் ஒருவன் வேணடும் தான்முதல் ஈறும் ஆகி*
*மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே.*

இப்பாடல் சிவஞானபோதம் முதலாம் சூத்திரத்தை விளக்குவதாக உள்ளது. இத்தகைய விளக்கங்கள் பலகொண்ட சிறந்த சைவசித்தாந்த தத்துவ நூல் சிவஞான சித்தியார்.

சிவஞான சித்தியாரின் ஆசிரியர் பெயர் அருணந்தி சிவம். இவர் மெய்கண்டாரின் தந்தைக்குக் குருவாக இருந்தவர். பின்னர் மெய்கண்டாரின் அருள்திறத்தையும் அறிவையும் கண்டு அவரைத் தன் குருவாகக் கொண்டவர். தமிழிலும் வடமொழியிலும் உள்ள சாத்திர நூல்களைக் கற்றுத் தெளிந்தவர் என்பதால் 'சகலாகம பண்டிதர்' என்று அழைக்கப்படுபவர்.

சிவஞான சித்தியாருக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். ஆயினும் ஆறு அறிஞர்கள் எழுதிய பழைய உரைகள், 'அறுவர் உரை' என்ற பெயரில் சிறந்த உரைகளாகக் கருதப்படுகின்றன.

## இருபா இருப.்.து

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் குறித்து குருவுக்கும் மாணாக்கருக்கும் இடையில் நடைபெறும் உரையாடல்போல் அமைந்தது இந்நூல். இதன் ஆசிரியர் அருணந்தி சிவாச்சாரியார். மெய்கண்டாரைக் குருவாகவும் தன்னை மாணாக்கராகவும் வைத்து எழுதப்பட்ட இந்நூல் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தருவது மட்டுமன்றி, குருவைப் போற்றிப் பணிவதாகவும் அமைந்துள்ளது.

ஆணவமலம் அனாதியாகவே உயிர்களுடன் சேர்ந்து உள்ளதென்பது சைவசித்தாந்தக் கருத்து. அது அறிவற்ற சடப்பொருள். அதனால் தானாக வந்து எம்மைச் சேரமாட்டாது. எமக்கு ஊறு செய்யும் ஒன்றை விரும்பி நாமாக அதனுடன் சேரமாட்டோம். மலத்தொடர்பில்லாத கருணைக் கடலான இறைவன் எமக்கு ஆணவத்தைச் சேர்க்க மாட்டான். ஆணவம் இயல்பாகவே உயிருடன் உள்ளது என்றால், அது உயிரை விட்டு

எப்படிப்போகும்? மயக்கத்தைத் தரும் இந்த ஆணவப் பிணிப்பு எப்படி வந்தது? இவற்றை அந்தமும் ஆதியும் அற்ற அருள் வடிவான குருவே விளக்கி அருள வேண்டும் என்று கேட்கிறார் இந்நூலின் ஆசிரியர்.

*............எம்மை வந்து அணைதரத்*
*தானோ மாட்டாது; யானோ செய்கிலன்;*
*நீயோ செய்யாய் நின்மலன் ஆயிட்டு;*
*இயல்புஎனின் போகாது என்றும் மயல்கெடப்*
*பந்தம் வந்த வாறு இங்கு*
*அந்தம் ஆதி இல்லாய் அருளே.*

இங்ஙனம் கேள்வி மூலம் சித்தாந்த விளக்கங்கள் பல இந்நூலில் தரப்பட்டுள்ளன.

வெண்பா ஆசிரியப்பா என்னும் இரு பாவகைகளால் மாறி மாறி அமைந்த இருபது பாடல்களைக் கொண்டது என்பதை இருபா இருப∴து என்ற பெயர் உணர்த்துகிறது.

## திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்

பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்களில் காலத்தால் முற்பட்டவை திருவுந்தியார் (கி.பி. 1147), திருக்களிற்றுப்படியார் (கி.பி. 1177) என்னும் இரு நூல்கள். திருவுந்தியாரை இயற்றியவர் 'திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார்' என்பவர். இவரின் மாணாக்கர் 'ஆளுடைய தேவநாயனார்' என்பவர். இவருக்கு மாணாக்கராக இருந்த 'திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார்' இயற்றியது திருக்களிற்றுப்படியார்.

மூன்று வரிகளைக் கொண்ட பாடல்களால் ஆனது திருவுந்தியார். உந்தி பறத்தல் என்பது பண்டைத் தமிழகத்தில் மகளிர் ஆடும் ஒருவகை விளையாட்டு. முதல் இருவரிகளை ஒருத்தி பாட, மூன்றாவது வரியை இன்னொருத்தி பாடி விளையாடுவார்கள். இங்கே 'உந்தீபற' என்பது 'உம் தீ பற' என்று பிரிக்கப்பட்டு, 'உம்முடைய தீமைகள் பறந்து போவதாக' என்று பொருள்படும். திருவாசகத்திலும் திருவுந்தியார் என்ற பகுதி இந்தப் பொருளில் அமைந்துள்ளது. பொதுவாக சிவனருள் பெறுதல், முத்தியடையும் வழி முதலியவை கூறப்படுகின்றன.

இறைவன் தன்னளவில் அருவமாக இருப்பவன். எல்லாவற்றையும் கடந்தவன். எவரும் அறிவதற்கு அரியனாய், அருவமாய் (அகளமாய்) இருப்பவன் உருவத்திருமேனி தாங்கி (சகளமாய்) வருகிறான். உயிர்களுக்குத் துணை புரிவதற்காகத் தானாக விரும்பி எடுத்த இந்த உருவில் குருவாக வந்து அருள் தருகின்றான். இதுபோன்ற பல செய்திகள் திருவுந்தியாரிலே வருகின்றன.

*அகளமாய் யாரும் அறிவு அரிது; அப்பொருள்*
*சகளமாய் வந்தது என்று உந்தீபற*
*தானாகத் தந்தது என்று உந்தீபற*

இக்கருத்தை விளக்குவதாகத் திருக்களிற்றுப்படியாரிலும் ஒரு பாடல் உள்ளது.

*அகளமய மாய்நின்ற அம்பலத்தெம் கூத்தன்*
*சகளமயம் போல்உலகில் தங்கி - நிகளமாம்*
*ஆணவ மூலமலம் அகல ஆண்டனன்காண்*
*மாணவக என்உடனாய் வந்து.*

திருவுந்தியாருக்கு உரை நூல்போல் அமைந்தது திருக்களிற்றுப் படியார். உயிர்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் நின்று இறைவன் அருளுகிறான் என்பதை இந்நூலின் முதற்பாடல் குறிக்கிறது. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மட்டுமன்றி, திருமுறைகளில் உள்ள சொற்களுக்கு ஏற்ற பொருள்களும், கண்ணப்பர், சண்டீசுரர், சமய குரவர் போன்ற அருளாளர்களின் வரலாற்றுக் குறிப்புக்கள், அருட் செயல்கள் போன்றவையும் இந்நூலில் குறிப்பிடப்படுகின்றன.

## உண்மை விளக்கம்

சைவ சித்தாந்த சாத்திர நூல்களைப் படிக்க விரும்புபவர்கள் முதலில் படிக்க வேண்டிய நூல் உண்மை விளக்கம். சித்தாந்தம் கூறும் முப்பத்தாறு தத்துவங்கள், உயிர், அதனைப் பற்றிய ஆணவம், வினை, சிவனின் திருநடனம், திருவைந்தெழுத்து, முத்திநிலை போன்ற அரிய கருத்துக்களைச் சுருக்கமாக எடுத்துக் கூறும் சிறந்த நூல் இது.

சைவத்தில் சிவபெருமானின் நடனம் தத்துவங்கள் பலவற்றை விளக்குவது. அத்துடன் சிறந்த கலை ஆக்கமாகவும் விஞ்ஞான விளக்கமாகவும் அமைந்தது ஆடும் கூத்தனின் அழகு வடிவம் என்று ஈழத்துக் கலாயோகி ஆனந்தா குமாரசுவாமி தனது புகழ்பெற்ற 'சிவனின் திருநடனம்' (Dance of Siva) என்னும் நூலிலே குறிப்பிடுகிறார். அவரின் கூற்றுக்கு ஆதாரமாக உண்மை விளக்கம் நூலிலுள்ள பாடலையே தருகிறார்.

*தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா*
*ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதம்முத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு.*

உடுக்கு (துடி) ஏந்திய கை படைத்தலையும் அபயம் என அமைந்த கை காத்தலையும் நெருப்பை (அங்கியை) ஏந்திய கை அழித்தலையும் (சங்காரத்தையும்), ஊன்றிய திருவடி திரோதானம் என்னும் மறைத்தலையும், தூக்கிய திருவடி முத்தி கிடைக்க அருளலையும் உணர்த்துவனவாக உள்ளன. இறைவனின் ஐந்தொழிலை உணர்த்துவதாக உள்ள இப்பாடல் போன்று மற்றைய பாடல்களும் பல அரிய கருத்துக்களைத் தருகின்றன.

ஐம்பத்து நான்கு வெண்பாக்களாலான இந்நூல் *மனவாசகங்கடந்தார்* என்னும் ஞானியால் எழுதப்பட்டது. அவருக்கும் அவரின் குருவாகிய மெய்கண்டாருக்கும் இடையில் நடைபெறும் உரையாடல்போல் எழுதப்பட்டது *உண்மை விளக்கம்*. இதற்குப் பலர் உரை எழுதியுள்ளனர்.

# சைவ சித்தாந்த நூல்கள் (2)

## உமாபதி சிவாச்சாரியர்

சைவ நூல்கள் பல எழுதிய உமாபதி சிவாச்சாரியர் சிதம்பரத்தில் தில்லைவாழ் அந்தணர் மரபில் வந்தவர். வேதாகமங்களையும் சைவத் தமிழ் நூல்களையும் அறிந்த சிறந்த ஞானி அவர். யோகக் காட்சியில் நின்ற அருளாளர். இவர் ஒருநாள் பல்லக்கில் வரும்பொழுது, ஞானி ஒருவர் தன் மாணாக்கருக்கு இவரைச் சுட்டிக்காட்டி, 'பட்ட கட்டையில் பகல் குருடு போகிறது' என்று கூறுவதைக் கேட்டார். அந்த ஞானி அருணந்தி சிவத்தின் மாணாக்கரான மறைஞான சம்பந்தர் எனப்படுபவர். அவரைப் பார்த்ததும் உமாபதி சிவத்துக்குத் தற்பெருமையெல்லாம் நீங்கி, அவரின் அருள் திறமை புலப்பட்டது. குருவைக்காணும் பக்குவ நிலை வரப்பெற்ற உமாபதிசிவம் மறைஞானதேசிகரே தம் குருவாக வந்துள்ளார் என்பதை உணர்ந்தார்.

உமாபதி சிவத்தின் பக்குவ முதிர்ச்சியைச் சோதிக்க விரும்பிய மறைஞான சம்பந்தர், தாழ்ந்த குலத்துதித்த நெசவுத் தொழிலாளி ஒருவர் வீடு சென்று, கூழ் வாங்கிப் பருகினார். அவரின் கைவழி வழிந்த கூழை உமாபதி சிவம் உண்டு, அது தான் பெற்ற பேறு எனக்கருதி மகிழ்ந்தனர். இதனைக் கண்ட மறைஞான சம்பந்தர் உமாபதி சிவத்துக்கு சிவதீட்சை செய்து தன் மாணாக்கராகக் கொண்டார்.

இதனை அறிந்த தில்லைவாழ் அந்தணர், உமாபதி சிவத்தைத் தமது சாதியிலிருந்து நீக்கிக் கோயில் பூசை செய்யவும் தடை விதித்தனர். இதனால் உமாபதிசிவம் கொற்றவன்

குடி என்ற இடம் சென்று, ஒரு திருமடம் அமைத்துச் சிவ வழிபாடு செய்வாராயினார். இதனால் 'கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்' என்றும் அவர் அழைக்கப்படுவதுண்டு.

மெய்கணடாரும் அவர்வழி மாணாக்கரான அருணந்தி சிவம், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய நால்வரும் 'சந்தான குரவர்' எனப்படுவர். திருக்கைலையில் தட்சணா மூர்த்தியாக விளங்கும் பரமசிவத்திடம் வேதங்களையும் சிவாகமங்களையும் கேட்டறிந்தவர் திருநந்தி தேவர். அவரின் வழிவந்த மாணாக்கர் சனற்குமாரர், சத்தியஞானதர்சினி, பரஞ்சோதி என்பவர். இந்த நால்வரும் 'அகச்சந்தான குரவர்' எனப்படுவர். இதனால் மெய்கண்டார் வழிவந்தவர்களை 'புறச்சந்தான குரவர்' என்று கூறும் வழக்கமுண்டு. மெய்கண்டாருக்கு உபதேசம் செய்த பரஞ்சோதி முனிவர் அகச்சந்தான குரவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சைவசித்தாந்த நூல்களில் எட்டு நூல்கள் உமாபதி சிவத்தினால் எழுதப்பட்டன. இவை *சித்தாந்த அட்டகம்* எனப்படும். இந்த நூல்கள் பற்றி கீழே எழுதப்பட்டுள்ளது. இவை தவிர வேறு பல நூல்களும் தமிழிலும் வடமொழியிலும் எழுதியுள்ளார்.

## சிவப்பிரகாசம்

சிவஞானபோதத்துக்கு வழிநூல் *சிவஞானசித்தியார்* என்றும் சார்பு நூல் (புடை நூல்) *சிவப்பிரகாசம்* என்றும் கூறப்படும். விருத்தப் பாவினால் அமைந்த இந்நூல் பாயிரம், பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என்று மூன்று பகுதிகளைக் கொண்டது. சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் சிறந்த நூலான சிவப்பிரகாசம், சிவஞானசித்தியாருக்கும் சிவஞான

போதத்துக்கும் ஒரு முன்னுரையாக அமைந்து அவற்றின் கருத்துக்களைப் பிரதிபலிக்கிறது.

சிவப்பிரகாசத்துப் பாடல்கள் தரும் விளக்கங்கள் தனித்தன்மை உடையவை. இறைவன் அறிவிக்க அறிவதும் அவன் தருவதைக்கொண்டு நுகர்வதும் ஆன்மாவின் தன்மை. தானே எதனையும் அறியமாட்டாதாகையால் ஆன்மா தானாக அறிந்து இந்திரியங்களையும் பிற பொருள்களையும் கூடமாட்டாது. அவையும் அறிவற்ற சடப் பொருட்கள் என்பதால் ஆன்மாவைக் கூடமாட்டா. ஆகையால் இவற்றைக் கூட்டுவிக்கத் தானே முழுதுமறிந்த இறைவனாற்றான் முடியும் என்பது போன்ற விளக்கங்கள் பல உள்ளன.

*தனக்கென அறிவி லாதான் தான்இவை அறிந்து சாரான்*
*தனக்கென அறிவி லாத வாயில்தான் அறியா சாரா*
*தனக்கென அறிவி லாதான் தத்துவ வன்ன ரூபன்*
*தனக்கென அறிவா னால்இச் சகலமும் நுகரும் தானே.*

இந்நூலுக்கு மதுரைச் சிவப்பிரகாசரும் காஞ்சி சிதம்பர நாதமுனிவரும் எழுதிய பழைய உரைகள் உள்ளன. சிறந்த புத்துரை ஒன்று ஈழத்து மு. திருவிளங்கம் எழுதியுள்ளார்.

## திருவருட்பயன்

திருக்குறள்போல் குறட்பா வகையில் நூறுபாக்களைப் பத்து அதிகாரங்களாகக் கொண்டது திருவருட்பயன். முப்பொருள் விளக்கம், இறையருள், குருவருள், ஞானவழி, ஆன்மசுத்தி, முத்திநிலை, திருவைந்தெழுத்து போன்ற அரிய கருத்துக்களை உள்ளடக்கிய நூல் இது.

இறைவன், உயிர்கள், ஆணவம், கன்மம், மாயை ஆகிய ஐந்து பொருள்களை அனாதியானவை என்று கூறுதல் மரபு. திருவருட்பயனிலே, மாயையைச் சுத்தமாயை, அசுத்தமாயை என இரண்டாகப் பிரித்து, அனாதியாக உள்ளவை ஆறு பொருட்கள் என்று கூறப்படுகிறது. மாயை உண்மையில் ஒன்றுதான். ஆனால் அதன் செயற்பாட்டால் இரண்டாக உள்ளது. இதனை உணர்த்தும் திருவருட்பயன் ஆசிரியர் புதிய நோக்கில் பல கருத்துக்களை அணுகுகிறார்.

*ஏகன் அனேகன் இருள்கன்மம் மாயையிரண்டு*
*ஆகஇவை ஆறும் ஆதியில்.*

(ஏகன் - ஒருவனாகிய இறைவன்; அனேகன் - பலவாகிய உயிர்கள்; இருள் - ஆணவம்; கன்மம் - வினை; மாயையிரண்டு - சுத்தமாயையும் அசுத்தமாயையும்.)

இந்நூலுக்குள்ள பல உரைகளில் யாழ்ப்பாணத்து சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் எழுதிய சிறந்த உரையும் ஒன்று.

## வினாவெண்பா

தன் குருவை நோக்கிக் கேட்பதுபோல் இந்நூலை உமாபதி சிவம் எழுதியுள்ளார். பதின்மூன்று பாடல்களால் அமைந்த இச்சிறுநூலில், உயிரைப் பிரியாது இறையிருப்பது, திருவருளை அறியாது உயிர் இருப்பது, ஞான தரிசனம், உயிரின் அனுபவ நிலைகள், முத்தநிலை முதலியவை பற்றிய சந்தேகங்கள் எழுப்பப் படுகின்றன.

உயிர்கள் மூன்று வகையினராக உள்ளனர். ஆணவம், கன்மம் ஆகிய இரண்டு மலத்தை உடையவர் பிரளயாகலர் எனப்படுவர். இவர்களுக்கு மாயாமலம் இல்லாததால் உடம்பு இல்லை. ஆகையால் வினைப்பயனை இவர்கள் அனுபவிப்பது எப்படி? ஆணவமலம் ஒன்று மட்டும் உடையவர் விஞ்ஞானகலர் எனப்படுவர். இவருக்கு உதாரணமாக எவரைச் சொல்வது? ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலம் உள்ளவர் சகலர். இறைவனை அடைய முடியாத ஒருநிலையில் இவர் உள்ளார். உயர்வுடைய மருதநகரில் இருக்கும் மறைஞான சம்பந்தக் குருவே, அப்படியென்றால், இந்த உயிர்கள் சிவனருள் பெறுவது எவ்வாறு? இதுபோன்ற வினாக்கள் பல வினா வெண்பாவிலே இடம் பெறுகின்றன.

*இருமலத்தார்க் கில்லையுடல் வினையென் செய்யும்*
*ஒருமலத்தார்க் காராய் உரைப்பேன் - திரிமலத்தார்*
*ஒன்றாக உள்ளார் உயர்மருதச் சம்பந்தா*
*அன்றாகில் ஆமாறு அருள்.*

## போற்றிப் ப:்.றொடை

இரு அடிகளாலான கண்ணிகள் நூறும் ஒரு வெண்பாவும் கொண்டு இறைவனைப் போற்றுவதாக அமைந்தது போற்றிப் ப:்.றொடை. இறைவன் உயிர்களுக்குச் செய்யும் பேருதவியை இந்நூல் கூறுகிறது. ஒரு வகையில் இது உமாபதிசிவத்தின் அருள் அனுபவத்தில் உதித்த நூல் என்று கூறலாம். உயிர் முதன்முதல் பிறப்புக்கு உட்பட்டது எப்படி என்ற கருத்து இதில் வருகிறது. மற்றைய நூல்களுக்கு இல்லாத தனிச்சிறப்பு இது.

அனாதியே ஆணவ மலத்தில் அழுந்தி இருந்த உயிருக்கு இறைவன், ஒளியற்ற குருடனுக்குக் கோல் கொடுத்து உதவுவது போல், முதல் முதலில் மாயையிலிருந்து நுண்ணுடம்பைக் கொடுக்கின்றான். இந்த நுண்ணுடம்பு (தனுகரணபுவனம்) பெற்று உயிர் இயங்கத் தொடங்கியதும் அதன் விருப்பு வெறுப்புக்கள் வெளிப்பட, அவை நல்வினை தீவினையாகிப் பருவுடம்பாலான பிறவி வருகிறது.

*கண்ணை மறைத்த கடியதொழில் ஆணவத்தால்*
*எண்ணும் செயல்மாண்ட எவ்வுயிர்க்கும் - உள்நாடிக்*
*கட்புலனால் காணார்தம் கைகொடுத்த கோலேபோல்*
*பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் - முற்பால்*
*தனுகரண மும்புவன போகமும் தந்தவற்றால்*
*மனம்முதலால் வந்த விகாரத்தால் - வினைஇரண்டும்*
*காட்டியத னால்பிறப்பு ஆக்கிக் கைக்கொண்டும்*
*மீட்டறிவு காட்டும் வினைபோற்றி.*

## கொடிக்கவி

நான்கு பாடல்களைக் கொண்ட சிறு நூல் கொடிக்கவி. சிதம்பரம் நடராசர் கோயில் கொடியேற்றத் திருவிழாவின்போது, அங்குள்ள அந்தணரால் கொடியை ஏற்ற முடியவில்லை. அப்பொழுது, உமாபதிசிவம் வந்தாற்றான் கொடி ஏறுமென்று ஓர் அசரீரி கேட்டது. இவர்களால் ஒதுக்கப்பட்டவர் உமாபதிசிவம். அவர் வந்து 'கொடிக்கவி' என்ற இப்பாடலைப் பாடியவுடன் கொடி தானாக ஏறியது என்பது வரலாறு. பரம்பொருளின் அருளையும் ஆற்றலையும் உணர்த்துவது இந்நூல்.

இறைவனின் தன்மையை வாக்காலும் மனத்தாலும் உணர முடியாது. பாசஞானம், பசுஞானம் ஆகியவை வேறு, பதிஞானம் வேறு என்று பிரித்தறிந்து, பதிஞானத்தால் காணும் ஞானிகளுடன் கூடியிருந்து அறியலாம். இதனைத் தெளிவுபடுத்தும் அருள் வேண்டி இக்கொடி கட்டப்பட்டது. இக்கருத்துள்ள கொடிக்கவிப் பாடல் அவன் அருளன்றி எதுவும் ஆகாது என்று உணர்த்துகிறது.

*வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்*
*தாக்கா உணர்வரிய தன்மையனை - நோக்கிப்*
*பிறித்தறிவு தம்மில் பிரியாமை தானே*
*குறிக்குமருள் நல்கக் கொடி.*

## நெஞ்சு விடு தூது

தன் குருவான மறைஞானசம்பந்தரைச் சிவபெருமானாகக் கருதி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இறைவனை எண்குணத்தான் என்று குறிப்பிடுகிறது. பிற சமயக் கொள்கையாளரை அணுக வேண்டாம் என்பது போன்ற கருத்துக்களும் வருகின்றன. இறையருளின் பெருமை பேசப்படுகிறது.

இறைவன் எட்டுக்குணங்களை உடையவன், 'எண்குணத்தான்' என்ற கருத்து திருக்குறளிலே வருகிறது. நெஞ்சுவிடுதூதிலும் அவனுக்கு இயல்பான குணங்கள் எட்டு என்று குறிப்பிடுகிறார்.

*......என் பிறவி ஈர்த்தான் - விறல்சொல்லுக்கு*
*எட்டானை, யார்க்கும் எழுதி இயல்குணங்கள்*
*எட்டானை.........*

## சங்கற்ப நிராகரணம்

சிவஞானசித்தியாரின் பரபக்கம் போன்றது சங்கற்ப நிராகரணம் என்னும் நூல். சைவத்திற்குப் புறம்பான கொள்கைகளையும் அவற்றின் மறுப்பையும் கூறுகிறது. சைவ சித்தாந்தக்கொள்கையில் தெளிவு ஏற்பட இந்நூல் துணைபுரிகிறது.

வேதத்தைப் பிரமாணமாகக் காட்டிப் பிரமம் ஒன்றே உண்மைப்பொருள் என்று மாயாவாதிகள் என்போர் கூறுவர். ஆனால் வேதத்தில் சீவன், பரம் என்று இரண்டாகவும் கூறப்படுகிறது. அப்படி இருக்கையில் பிரமம் ஒன்றே உள்பொருள் என்று கூறுவது நன்றல்ல என்று விளக்கி அவர்கள் கூற்று நிராகரிக்கப்படுகிறது.

*உரைதரு பிரமம் ஒன்றெனும் உரைக்கண்*
*வருபிர மாணம் மறைஎனில் அருமறை*
*ஒன்றென் றதன்றி இருபொருள் உரைத்தல்*
*நன்றன்று.....*

இதுபோல பிறகொள்கைகள் பல மறுக்கப்படுகின்றன.

## உண்மை நெறி விளக்கம்

ஆன்மாவின் வளர்ச்சியில் அடையும் அருள் அனுபவ நிலைகளைப் பல படிகளாக ஞானிகள் எடுத்துரைத்துள்ளனர். பத்துப்படிகளாக அமைத்துக் கூறுவது தசகாரியம் எனப்படும். 'பத்துக் கொலாம் அடியார் செய்கை தானே' என்பது அப்பர் திருவாக்கு. தசகாரியத்தை விளக்குவதாக அமைந்தது உண்மை நெறி விளக்கம். இதில் ஆறு பாடல்கள் உள்ளன.

## பிற நூல்கள்

மேற்கூறப்பட்ட பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்களும் சைவ சித்தாந்த தத்துவத்தை விளக்கும் ஆணை நூல்களாக (authoritative works) கொள்ளப்படுவன. இவை தவிர திருமுறைகளும் வேறு பல நூல்களும் சித்தாந்த தத்துவத்தை விளக்குவனவாக உள்ளன. சங்க நூல்கள், திருக்குறள் போன்ற பழந்தமிழ் நூல்களிலும் அபிராமி அந்தாதி, அருணகிரிநாதர் போன்றவரின் நூல்கள் ஆகியவற்றிலும் சித்தாந்தக் கருத்துக்கள் பலவுள.

மெய்கண்ட சாத்திரங்களுக்குமுன் வந்த ஞானாமிர்தம் என்னும் நூல் ஒரு சிறந்த சித்தாந்த நூல். இது வாகீச முனிவர் என்பவரால் எழுதப்பட்டது. துகளறு போதம் என்னும் நூல் அருள் அனுபவத்தைப் பல படிகளில் கூறி சித்தாந்த விளக்கம் தருவது. இதுவும் ஒழிவிலொடுக்கம் என்னும் நூலும் மெய்கண்ட சாத்திரங்களுக்குக் காலத்தால் பிற்பட்ட சிறந்த நூல்கள். இவற்றின் ஆசிரியர்கள் முறையே சிற்றம்பலநாடிகள், சீர்காழிக் கண்ணுடைய வள்ளல் என்னும் ஞானிகளாவர். இவை தவிர, தத்துவப் பிரகாசம், சிவநெறிப் பிரகாசம், சைவசமய நெறி, சிவதருமோத்திரம், தத்துவரத்தினாகாரம் என்று பல நூல்கள் உள்ளன. சைவ ஆதீனங்களைச் சேர்ந்த ஞானிகளால் அருள் அனுபவம் குறித்து எழுதப்பட்ட அருமையான நூல்கள் பல பண்டார சாத்திரங்கள் என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

*தத்து வந்தலை கண்டறி வாரிலைத்*
*தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்*
*தத்து வந்தலை நின்றவர்க் கல்லது*
*தத்து வன்அலன் தண்புக லூரனே.*

- அப்பர் அடிகள்

சைவத்தை அறியுங்கள் என்னும் தலைப்பில் வெளிவரும் இந்நூலில் அரிய பல செய்திகள் உள்ளன. இதன் ஆசிரியர் திரு.க.கணேசலிங்கம் அவர்கள் நமது பயிற்சி மையத்தில் மூன்றாண்டுகள் பயின்று 'சித்தாந்த ரத்தினம்' என்னும் பட்டம் பெற்றவர். எதையும் கூர்ந்து நோக்கி ஆய்வு செய்யும் சிறந்த அறிஞர் அவர்.......

ஆசிரியர் இந்நூலை அமைத்திருக்கும் முறை நன்றாக உள்ளது. சைவ சமயத்தவர் தம் சமயத்தை அறிய உதவுவதோடு, அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளையும் உணர்த்துகிறது.......

மிக அருமையான நூல். அனைத்துச் சைவர்களின் வீட்டு நூலகங்களிலும் கொலு வீற்றிருக்கத்தக்க பெருமைக்குரிய நூல்.

- கு. வைத்தியநாதன்
இயக்குனர், திருவாவடுதுறை ஆதீனம்
சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்